Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර්

ஜூன். 13 - 19, 2004

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 566




## விபூதியின் மகிமை

சதா சர்வ காலமும் விபூதியை உடல் முழுவதும் அணிந்துகொண்டிருக்கும் வாமதேவர் என்ற தவயோகி, தவம் இயற்ற இடம் தேடிக் காட்டிற்குச் சென்றார். அப்போது, அரக்கன் ஒருவன் அவரைத் தடுத்து, இறுக்கித் தழுவி அச்சுறுத்தினான். அவ்வேளை முனிவரின் சரீரத்தில் பூசியிருந்த விபூதி, அரக்கன் மீது பட்டதால் அவனின் கோர உருவம் நீங்கி அழகிய தேவரூபமாக மாறியது. உருமாறிய அரக்கன் பெருமகிழ்ச்சியோடு முனிவரை வணங்கினான். "என்னை நீ கட்டிப் பிடித்தபோது என் மேல் பூசியிருந்த திருநீறு உன் மேல் பட்டதால் உன் பாவங்கள் எல்லாம் நீங்கின. அதனால் உன் அரக்க உருவமும் நீங்கியது" என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். விபூதி அணிவது அவ்வளவு மகிமை வாய்ந்ததாகும்.

*தி. குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.*

# ஆன்மீகம்



## இரட்சிப்பு என்றால் என்ன?

'இயேசு' என்ற பெயருக்கே 'இரட்சகர்' என்பதுதான் பொருள். கிறிஸ்து உலகத்தில் வந்துதித்த பிரதான நோக்கம் பாவிகளை இரட்சிக்க என்றே அறிவோம். அப்படியானால் பாவிகள் யார்? தேவனால் படைக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாம், தன் சுயசித்தத்தைத் துஷ்பிரயோகம் செய்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவி ஆகிவிட்டான். அவன் சந்ததியில் வந்த நாம் அனைவரும் பாவிகளே. நாம் பாவம் செய்வதினாலே பாவிகள் ஆகவில்லை. பாவத்தில் பிறந்ததினாலே பாவம் செய்கிறோம். வேதம், மனிதன் பாவி என்று கூறுகிறது மாத்திரமல்ல, பாவத்தின் சம்பளம் மரணம் அதாவது பாவத்தின் பலன் நரகம் என்றும் கூறுகிறது. ஆகவே, உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பாவத்தின் தண்டனையிலிருந்தும் விளைவுகளிலிருந்தும் இரட்சிக்கப்பட வேண்டியவனாக இருக்கிறான்.

*சு. பாலசந்திரன், கந்தப்பளை.*

## பெற்றோர்களை 'சீ' எனச் சொல்லாதீர்கள்

தாய், தந்தையைப் பிள்ளைகள் பேணி நடக்க வேண்டும். அல்லாஹ்வின் அருள் மறை இது பற்றி இவ்வாறு கூறுகிறது.

'உங்கள் பெற்றோரில் ஒருவரோ இருவரோ முதுமையடைந்து உங்களை அண்டி வாழ்ந்தால் அவர்களை வெறுப்பூட்டும்படி "சீ" எனச் சொல்லாதீர்கள்' என்று.

அல்குர் ஆன் 17:23

இறை மறை இவ்வாறு கூறுவதேன்? தாய் தன் மழலையைப் பத்து மாதம் தனது வயிற்றில் சுமந்து, தனக்கு வாழ்வா மரணமா என்ற போராட்டத்திற்கு மத்தியில் குழந்தையைப் பெற்றெடுத்து, அக் குழந்தைக்குத் தன் உதிரத்தையே பாலாக்கி ஊட்டவில்லையா?

தந்தையோ மழை, வெய்யில் பாராது தான் கஷ்டப்பட்டு, வியர்வை சித்தி உழைத்த பணத்தை, தனது மைந்தனின் நல்வாழ்வுக்காகப் பூரண திருப்தியோடு அதனை அர்ப்பணிக்கவில்லையா? அதனால்தான். ஆகவே, பிள்ளைகளே! பெற்றோர்களை "சீ" எனச் சொல்லாதீர்கள்.

*எம். சி. கலீல், கல்முனை – 05.*

### பரிசுக்குரிய கவிதை

#### எப்போ வரும் ஜீவகாருண்யம்!

ஜீவகாருண்யம் எது – என்று
மூட மானிடர் செவிகளில்
இடித்திட வந்ததோ – இந்த
அரிய புகைப்படம்?

கே.எஸ். கயிலாயநாதன்,
வேப்பன் குளம்,
வவுனியா.

### கவிதைப் போட்டி இல: 563



இடம் உள்ள வரை இடம்
பிடித்துள்ள
வியக்க வைத்த கவிதைகள்

#### செல்லம்

நாங்கள் அப்பாச் செல்லம் அம்மாச் செல்லம்
என்றெல்லாம் இல்லை.
ஏனென்றால் எங்களுக்கு அவர்களுமில்லை.
எனக்கு நாய்தான் செல்லம்.
நாய்க்கு நான்தான் செல்லம்.

– றெ.பி. மரியடினேசன்,
நானாட்டான்.

#### நல்ல பாடம்

ஐயறிவு மிருகமும்
பகுத்தறிவுப் பாப்பாவும்
பாசவுணர்வை இங்கே
பகிர்ந்து கொள்ளும்
காட்சி
நன்றிகெட்ட
மனிதனுக்கு
நல்ல பாடமே.

– எம்.சி. கலீல்,
72, ஹனிபா வீதி,
கல்முனை – 05.

#### பாடை மட்டும்

நெஞ்சங் கொண்ட
நேயம் இடையில்,
உதறியதால் – இந்த
"மலரான" மனிதம்
நன்றி கொண்ட – நாயை
நேசிக்க ஆரம்பித்திட்டாரோ
பாடை மட்டும்
பாசம் தருமென்று!

– ஆ. ஞானகுரு,
இல. 44, நிக்காவத்தை
இல்லம்,
வினித்தகம,
பதுளை.

#### வாக்குக்காக...

யாரை எதிர்பார்த்து
காத்து நிற்கிறாய்
நம் தலைவர்களையா?
அவர்கள் கட்டாயம்
உன் வீட்டுக்கு வருவார்கள்
அடுத்த தேர்தலுக்கு
திகதி அறிவித்தால் மட்டும்!

– த. நகுலேஸ்வரன்,
சிவாநந்தா
தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

#### வாழ்க நீ...

நாயாய்க் கூட
மனிதனை மதிக்காத
உலகில்
மனித நேயத்தை
நாயில் காட்டுகிறாயே!
வாழ்க நீ...

– எம்.ஐ. அஸீஸ்,
செம்மண்ணோடை.

#### நேசம் வை!

அன்புக்கென்ன உயர்திணை
ஆசைக்கென்ன அஃறிணை
இன்பம் கொள்வது மனநிலை
இரக்கப்படுவதில் பற்றுவை!

– செ. ஞானராசா,
கீரிசுட்டான்,
பாலம்பிட்டி, மடுக்கோவில்.

#### அடைக்கலம்

இல்லையென்ற மாந்தர்
இருக்கும் இவ்வுலகில்
தொல்லையென்று ஒதுக்காமல்
ஜீவகாருண்யம் புரிவோனே
மனிதமின்னும் மரணிக்கவில்லை என்ற
மாட்சிமை தோன்றுதடா;
புது நம்பிக்கை பிறக்குதடா!

– பெ. விக்னேஸ்வரன்,
இல. 8, டன்பார் வீதி,
ஹட்டன்.

### கவிதைப் போட்டி இல: 566



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 19.06.2004

கவிதைப் போட்டி இல. 566
தினமுரசு வாரமலர், தபெ இல – 1772,
கொழும்பு.

#### மழலைகள்

"உறவுகளால் உதறப்பட்டு
ஓலமிட்ட நன்றியினத்தை
தன் மடி கொண்டு
தம்முறவு தேடும்
மழலைகள்!"

– தி. பத்மசுதன்,
செட்டிபாளையம் தெற்கு,
மட்டக்களப்பு.

#### நடுத் தெருவில்

அன்னையை இழந்தாய்
அரவணைப்பை
இழந்தாய்
அன்பை இழந்தாய்
ஆதரவை இழந்தாய்
அனைத்தையும் இழந்து
நாய்க்குட்டியோடு
நடுத் தெருவில்
இன்று...!

– க. சிவானந்தம்,
பூமரத்தடிச் சேனை,
ஈச்சிலம்பற்று,
மூதூர்.

#### உண்மையில்...!

உன்னை அரவணைக்க
உறவுகள் மறந்தபோதும்...!
உறுதியாய் நின்று
உனக்குள் ஒருமிக்கு
உறைவிடம்
கொடுத்தாயோ?
உண்மையில் நீதான்
உணர்வுள்ள ஓர் உயிர்...!

– க. நிஷாந்தன்,
இல. 03, ரதல்ல
சோட் கட்,
நானு ஓயா.

# உங்கள் பக்கம்

## அடிப்படை வசதி இன்றி மாணவர்கள் பரிதவிப்பு

கிண்ணியா பிரதேசத்தில் அமைந்துள்ள தி/அல் அதான் வித்தியாலயம் எனும் பாடசாலை 1992.04.20ஆம் திகதி 146 மாணவ, மாணவிகளைக் கொண்டு ஒரு கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இப் பாடசாலை 850 மாணவ, மாணவிகளுடன் நடாத்தப்பட்டு வரும் நிலையில், இங்கு பல குறைபாடுகளும் உள்ளன. அதாவது அடிப்படை வசதிகள் இங்கு இல்லை. முக்கியமாக குடிநீர்ப் பிரச்சினை, மலசலகூடம், தளபாடப் பற்றாக்குறை, சுற்றுமதில், ஆசிரியர் பற்றாக்குறை எனப் பல குறைகள் அன்றிலிருந்து இன்று வரைக்கும் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டு வருகின்றது. இதனால் மாணவ, மாணவிகள் பெரும் அவலத்திற்கு மத்தியில் இங்கு கல்வி பயின்று வருகின்றனர்.

இப் பாடசாலையில் குடிநீர் இல்லாத காரணத்தினால் மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று நீரருந்தும் துர்ப்பாக்கிய நிலையும், 600 மாணவ, மாணவிகள் இருப்பதற்குத் தளபாடம் இன்றித் தரையிலிருந்து கல்வி கற்கும் நிலையும் காணப்படுவதோடு, அதிபர், ஆசிரியர்களுக்கும் தளபாடங்களும் போதாத நிலையுள்ளது. அதனால் அவர்களும் நின்று கல்வி கற்பிக்கும் அவலமுண்டு. அத்தோடு சுற்றுமதில் இல்லாத காரணத்தினால் இருக்கின்ற கொஞ்ச நஞ்சத் தளபாடங்களும் களவாடப்படுகின்ற நிலை சகிக்க முடியாத ஒன்று. இப் பாடசாலையைச் சுற்றி மைதானம் இருப்பது சிறப்பம்சமாகும். அப்படியிருந்தும் உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரில்லை. ஆளணிப்படி இப் பாடசாலையில் 30 ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆனால், இங்கு 23 ஆசிரியர்கள்தான் கடமையில் உள்ளனர். எனவே, இங்கு கற்கும் மாணவ, மாணவிகளின் நலன் கருதி இதற்கான பொறுப்பதிகாரிகள் இப் பாடசாலையின் அவல நிலையைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும்படி பணிவுடன் வேண்டுகிறோம்.

*இவ்வண்ணம்*
*ஜே. பிரோஸ்கான்,*
*கிண்ணியா – 03.*

### மனதுக்குத் திருப்தி தரும் தினமுரசே!

வியாழன் தோறும் இல்லம்
வந்தடையும் இல்லத்தரசே!
திறமைகள்
இருந்தும் வெளிக்காட்ட முடியாமல்
இலை மறை காய்களாய் இருக்கும்
எங்களுக்கு உன் வருகையினால்
மனம் திருப்தி கிடைக்கின்றது.
எங்கள் ஆக்கங்களையும் ஏந்தி
வரும் என் அன்பு முரசே!
அழகிய முகவுரையைக் கொண்டு
அறிவுடைய விடயங்களை
உட்கொண்டு சிந்திக்கவும்
சிரிக்கவும் வைக்கும் உன்
வரவைப் பார்த்து வழி மேல்
விழி வைத்துப் பார்த்துக்
கொண்டு உன்னை
நினைத்தபடியே என்
வாழ்க்கை நகர்கிறது.

– பீ. சதீஸ்வரன்,
தாண்டியடி.

# வாசக(ர்) சாலை

### கலக்கும் 'X'ரே ரிப்போர்ட்

முரசு இதழ் 563 கண்டேன். இதயம் நெகிழ்ந்தேன். இனிய அம்சங்கள் இரசிக்க வைத்தன. அரசியல் அலசலில் "எக்ஸ்ரே ரிப்போர்ட்" இந்திய அரசியலை ஆய்வு நடத்தியது. மற்றைய அம்சங்களும் ஜோர். முரசு பத்து வருடத்தைக் கடந்து 11ஆவது ஆண்டை நெருங்குவதை இட்டு மனமகிழ்வுடன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

– நாக.மகேந்திரலிங்கம்,
தென்கோப்பாய்.

### பல்கலைக்கழகம்

குழந்தை பிறந்தவுடனே ஏன் அழ வேண்டும்? விபரம் புரியாத விடயமாகவே இது இருந்தது. ஆனாலும் குடும்பப் பத்திரிகையான முரசு அதன் 563ஆவது இதழில் லேடீஸ் ஸ்பெஷல் செய்தியாக இதன் முழு விபரத்தையும் வழங்கியது.

முரசை வாரந்தோறும் வாசகர்கள் படிக்க வேண்டும். அதன் உள்ளடக்கத் தகவல்களை உள்ளத்தில் பதிக்க வேண்டும். முரசு மொத்தத்தில் ஓர் பல்கலைக்கழகம். இதன் சேவை எமக்குத் தேவை.

– எம்.சி. கலீல்,
72, ஹனிபா வீதி,
கல்முனை – 05.




### தினமுரசு வாரமலரே!

563ஆவது இதழில் நீ வழங்கிய 'அபூ கிரைப்ஸ் சிறையில் நடந்தது என்ன?' என்ற கட்டுரை அமெரிக்காவின் அடாவடித்தனத்தின் விளைவுகளை விபரித்தது.

– ஏ.எம்.
இப்திகார்,
உமாராமன்ஸில்,
246, கற்பிட்டி
வீதி,
ஏத்தாலை.

### என் இனிய முரசே!

ஒவ்வொரு வாரமும் எங்களின் கைகளில் இதமாகத் தவழ்ந்து வரும் தினமுரசே! நீ எங்களுக்குச் சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அவற்றில் சிந்தியா பதில்கள், தகவல் பெட்டி, ஜெயில் டயரி, மாஜிக் தந்திரங்கள், தேன் கிண்ணம் என்பவற்றைக் குறிப்பிடலாம். உன் சேவை தொடர்ந்து எங்களுக்கு வேண்டும். அதற்காக எனது பலகோடி வாழ்த்துக்கள்.

– எம்.ஸீ. முஹம்மட் பாரிஸ்,
அரசடித் தோட்டம்,
நிந்தவூர் – 22.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் – உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
தபெ.இல: – 1772, கொழும்பு.
தொலைபேசி: 4514282
தொலை நகல் (Fax): 4513266
ஈ – மெயில்: (E-mail):
murasu@sltnet.lk

# இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க
# புலிகள் எடுக்கும் முயற்சி பலிக்குமா?

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஊடாக இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்து இந்தியாவை இனப் பிரச்சினைத் தீர்வில் தலையிட வைப்பதற்கும் இந்தியாவுக்கும் புலிகளுக்குமிடையில் நல்லுறவைக் கட்டி வளர்ப்பதற்கும் புலிகள் எடுக்கவிருக்கும் முயற்சி என்றுமே பலிக்கப் போவதில்லை என்று அரசியல் விமர்சகரான ரொஷான் எதிரிசிங்க தெரிவித்தார். கடந்த ஐந்தாம் திகதி வன்னியில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களுடன் புலிகளின் முக்கியஸ்தர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன. இதற்கென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் அறுவர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆகஸ்ட் மாதத்தில் இக் குழு தமிழகம் சென்று, தமிழகத்திலுள்ள கட்சிகளுடன் கலந்துரையாடி, அதனூடாக இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மத்தியில் ஆட்சியமைத்துள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க. போன்ற கட்சிகள் அங்கம் வகிப்பதால் அவற்றினூடாக இந்த அழுத்தத்தை மேற்கொள்ளப் புலிகள் முயற்சியெடுத்துள்ளனர்.

இந்தியப் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி அப்துல் கலாம் இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்குமென்று குறிப்பிட்டபோதிலும் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் ஆகியவை பாதிக்கப்படாதவாறு அங்குள்ள தமிழ் மக்களினதும் மதச் சிறுபான்மையினரதும் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். எனவே இந்தியா, இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடப் போவதில்லை என்றும் அவர் சொன்னார். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. கூட்டணிக்கு நாற்பது எம்.பி.க்கள் உள்ளனரென்ற போதிலும், இவர்களில் எவருமே மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கமாட்டார்கள். தி.மு.க. புலிகளுக்குச் சார்பாக அழுத்தம் கொடுக்காது. வழமை போல் மதில் மேல் பூனையாக இருந்துகொள்ளும். ஆறு எம்.பி.க்களைக் கொண்டுள்ள வைகோவின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் புலிச் சார்பு நிலைப்பாட்டினை எடுத்திருந்தாலும் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதில்லையென்று வைகோ ஏற்கெனவே திட்டவட்டமாக அறிவித்து விட்டார். "இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால், இந்தியாவில் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். ஆனால், தடையை நீக்குமாறு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க மாட்டேன்" என்று வைகோ கூறியிருந்தார். இந்தியா இலங்கையின் இனப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடப் போவதுமில்லை, புலிகள் மீதான தடையை நீக்கப் போவதுமில்லை என்பதை நன்கு தெரிந்துகொண்டே வைகோ இவ்வாறு கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல, உத்தேச இலங்கை - இந்தியக் கூட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான நகல் வரைபுகளை இரு நாடுகளுமே பரிமாறிக்கொண்டுள்ளன. புலிகள் தமக்கொரு அழுங்குப் பிடியாக இந்த ஒப்பந்தம் அமையுமென அஞ்சுகிறார்கள். புலனாய்வு, ஆயுதப் பயிற்சி, கடலோர ரோந்து ஆகியவற்றில் இரு நாடுகளுமே இணைந்து செயலாற்றப் போவதால் புலிகளுக்கு அது பெரும் சவாலாகவே அமையும் என்றும் அவர் சொன்னார். புலிகளின் இடைக்காலத் தீர்வு யோசனைகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற் பகுதிக் கட்டுப்பாடும் கோரப்படுவது இந்தியாவுக்கு எரிச்சலை ஊட்டியிருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக கடற்புலிகளின் செயற்பாடுகள் குறித்து இந்தியா அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது என்றார் ரொஷான் எதிரிசிங்க.

## திருமலை - மட்டக்களப்பு ஆயர் மறுப்பறிக்கை

'கருணா அணி விசு சுட்டுக் கொலை' என்ற தலைப்பில் கடந்த ஆறாம் திகதி தினமுரசில் வெளிவந்த செய்தி தொடர்பாக திருமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மறுப்பறிக்கையொன்றினை எமக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த மறுப்பறிக்கையைக் கீழே பிரசுரிக்கிறோம்.

அண்மைக் காலத்தில் சில ஊடகங்களில் புலிகள் - கருணா விவகாரத்தோடு என்னைத் தொடர்புபடுத்தி உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. மதத் தலைவர் என்ற வகையில் எம்மைச் சந்திக்க வரும் எல்லோரிடமும் வன்முறையையும் உயிர் அழிவுகளையும் தவிர்த்து சமாதானத்தை உறுதியோடு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும், இதுவே மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பு என்பதையும் வலியுறுத்தி வந்துள்ளோமேயன்றி, நாம் யாருக்கும் பக்கச் சார்பாகச் செயற்பட்டதில்லை. ஆனால், தவறான தகவல்களின் அடிப்படையில் சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, இது ஏதேனும் உள் நோக்கம் கொண்டதாக இருக்கலாம் என்ற ஐயத்தையும் தருகிறது.

மக்கள் மத்தியில் குழப்பத்தையும் எனது நற்பெயருக்குக் களங்கத்தையும் ஏற்படுத்த முனையும் இத்தகைய பொய்ப் பிரசாரங்களுக்கு எனது மறுப்பையும் எதிர்ப்பையும உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கிறிஸ்தவம் எப்போதும் அன்பையும், சமாதானத்தையும், சகோதரத்துவத்தையுமே வலியுறுத்தி வருகிறது. எனவே வன்முறை, உயிர் அழிவு போன்றவற்றைத் தவிர்த்து, பேச்சுவார்த்தை மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் வழி வகைகளைக் காண அனைவரும் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கருணா அணியினர் கோரிக்கை

கருணா அம்மானின் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்ட விசு மற்றும் கருணாவின் நிர்வாகப் பொறுப்பாளர் துரை, நிதிப் பொறுப்பாளர் திருமால், பிரதேச முக்கியஸ்தர் ஜிம் கெலி தாத்தா ஆகியோருக்கு என்ன நடந்ததென்று கண்டறிந்து தமக்குத் தெரியத் தருமாறு இவர்களின் உறவினர்கள், நண்பர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளனர். ஏப்ரல் 9ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதி வரை மட்டக்களப்பு - அம்பாறையிலுள்ள கருணா அம்மானின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வன்னிப் புலிகள் தாக்கிக் கைப்பற்றியிருந்தனர். அப்போது கருணா அணியோடு சேர்ந்து போராடிய இவர்கள் மட்டக்களப்பு - அம்பாறையை விட்டு வெளியேறவில்லை. கருணா அம்மான் தனக்கு நெருங்கிய சிலருடன் தப்பிச்சென்ற பின்னர், கிழக்கில் தங்கியிருந்த இவர்கள் முக்கியஸ்தரொருவரின் சமரச முயற்சியையடுத்து வன்னிப் புலிகளிடம் கையளிக்கப்பட்டனர். இவர்களின் நிலை குறித்து எவ்வித தகவலும் வெளிவராததால், நிலைமையைக் கண்டறிந்து தமக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கிடையில் முன்னர் திருமலை மாவட்டப் பொறுப்பாளராக இருந்த பதுமன் கருணாவுக்கும் பிரபாவுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதையடுத்து வன்னிக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் பற்றியும் எவ்வித தகவலும் வெளிவராத காரணத்தைக் கண்டறிந்து உதவுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 124 பிள்ளைகளை வடக்கில் காணவில்லை

வடபகுதியிலிருந்து கடந்த இரு மாதங்களில் 124 சிறுவர், சிறுமிகள் புலிகளால் ஆயுதப் பயிற்சிக்கெனக் கூட்டிச் செல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் அநேகமானோர் 14க்கும் 16க்கும் இடைப்பட்ட வயதுடையவர்களாவர் என்று ஐ.நா. சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) பேச்சாளர் ஜியோப்ரே கீல் தெரிவித்தார். எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே 124 பிள்ளைகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனரெனத் தெரியவருகிறது. ஆனால், உண்மையில் கடத்திச் செல்லப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கலாமென்றும் வவுனியா மாவட்டத்திலேயே அதிகமானோரைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனரென்றும் அவர் கூறினார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி திருமதி டிசா சின்போகா, "புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் சர்வதேச சட்டவிதிகளையும் மீறிச் சிறுவர்களைக் கடத்திச் செல்கின்றனர். இது குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எமக்கில்லை" என்று குறிப்பிட்டார்.

## கண்டனம்

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி இஸ்லாமிய முறைமைக்கு அப்பாற்பட்ட அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது என்றும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் முசலிப் பிராந்தியப் பட்டதாரிகள் ஒன்றியம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. இத்தகைய நிலை உருவாவதற்கு அடிப்படையாய் இருந்த எமது மக்கள் பிரதிநிதிகளின் நிதானமற்ற, நேர்மையற்ற போக்கினை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ச்செல்வனின் அராஜகம்

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவத்தினரால் முடியவில்லையென்றால், 'அங்கிருந்து வெளியேறுங்கள். நாம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டிக் காட்டுகிறோமென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பரமு தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார். கடந்த வாரம் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். இது குறித்து மட்டக்களப்புப் பத்திரிகையாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "சந்திக்குச் சந்தி ஆட்களை வெட்டியும் சுட்டும் வீதிகளில் வீசினால் அமைதி நிலவும்தான். ஆனால், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றுக்கு மதிப்புக் கொடுக்காத அராஜகவாதிகளாலேயே இது முடியும். தமிழ்ச்செல்வனின் கூற்றிலும் அந்த அராஜகம் தென்படுகிறது" என்று கூறினார்.

## நட்ட ஈட்டுக் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் வன்னிப் புலிகளுக்கும் கருணா அணிக்கும் ஏற்பட்ட மோதலின்போது தத்தமது கிராமங்களை விட்டு வெளியேறிய மக்கள் 13 நாட்களில் தமது சொந்த வாழ்விடங்களில் குடியேறினார்கள். இவர்களுக்கு நட்டஈடும் வழங்கப்பட்டது. ஆனால், 13 வருடங்களுக்கு முன் வட மாகாணத்திலிருந்து இரண்டு மணி நேர அவகாசத்துடன் புலிகளால் விரட்டப்பட்டுப் பல்வேறு இடங்களில் பரந்து வாழும் முஸ்லிம்களுக்கு இதுவரை நட்டஈடு கிடைக்கவில்லை. உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டுமென்று புத்தளத்திலிருந்து 'அல் ஷகீத்' என்ற இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளது.

## கம்பூச்சியாவில் கைதான புலி
### வன்னிக்குத் தப்பிச் சென்றார்

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்த இந்திய உயர் மட்டக் குழுவொன்று விரைவில் கொழும்பு வரவிருக்கும் இச் சந்தர்ப்பத்தில், கம்பூச்சியாவுடன் புலனாய்வு ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காகப் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ஹேரத் வார இறுதியில் கம்பூச்சியா செல்லவுள்ளார். புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளரான கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாபா, கம்பூச்சியத் தலைநகரான நொம்பென்னில் அலுவலகமொன்றினை நடத்துகின்ற சாட்டில் ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாரென்று கம்பூச்சியப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்திருந்தன. கம்பூச்சியாவின் துறைமுக நகரமொன்றில் சட்ட விரோதமாக ஆயுதக் கொள்வனவு செய்த மூன்று புலி இயக்க உறுப்பினர்கள் கடந்த நவம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவையடுத்துச் சிறைத் தண்டனை அநுபவித்து வருகின்றனர். கம்பூச்சியாவிலிருந்து சிறு ஆயுதங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள், எறிகணைகள் ஆகியவற்றைப் புலிகள் அண்மையில் கொள்வனவு செய்திருந்தார்களென்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

குமரன் பத்மநாபாவின் நெருங்கிய சகாவென்று நம்பப்படும் கௌசல்யன் சிவலிங்கம் அல்லது டேவிட் என்றழைக்கப்படும் நபரும் அவரது சகபாடியொருவரும் கடந்த அக்டோபரில் ஆயுதக் கடத்தல் குற்றச்சாட்டுகளின் பேரில் கம்பூச்சியாவில் கைதுசெய்யப்பட்டனர். மேற்கத்தைய புலனாய்வு வட்டாரங்கள் இதனை அம்பலப்படுத்தியதையடுத்து இவர்களைத் தடுத்து வைக்குமாறு முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கம்பூச்சியாவைக் கேட்டிருந்தது. எனினும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட டேவிட் கொழும்பில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு வன்னியைச் சென்றடைந்தார். இவரது சகபாடி போலியான இந்திய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இந்தியா சென்றாரென்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

## மலையகத்தை யுத்தகளமாக்க தீய சக்திகள் தீவிர முயற்சி

"மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் எதிராக இன ரீதியாக நடத்தப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கத் தவறினால், வடக்கு, கிழக்கைப் போல் மலையகமும் யுத்தகளமாக மாற்றப்பட்டுவிடும்" என்று மலையகப் பாதுகாப்பு அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. கந்தப்பளையில் பொலிஸாரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி இரு தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய மிருகத்தனமான தாக்குதல்களில் எட்டுப் பேர் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். புளத்சிங்களமில்லகந்த தோட்டத்துக்குள் புகுந்து பெரும்பான்மை இனக் காடையர்கள் நடத்திய தாக்குதல்களில் பல தோட்டத் தொழிலாளர்கள் காயமுற்றுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் 250 வீடுகளும் உடைமைகளும் அடித்து நொறுக்கப்பட்டதுடன், வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டதால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அநாதரவாகியுள்ளன. சேதங்களும் பாதிப்புகளும் ஏற்பட்ட பின்னர் வெறுமனே நட்டஈடுகளை வழங்குவதில் அர்த்தமில்லை. இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று மேற்படி அமைப்பைச் சேர்ந்த எஸ். லோறன்ஸ் தெரிவித்தார்.

பொலிஸாரினதும் இனவாதிகளினதும் அடாவடித்தனமான நடவடிக்கைகள், மலையகத்தை யுத்தகளமாக மாற்றச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சில மலையக அரசியல்வாதிகளுக்கே சாதகமாக அமையுமென்றும் அவர் சொன்னார். மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதை விடுத்து வன்னிக்கு அடிக்கடி சென்று ஆலோசனை பெற்றுவரும் மலையகத் தலைவர், மலையக இளைஞர்களுக்கு வன்னியில் பயிற்சிகள் வழங்க முனைந்துள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, இரு பக்க இனவாத சக்திகளும் மலையக மக்களைப் பகடைக்காய்களாக நினைக்கவும் பகடைக்காய்களாக நடத்தவும் அரசு இடமளிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார்.

## பாராளுமன்றத்தில் அமளிதுமளி! செங்கோல் திடீரென மாயம்!

பாராளுமன்றம் கடந்த எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை கூடியபோது பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. அதனையடுத்து சபைத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வேண்டுகோளை ஏற்று சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார பாராளுமன்றக் கூட்டத் தொடரை அடுத்த மாதம் இருபதாம் திகதி வரை ஒத்திவைத்தார். ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அக்மீமன தயானந்த தேரர் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்ய முற்பட்டபோது சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் எம்.பி. ஒருவர் கடத்தப்பட்டமை தொடர்பாகவும் அவரது இராஜினாமா தொடர்பாகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, இது தொடர்பாக நீதிமன்றத் தடையுத்தரவு இருப்பதால் தயானந்த தேரர் பதவிப் பிரமாணம் செய்ய முடியாது என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே ஆட்சேபனை கிளப்பினார். பதவிப் பிரமாணத்தைத் தாமதிக்குமாறும் கோரினார். அப்போது சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. இக் குழப்பத்தின்போது எம்.பி. ஒருவர் சபையில் இருந்த செங்கோலை எடுத்துச் சென்றுவிட்டார். செங்கோல் இல்லாமலேயே தயானந்த தேரர் பதவிப் பிரமாணம் செய்தார். பின்னர் படைக்கலச் சேவிதர் செங்கோலைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து உரிய இடத்தில் வைத்தார்.

தயானந்த தேரரின் பதவிப் பிரமாணம் செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி எம்.பி.க்கள் கோசமிட்டனர். இதற்கு சபாநாயகர் மறுப்புத் தெரிவித்தார். கூச்சல் குழப்பத்திற்கு மத்தியில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

## ஊடகவியலாளரின் இறுதி விலை மரணம்

"ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை, இலங்கையின் சமாதான முன்முயற்சிகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையே சுட்டி நிற்கிறது. இப்போது மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் உள் மோதல்களுக்கு இறுதி விலையைச் செலுத்த வேண்டிய நிலைக்கு ஊடகவியலாளர்களை முன்தள்ளக் கூடாது" என்று ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பின் தலைவர் கிறிஸ்தோப்பர் வாரென், பொதுக் காரியதரிசி அடன் வைற் ஆகியோர் கைச்சாத்திட்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் இந்த அமைப்பில் உலகளாவிய ரீதியில் ஐந்து இலட்சம் ஊடகவியலாளர் அங்கம் வகிக்கின்றனர்.

# முரசம்

## செம்மொழியாகும் தமிழ் மொழி

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

புதிய இந்திய அரசாங்கம் தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்தை வழங்குவதற்கான அறிவிப்பை தனது உத்தேச முன்னுரிமை வேலைத் திட்டத்தில் வெளிப்படுத்தியிருந்தமையானது தமிழர்களுக்குப் பெருமைக்குரிய விடயமாகும். உலகில் உள்ள பழம்பெரும் மொழிகளில் ஒன்றாக விளங்கிவரும் தமிழ் மொழி சுமார் 8 கோடி மக்களின் தாய் மொழியாக இன்று பேசப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டையே தாயகமாகக் கொண்டிருந்தாலும் தமிழ் மொழி உலகெங்கும் வியாபித்திருக்கின்றது. தமிழில் பழம்பெரும் காப்பியங்களும் இலக்கியங்களும் உலக இலக்கிய வளத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. திருக்குறள் போன்ற பெறுமதி வாய்ந்த படைப்புகள் உலகில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு சிலாகித்துப் பேசப்பட்டவை. தமிழ் மொழியின் தொன்மை இன்னும் சரியாகக் காலக் கணக்கிட முடியாத ஒன்றாகவே விளங்கி வருகின்றது. பழம்பெரும் நாகரீகங்களாகிய சிந்து வழி நாகரீகத்திலும் தமிழ் மொழியின் பாவனை காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் செழிப்புற்று விளங்கியதாகவும், பின்னர் கடற்கோளால் மறைந்து போனதாகவும் கருதப்படுகின்ற லெமூரியாக் கண்டம் தமிழை முதன்மை மொழியாகக் கொண்டிருந்ததாகத் தமிழ் அறிஞர்களால் கூறப்படுகின்றது. தமிழின் பக்தி இலக்கியமானது இன்னும் உலக இயக்கியவாதிகளால் அதிசயத்துடன் மிக மதிப்பளிக்கப்பட்டு நோக்கப்படுகிறது. காதல் இலக்கியத்துக்குப் பிரெஞ்சு மொழியைப் போற்றுவது போல் பக்தி இலக்கியத்திற்கு தமிழ் போற்றப்படுகின்றது. இத்தகைய தன்மைகள் நிறைந்த தமிழ் மொழிக்கு இதுகாறும் உரிய அந்தஸ்து வழங்கப்படாத மனக்குறை தமிழ் நெஞ்சங்களில் நிலவி வந்தது. இது குறித்து பல காலமாகத் தமிழ் அறிஞர்களால் இந்திய அரசாங்கத்துக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு வந்தது. ஆனால், இதுவரை எந்த அரசாங்கமும் இதையிட்டுச் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் தற்போதைய இந்திய அரசாங்கம் தமிழ் மொழியை கௌரவிக்க முன்வந்துள்ளதானது மெச்சத் தக்க ஒன்றாகும். தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்து வழங்கப்படுமென கடந்த 7ஆம் திகதி இந்தியப் பாராளுமன்றத்தில் தனது ஆரம்ப உரையை நிகழ்த்திய இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார். இந்திய ஜனாதிபதியின் இவ்வுரையானது புதிய இந்திய அரசாங்கத்தின் முன்னுரிமை வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்பட்டதொன்றாகும். இவ்வுரையில் தமிழ் மொழிக்கு மேலும் பெருமை சேர்த்த ஒரு விடயம் என்னவென்றால் அப்துல் கலாம் அவர்கள் இவ்வுரையின்போது தமிழில், தான் எழுதிய கவிதை ஒன்றை வாசித்தமையாகும். இதன் மூலம் அவர் தனக்குத் தமிழில் உள்ள பற்றையும் ஆர்வத்தையும் உலகறியச் செய்துள்ளார். இந்தியாவின் மாபெரும் அனு விஞ்ஞானியாகத் திகழ்ந்து இந்தியாவுக்குப் பல பெருமைகளை ஈட்டித் தந்து பின்னர் இந்திய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்துல் கலாம் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் இராமேஸ்வரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது அறிந்த விடயமே. இதுவும் தமிழர்களுக்குப் பெருமை தரும் ஒரு விடயமே. தொழில் ரீதியில் ஓர் அனு விஞ்ஞானியாகத் திகழ்ந்தாலும், தனது தாய் மொழியான தமிழை இறுதி வரை அவர் உயர்வாக மதிப்பதுடன், தமிழில் கவிதைகளையும் எழுதிவரும் ஓர் கவிஞனாகவும் விளங்குகிறார். அவர் வாயால் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து வழங்கப்படும் அறிவிப்பு வெளியானது சாலப் பொருத்தமானது. வாழ்க தமிழ்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஒரு தரப்பை மட்டும் திருப்தி செய்யும் போக்கில் சமுக நிலை சாத்தியமா?

கிழக்கில் நிலைமைகள் மோச மடைந்துள்ளன. இன்று சகல பத்திரிகைகளும் இதைத்தான் சொல்லுகின்றன. 'அந்த மோசம்' என்பதன் அர்த்தம் என்ன? மோசமடைந்துள்ளன என்றால் முன்னர் இருந்த நிலைமையை விடப் பாதகமாக ஆகியுள்ளதென்று சொல்வதாகிறது. அப்படியானால் தற்போதைய நிலைமையை விட முன்னர் ஏதோ சிறந்த நிலைமை நிலவியது என்ற ஒரு தோற்றப்பாட்டையும் இது மறைமுகமாக எடுத்துரைக்கிறது. அதுதான் எவ்வளவுக்கு உண்மை?

தற்போது தோன்றியுள்ள நிலைமையில் புதுமை என்ன? கொலைகளும், சட்ட விரோத நடவடிக்கைகளும், அச்ச சூழ்நிலையும், துப்பாக்கிதாரிகளின் பிரசன்னமும் இப்போது மட்டும் ஏற்பட்டுள்ள புதிய விடயம் அல்ல. தற்போது பத்திரிகையாளர் நடேசன் கிழக்கில் கொல்லப்பட்டுள்ளார். உண்மை! இது பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தலே. ஆனால், இத்தகைய சம்பவங்கள் இங்கே இதுதான் முதல் தடவையுமல்ல, இப்போதுதான் நிகழ்ந்துள்ள ஒன்றுமல்ல. இதே மட்டக்களப்பில் பழம் பெரும் மூத்த பத்திரிகையாளரும் இலக்கியவாதியுமான செழியன் பேரின்பநாயகம் சில வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டபோதும் இதே வகையான பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான அச்சுறுத்தல் விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஏனோ அவரது கொலை பற்றி எமது தமிழ்ப் பத்திரிகை உலகம் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. இந்த ஏனோ என்பதற்கு பின்னால் 'ஏன்' என்ற நிச்சயமான காரணமொன்று உறைந்துதான் இருக்கின்றது. இல்லையேல், நிமல்ராஜன் படுகொலைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கூட இவருக்கு இல்லாமல் போனதேன்? இத்தனைக்கும் தற்போது கொலையுண்ட நடேசன் மற்றும் அன்றைய நிமல்ராஜன் உட்பட கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களுக்குள் நீண்டகால அநுபவம் கொண்ட மூத்த பத்திரிகையாளர் செழியன் பேரின்பநாயம்தான்! ஆக, ஏதோ ஒருவகை அளவுகோல் ஒன்று எம் நாட்டுத் தமிழ்ப் பத்திரிகை

> **கிழக்கில் நிலைமைகள் மோச மடைந்துள்ளன. இன்று சகல பத்திரிகைகளும் இதைத்தான் சொல்லுகின்றன. 'அந்த மோசம்' என்பதன் அர்த்தம் என்ன? மோசமடைந்துள்ளன என்றால் முன்னர் இருந்த நிலைமையை விடப் பாதகமாக ஆகியுள்ளதென்று சொல்வதாகிறது. அப்படியானால் தற்போதைய நிலைமையை விட முன்னர் ஏதோ சிறந்த நிலைமை நிலவியது என்ற ஒரு தோற்றப்பாட்டையும் இது மறைமுகமாக எடுத்துரைக்கிறது. அதுதான் எவ்வளவுக்கு உண்மை?**

உலகத்தவரால் பாரபட்சமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவது தெரிகிறது.

இப் பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி ஒரு பத்திரிகை ஸ்தாபனமே கிழக்கில் சிலகாலத்துக்கு முன்னர் அடித்து மூடப்பட்டு, அதன் இயந்திரங்களெல்லாம் சுவீகரிக்கப்பட்டிருந்தது. "தினக்கதிர்" என்ற பத்திரிகை அது. ஆனால், எமது தமிழ் ஊடகங்கள் அது பற்றி எவ்வித எதிர்ப்புக் குரலும் காட்டவில்லை. "மோனச் சதி" என்பார்களே; அவ்விதம் மௌனித்திருந்தே, இத்தகைய ஒரு பாரிய பத்திரிகைச் சுதந்திரத்துக்கெதிரான வன்முறைக்குத் துணைபோனது எமது தமிழ்ப் பத்திரிகை உலகம்.

ஏன், தற்போது கொலையுண்ட நடேசன் முதற்கொண்டு கிழக்கு மாகாணப் பத்திரிகையாளர்கள் பலரும் இப் பத்திரிகையோடு தொடர்பிலிருந்து ஆக்கங்கள், செய்திகளை வழங்கி வந்தவர்கள். அவர்கள் எவருமே கூட இப் பத்திரிகை முடக்கப்பட்ட போது வாய் திறக்கவில்லை. இத்தனைக்கும் கிழக்கு மாகாணப் பத்திரிகையாளர் சங்கம் என்று ஒன்றும் அங்கு செயற்பட்டு வந்தது. அவர்களும் ஒரு கணதுடைப்புக்கு என்றாலும் குரல் கொடுக்கவில்லை. அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததைத் தெரியாதவர்கள் போலவே இருந்துவிட்டார்கள்.

விடயங்களை வெளிக் கொணரும் பத்திரிகைத் துறைக்கே இதுதான் இங்கு நிலவி வந்த கதி. பத்திரிகைகள் வெளிக் கொணரப்பட்ட விடயங்களை விட வெளிக் கொணரப்படாத விடயங்கள் தான் அதிக பாதகத்தைச் செய்கின்றன என்று அறிஞர் ஒருவர் கூறியிருந்தது இங்கு மிகப் பொருத்தமாக உள்ளது. இதேவேளை, இப் பத்திரிகைகள் வெளிக் கொணர்ந்தவை எவை என்று ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை எடுத்து ஒரு தடவை அலசிப் பார்த்தால், அவை ஒரு குறிப்பிட்ட வகையான தெரிவையே தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளன வென்பது தெளிவாகத் தெரியும். இத் தெரிவானது ஒரு குறிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து எவ்வித பிரச்சினையையும் எதிர்நோக்காத வகையில் அவர்களால் அமைக்கப்பட்டிருந்தமையையும் இதன் மூலம் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும். இத் தெரிவானது எவ்வளவு தூரம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டதென்றால், பத்திரிகை பொறுப்பு நிற்கக் கடமைப்படாத விளம்பரங்களில் கூடத் தெரிவை மேற்கொள்ளும் அளவுக்கும் சென்றது. குறிப்பாக மாற்றுக் கட்சிகளில் கொலையுண்டோர் பற்றிய அஞ்சலி விளம்பரங்கள் தொடர்பாக, வெளிநாடுகளிலிருந்து ரெலோ அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தமது மரித்த தலைவர் சிறீ சபாரத்தினத்தின் நினைவு நாளுக்கு அனுப்பிய அஞ்சலி விளம்பரங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தமை இதற்கு ஓர் உதாரணம்.

பத்திரிகைத் துறையில் நிலைமை இவ்வாறாகியிருக்கிறது. இது தற்போதுதான் ஏற்பட்ட நிலைமையல்ல. முன்னரும் நிலவி இப்போதும் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலைமையே. கிழக்கில் பத்திரிகையாளர் நடேசன் இப்போது கொல்லப்பட்டிருப்பது பத்திரிகைத் துறைக்கு ஓர் அச்சுறுத்தலேயெனினும் அதுவொன்றும் புதிய அச்சுறுத்தலல்ல.

பத்திரிகையாளர்கள் பற்றிய கரிசனை அத்தியாவசியமான ஒன்றே; அதேவேளை பத்திரிகையாளர் மட்டுமன்றி அனைவரும் அக்கறைக்குரியவர்களே. கிழக்கில் அச்சுறுத்தல் பத்திரிகையாளர்களுக்கு மட்டும் நிலவவில்லை. யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் கூட இங்கே பல அரசியற் படுகொலைகள் நிகழ்ந்த வண்ணமே இருந்து வருகின்றன. உண்மையில் யுத்த நிறுத்த காலத்தில் அதிகூடிய படுகொலைகள் இடம்பெற்ற பிரதேசம் கிழக்கு மாகாணமாகவே திகழ்கிறது. இது தற்போது புதிதாக ஏற்பட்டுள்ள நிலைமையல்ல. ஆனால், இப் படுகொலைகள் குறித்து எவ்வித கரிசனையும் இதுவரை இங்கே காட்டப்படவில்லை. யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் இப் பகுதியில் செயற்பட்டு வருகின்றபோதிலும், அவர்கள் இவ்வாறான கொலைகள் எவற்றுக்காவது ஒரு ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுத்ததாக இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்த மீறலென்பது புலிகளுக்கும் படைகளுக்கும் இடையிலான மீறல்கள் மட்டுமே என்பதாக நடந்துகொண்டார்களே தவிர, சமூகத்தில் நிகழும் இத்தகைய பயங்கரங்களை அந்த வகையில் அடையாளம் கண்டுகொள்ளக் கூட முன்வரவில்லை.

ஆயினும், தற்போது ஏற்பட்டுள்ள கிழக்கின் நிலைமை குறித்துக் கண்காணிப்பாளர்களும் தலையை உடைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் மட்டுமன்றிப் படைத் தரப்பினரும் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற அளவுக்கு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். பத்திரிகைகளும் பதற்றத்துடன் நிலைமை குறித்து முறைப்படுகின்றன.

இப்போது என்ன நிகழ்கின்றதோ அதேதான் முன்னரும் நிகழ்ந்து வந்திருக்க, இப்போது மட்டும் இது குறித்து இத்தனை பேரும் முன்னரில்லாத அக்கறை செலுத்துவதற்கு என்ன நேர்ந்திருக்கிறது என்ற கேள்விதான் சிந்திக்க வேண்டிய ஒன்றாக உள்ளது. எனவே, எமது முன்னைய கேள்விக்குத் திரும்பிச் செல்வோம் தற்போது தோன்றியுள்ள நிலைமையில் புதுமை என்ன?

முன்னைய நிகழ்வுகளுக்கும் தற்போதைய நிகழ்வுகளுக்கும் சம்பவங்கள் என்று பார்க்கையில் வித்தியாசங்கள் இல்லை. ஆனால், தற்போது சம்பவங்களின் பின்னணிதான் மாறியுள்ளது. அதாவது முன்னைய சம்பவங்கள் போலன்றி தற்போதைய சம்பவங்கள் புலிகளுக்குச் சவாலாக அமைந்துள்ளமையே இங்கே காணப்படும் புதுமை! முன்னைய சம்பவங்களோ எவ்வகையிலும் புலிகளுக்குச் சவாலாக அமைந்திருக்கவில்லை. அவை புலிகளுக்குச் சவாலாக இருக்கக்கூடிய சின்னஞ்சிறு உறுத்தல்களைக்கூட அகற்றுகின்ற திசை வழியில்தான் அமைந்திருந்தன. அத்தகைய சம்பவங்கள் குறித்து மாற்றுக் கட்சிகளும் ஒரு சில மனித உரிமை அமைப்புகள் மற்றும் சர்வதேச வட்டாரங்களும் புலிகள் மீதுதான் சந்தேகம் தெரிவித்து வந்தன. புலிகள் அவற்றை மறுத்து வரும் போக்கையே கடைப்பிடித்து வந்தன. ஆனால், இப்போதோ புலிகளே முறைப்பாடுகளைச் செய்கின்ற நிலைமைக்குச் சென்றுள்ளனர். புலிகளுக்குச் சவாலான சில போக்குகள் கிழக்கில் ஆரம்பித்துள்ளமையே இங்கு புதிய விடயம்.

ஆனால், முன்னைய சம்பவங்களில் காட்டப்படாத அக்கறை இப்போது உந்தப்படுகிறது. ஜனநாயகத்துக்கு விரோதமான எத்தகைய சம்பவங்களும் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு மறுப்பில்லை. ஆனால், ஒரு வகைச் சம்பவங்கள் மட்டுமே நிறுத்தப்பட வேண்டும் என்பதில் மட்டுமே பலரும் முனைப்புக் காட்டுவதுதான் கேள்விக்குரிய விடயமாக உள்ளது. முன்னைய சம்பவங்களில் பெரிதும் அக்கறைகாட்டி நடவடிக்கைகள் எதுவும் எடுக்க முன்வராத கண்காணிப்பாளர்கள், தற்போதைய சம்பவங்கள் யுத்த நிறுத்தத்தை ஆபத்துக்குள்ளாக்கிவிடும் அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக அபாயச் சமிக்ஞை காட்டுகிறார்கள். அப்படியாயின், ஏன் முன்னைய சம்பவங்களில் மட்டும் அத்தகைய பாதிப்பை இவர்கள் உணரவில்லை. இதேபோல் தற்போதைய சம்பவங்களைக் கட்டுப்படுத்த படைத் தரப்பினர் ஈடுபட வேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், முன்னரோ படைத் தரப்பினர் விலகியிருக்க வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டு வந்தனர். அவர்கள் தங்கள் சொந்த அங்கத்தவர்களான பொலிஸாரும் உளவுத் துறையினரும் கொல்லப் படும்போதும் கூட கைகட்டி நிற்க வேண்டியவர் களாகவே இருந்தார்கள்.

எனவே, கிழக்கில் நிலைமை மோசமடைகின்றது என்று கூறும்போது அதற்குப் பரிகாரமாக எது குறித்துச் சிந்திக்கப்படுகிறது என்பதையும் சற்று எடுத்து நோக்க வேண்டியது அவசியம். எதிரும் புதிருமான இச் சக்திகளின் சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஒன்றை மட்டும் நிறுத்த முனைவதா அல்லது எவ்வித சட்ட விரோதச் செயற்பாடுகளும் நிகழாதவாறு செய்வதா இங்கு தேவைப்படுகிறது?

கிழக்கு மாகாணமானது மிகவும் கொந்தளிப்பானது. அங்கு மூவின மக்களும் ஏறத்தாழ சம அளவில் வாழ்கிறார்கள். எத்தகைய சிறு சம்பவமும் வன்முறைகளைத் தோற்றுவிக்கக்கூடிய உணர்ச்சிகரமான இன முரண்பாடுகள் இங்கு நிலவுகின்றன. அதேவேளை இம் மூவினங்களுக்கும் இடையேயான சமூகப் பொருளாதார உறவுகளும் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண நிலப்பரப்பு வேறுபட்ட சில பிரத்தியேகத் தன்மைகளையும் கொண்டுள்ளன. இதன் காரணமாக இப் பகுதிகளில் வடக்கைப் போல் எந்தவொரு ஆயுத அமைப்பும் முற்றுமுழுதான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க முடியாத தன்மை காணப்படுகிறது. எனவே, இப் பகுதியில் மிகவும் பங்குவமான ஒரு அணுகுமுறையூடாக சமூகங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேண வேண்டிய ஒரு அவசியப்பாடு இருக்கின்றது. அதேவேளை தற்போது தோன்றியுள்ள இரு ஆயுதக் குழுக்களுக்கிடையிலான மோதல்களில் பொதுமக்கள் கூறுபடுத்தப்படவும், பலியாக்கப்படவும் கூடிய அபாயத்தைத் தவிர்ப்பதற்கு உண்டான வழிவகைகள் பற்றிச் சிந்திக்க் வேண்டியதாகவும் உள்ளது. இவை ஒரு ஆயுத தரப்பின் நலன்களுக்கு மட்டும் இசைந்து செல்வதால் சாத்தியமாகிவிடப் போவதில்லை. ●

# கிழக்கில் புதிய குழப்பம்

அலசுவது
**- மதியூகி -**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்ட போதும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி காட்டிய ஆர்வம் பலரையும் ஒரு கணம் சிந்திக்க வைக்கிறது. இது குறித்து ஊடகங்கள், புத்திஜீவிகள், புலிகள் எனப் பல தரப்பிலிருந்தும் வரவேற்புகளை விடவும், சந்தேகங்களே கேள்விக் கணைகளாக முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதியைப் பொறுத்தவரை அவர் ஒரு யுத்தப் பிரியர் என்று சித்திரிக்கப்பட்டதை விடவும் சமாதானப் பிரியர் என்று சொல்லப்பட்டது குறைவாகும். ஜனாதிபதிக்கோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கோ தாஜா பண்ணிக் கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டாயம் எமக்கில்லை. ஆனால், உண்மையான விடயங்களை, மறைந்து கிடக்கும் உண்மைகளைச் சொல்லுகின்றபோது அது யாருக்கும் சார்பானதாக அமைந்துவிடுவதைத் தவிர்க்க முடியாது. அரசியல் தேவைகள் ஜனாதிபதிக்கு இருக்கின்றது என்பதை எவரும் மறுத்துக் கூற முடியாது. அதன் விளைவாக தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணக்கூடிய நிலை ஏற்படுமாக இருந்தால் அதை ஏன் நாம் ஏரியாகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் தெரிவித்து வந்ததைப் போல, ஜனாதிபதியின் அரசியல் ஸ்தம்பித நிலையை அடையும் காலகட்டம் வரை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு சமாதான பேச்சுக்கள் எனும் வண்டியை கரடுமுரடான பாதைகளுக்கு மத்தியில் இழுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. அவற்றை நாம் தெரிவிக்கின்றபோது சமாதானத்தை விரும்பாத இவ்வாறான கருத்துக்கள் நிராகரிக்கப்பட வேண்டியது எனப் பலரும் கொக்கரித்தார்கள். கடைசியில் என்ன நடந்தது? புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை யோசனையின் முன்னுரையைக் கூடத் தட்டிப் பார்க்க இயலாத சங்கடமான நிலைமை ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு இருந்தது. தவிரவும் புலிகளும் ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தமக்குத் திருப்தி அளிக்கவில்லை எனவும், தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாக உணருவதாகவும் தெரிவித்தனர். அதற்குப் பிற்பாடும் கூட தேர்தல் காலம் வரையும் சமாதானம் சமாதானம் என்றே ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்து வந்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்குப் பல தடைகளைக் கடக்க வேண்டிய கட்டாயம் இன்னும் இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த இடைவேளைக்குள்தான் சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகள், மிரட்டல்கள், வரி அறவீடுகள், ஆட்கடத்தல்கள், சிறுவர் படை சேர்ப்பு, ஆயுத இறக்குமதி என்பன போன்ற நேரடி யுத்த சூழலோடு சம்பந்தப்படக் கூடிய, விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடந்தன. நடந்துகொண்டும் இருக்கின்றன. குறிப்பாக, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் அதிக படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்பதைக் கருத்தில் கொள்வது நல்லது. ஈ.பி.டி.பி.யின் 40 உறுப்பினர்களும், ஊடகவியலாளர்கள் மூவரும் பொதுமக்கள் 15 பேர் என்றவாறாகப் படுகொலைகள் தொடர்கின்றன. இப் படுகொலைகளின் பின்னணி பற்றி எவரும் விசாரணைகளை முடுக்கிவிடவோ புலனாய்வுகளை மேற்கொள்ளவோ முன்வரவில்லை. ஏனெனில், இப் படுகொலைகளின் சூத்திரதாரிகளாக மர்ம நபர்களும், சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளும் இருந்துள்ளமையால் அவர்களின் அடையாள அட்டைகள் எவருக்கும் கிடைப்பதில்லை. அதிசயிக்கும் விதமாக இவ் வேற்றுக் கிரக மனிதர்கள் மோட்டார் சைக்கிளில் அல்லது துவிச்சக்கர வண்டியில் வந்தே படுகொலை புரிவார்கள் என்பதும் மற்றுமொரு விடயம். படுகொலை செய்யப்பட்டவர்களைப் பார்த்தால், ஒன்றில் வன்னிப் புலிகளின் கருத்துக்கு எதிரான கருத்துக் கொண்டவராக இருந்திருப்பார். சமகாலத்தில் அந்த நிலை மாறி கருணா தரப்பு ஆதரவாளர்களாகவும் இருப்பார். ஆனால், இங்கே கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால், கொலையானவரின் மறைவுக்காக வன்னிப் புலிகளிடமிருந்து கண்டனமும் எச்சரிக்கையும் வராது போகுமானால் கொலையானவர் துரோகி எனப்படுவதைத் தவிர வேறு எந்தக் காரணங்களும் முன்வைக்கப்பட்டதில்லை. இந்த வரிசையில் பேராசிரியர் தம்பையா கூட அவ்வளவாக கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் தோற்றுவிக்காத நபராகவே இருந்துள்ளார் என்பதை நாம் அறிவோம். இவை எல்லாவற்றையும் எங்கிருந்து ஆரம்பித்து யோசிப்பது என்பதை ஊடகவியலாளர் நடேசனின் படுகொலையிலிருந்து அர்த்தப்படுத்திக்கொள்ளலாம். ஏனெனில், அவரின் இறப்பு தமிழ்த் தேசியத்திற்குப் பின்னடைவை ஏற்படுத்தும் ஒரு இழப்பாகவும் தமிழர் போராட்டத்திற்குப் பெரிதும் உந்து சக்தியாக எழுதிய உன்னதமான ஊடகவியலாளர் என்று புகழாரம் சூட்டியமையும் நடேசன் இறந்து அவரது குருதி காய்வதற்கு முதலே தேசப்பற்றாளன் எனப் பட்டம் கொடுத்தமையும் புலிகளின் வலது கை முறிந்து விட்டது போன்ற உணர்வை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இந்த இழப்பை மாபெரும் வெற்றியாக எவ்வாறு திசை திருப்புவது? இப்படியொரு கேள்வியை முன்வைத்துக்கொண்டு புலிகளும் அவர்களுக்குச் சார்பானவர்களும் தெரிவித்து வரும் கண்டனங்களும், ஆவேசமான எதிர்ப்புகளும் எதனை வெளிப்படுத்துகின்றது? நெல்லியடியில் நடேசனின் இறுதிக் கிரியைகளின்போது மாணவர்களைத் திரட்டி உணர்ச்சி பொங்க நிகழ்த்திக் காட்டியமையானது இதில் மற்றுமொரு வெற்றியாகும். இவையெல்லாம் எதற்காக? புலிகளிலிருந்து பிரிந்து சென்ற கருணாவின் மீது மக்கள் மத்தியில் அதிருப்தி அலைகளைத் தோற்றுவிக்கவும் அரசாங்கத்தை எச்சரிக்கவும்தான். ஏனெனில், நடேசன் சுடப்பட்ட பின்னர் மீண்டுமொரு யுத்தமே வந்துவிடக் கூடும் என்கின்ற அளவுக்குப் புலிகள் அரச படைகள் மீது குற்றம் சாட்டியும் ஆவேசம் கொண்டும் இருந்தனர். எந்தவொரு மனிதனின் கொலையும் எத்தனை நியாயங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும் நாம் ஆதரிக்கப் போகின்றவர்கள் அல்ல. ஆனால் நடேசனின் மறைவுக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் ஏன் படுகொலை செய்யப்பட்ட பேராசிரியர் தம்பையா உட்பட பலருக்கும் இல்லாமல் போனது என்பதுதான் எமது கேள்வி. இவ்வளவு ஏன்? நடேசன் படுகொலை செய்யப்பட்டதற்குப் பிற்பாடு யாழ்ப்பாணத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இவற்றுக்காக ஏன் எதிர்ப்புக் காட்ட முன்வரவில்லை. அவைகள் படுகொலைகள் இல்லையா? அல்லது மேற்படி படுகொலைகளை எதிர்த்தால் அதே இரவில் நாமும் பலி ஆக வேண்டி வரலாம் என்கின்ற பயமா? வன்னிப் புலிகளின் ஆதரவு தரப்பினராக இருந்தாலும் சரி அவர்களின் கருத்துக்களுக்கு எதிர்க் கருத்துக்கள் கொண்டவராக இருந்தாலும் சரி, எவர் மீதும் புரியப்படுகின்ற படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் அண்மைக்காலமாக இலங்கை அரச படைகளுக்கும் மட்டக்களப்பில் நடைபெறுகின்ற கொலைகளுக்கும் நேரடிச் சம்பந்தம் இருப்பதாகப் புலிகள் தெரிவித்து வரும் கருத்துக்கள் படை தரப்பில் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. இதுவரை புரியப்பட்ட எந்தக் கொலைகளுக்குமே புலிகள்தான் பொறுப்பு என அரச படைகள் அதிருப்தி வெளியிட்டது இல்லை. ஆகவே, புலிகளின் குற்றச்சாட்டுக்களை அவதானிக்கின்றபோது மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பிப்பதற்குத் துவக்கப் புள்ளியைத் தேடி வருவதாகவே உணர முடிகிறது. நடேசன் போன்ற புலிகளுக்கு மிக நெருக்கமான வேறு எவராவது படுகொலைக்கு இலக்காக நேர்ந்தால், அது யுத்தமொன்றை ஆரம்பிப்பதற்கு புலிகளை ஆவேசத்தின் உச்சிக்கு இட்டுச் செல்லக் கூடும் என வெளிப்படையாக கருத்துச் சொல்ல மறுக்கும் புலிகளுக்கு மிக நெருக்கமான புத்திஜீவிகளின் மனப் பயமாக இருக்கிறது. கருணாவையும் படையினரையும் முடிச்சுப் போடும் இந்தக் காரணங்கள், யுத்தமொன்றை வெடிக்கச் செய்து தமிழ் மக்கள் மீது கட்டாய உத்தரவுகளாக திணிக்கப்படுகின்ற நிலைமை இருக்குமாக இருந்தால் அது தவிர்க்கப்பட வேண்டும். சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு துவக்கப் புள்ளிகளைத் தேடுவதை விடவும், யுத்தமொன்றை ஆரம்பிப்பதற்கு மிக அதிகளவான புதிய புதிய காரணங்கள் ஏற்படவே அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதில் எது தெரிவு செய்யப்படப் போகின்றது என்பதை மக்கள் புரிந்துகொள்வது அவசியம். இதே நிலை நீடிக்குமாயின் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளை விடவும், சண்டை ஒன்று ஆரம்பிக்கப்படப் போகின்றது என்பதையே விருப்பமில்லாவிட்டாலும் கூடத் தெரிவிக்க வேண்டிய சூழல் இப்போது உருவாக்கப்பட்டு வருகின்றது. ●

**நடேசன் போன்ற புலிகளுக்கு மிக நெருக்கமான வேறு எவராவது படுகொலைக்கு இலக்காக நேர்ந்தால், அது யுத்தமொன்றை ஆரம்பிப்பதற்கு புலிகளை ஆவேசத்தின் உச்சிக்கு இட்டுச் செல்லக் கூடும் என வெளிப்படையாக கருத்துச் சொல்ல மறுக்கும் புலிகளுக்கு மிக நெருக்கமான புத்திஜீவிகளின் மனப் பயமாக இருக்கிறது.**

---

# அதிரடி அய்யாத்துரை



**யாழான** யாழ்ப் பாணத்துச் செம்மண் பிரதேசச் செந்தமிழ்ப் பாடசாலையொண்டில போன கிழமை அபிவிருத்திக் கூட்டமொண்டு நடந்ததாம். அதுக்கு எங்கட ஈழமான ஈழத்துக்கு வேந்தரெண்டு பேர் சூடிக் கொண்டு பிரிவினைக் கெதிராய் சத்தியம் செய்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றப் போனராம். ஆற்றின உரை முழுக்க ஆங்கிலத்திலதானாம். முக்கால் மணி நேரம் முழுசாட்டத்தோட கேட்டுக் கொண்டிருந்த மாணவர்களுக்குப் பொறுக்க முடியேல்லையாம். ஆத்தாக் கொடுமையால ஒரு ஆசிரியை எழும்பி, 'நிறுத்துங்கோ ஐயா, உங்கட அரசியலயும் ஆங்கிலத்தையும் விட்டிட்டு, பாடசாலைக்கு என்ன அபிவிருத்தி செய்து தரப் போறீங்க' எண்டு கேக்க, ஆள் அந்தப்படியே அசந்துபோய் இருந்திட்டாராம். அங்கால ஒரு பக்கத்தால 'குளிர் கழி' 'வெதுப்பகம்' எண்டு தேடிப் பிடிச்சத் தமிழாக்கம் செய்தபடியிருக்க, இந்த ஈழத்து வேந்தனார் தமிழ்ப் பாடசாலைத் தமிழ் மாணவர்களுக்குப் போய் ஆங்கிலத்தில உபதேசம் செய்தது, கூடப் போனவைக்கும் பொறுக்கேல்லையாம். இப்பிடி அறளை பெயந்தவையளயெல்லாம் தங்கட தலையில கட்டிவிட்டுக் கிடக்குதெண்டு நொந்திச்சினமாம். வட் (ட்) டு? கட்டி வைச்சவை பெரிய இடத்தாராச்சே.... கொண்டிழுக்க வேண்டியதுதான்!

**முதற் போராளி** சிவகுமாருக்கு மகத்தான கொண்டாட்டம் நடந்ததெல்லோ இப்ப யாழில. ஆனால் அவற்ர சிலைய அமைத்து நிர்மாணம் செய்து வைச்சவைக்கு மட்டும் கதவடைப்பாம். போதாக்குறைக்குப் பெயர்ப் பலகையையும் பிடுங்கியெறிஞ்சாச்சுதாம். பாகுபாடுகளை ஒழிக்கப் போராடி மடிந்த சிவகுமாரின்ர சிலையிலேயே பாகுபாடு கிளம்பியிருக்கிறத அறிஞ்சால் சிவகுமார் பெருமைப்படுவாரோ. ம........ இப்ப தியாகிகள், போராளிகள் எண்ட பெயர்களெல்லாம் எந்தத் துப்பாக்கியால பலியானார் எண்டு பாத்துத்தான் வழங்கப்படுற காலம். நல்ல காலம்; சிவகுமார் அந்தக் காலத்திலேயே செத்திட்டார். இல்லாட்டால் இந்தப் பெருமையும் கிடைச்சிருக்காது போல!

**மட்டுநகர்** பத்திரிகையாளர் நடேசனின்ர படுகொலை அதிர்ச்சி ஒருபக்கமிருக்க, அதைக் கொண்டாடின விதம் சில பக்கத்தில அதிருப்தியைக் கிளறி விட்டிருக்காம். குறிப்பாய், நடேசன் எழுதி வந்த வீரமான சிங்கப் பெயர்ப் பத்திரிகை வட்டாரத்தில. அதாவது நடேசன்ர உடம்புக்கு மேல ரெண்டெழுத்தாற்ர கொடியைப் போர்த்தினதும், கிளிநொச்சிக்குக் கொண்டுபோய் ரெண்டெழுத்தார் அஞ்சலி செலுத்தினதும், டிப்ளோமட்ஸ் வட்டாரங்களில தங்கட பத்திரிகையையும் ரெண்டெழுத்தாற்ர சார்பு எண்டு முத்திரை குத்திவிட அடையாளம் காட்டிக் குடுக்குமாப் போல ஆயிட்டுதெண்டு ரெம்ப ரெம்ப வேதனைப் பட்டுக் குமைஞ்சிச்சினமாம். அடையாளம் காட்டித்தான் அடையாளம் தெரியிற அளவுக்கு அங்கால போய் நிண்டுகொண்டு, அடையாளத்தைப் பற்றி அழுது என்ன புண்ணியம்! தலைக்கு மேல வெள்ளம் போன பிறகு சாண் போனாலென்ன, முழம் போனாலென்ன? ரெண்டெழுத்தார் நடேசனுக்குக் குடுத்திருக்கிற நாட்டுப்பற்றாளன் எண்ட பட்டத்தை பத்திரிகைக் காரியாலயத்தில பிரேம் போட்டு மாட்டி வைச்சிட்டுக் காரியத்தைத் தொடருறதுதானே?

**பத்திரிகைச்** சுதந்திரம் பற்றி பத்திரிகை ஆசிரியர் ஒருவர் தனியார் வானொலியொண்டில செப்பினதக் கேக்கச் செவிக்கே பொறுக் கேல்லையுங்கோ. ரெண்டு செவி வேண்டாம் ஒண்டிருந்தாப் போதும் எண்டு சொன்னாலும் சொல்லுவார் போல! இது ஏதோ சாதாரண காலமில்லையாம். அதால ஜனநாயக மெண்டெல்லாம் பாத்துச் சரிவராதாம். விலகிப் போற மந்தைகளையெல்லாம் விரசிக் கிரசி ஒரே பாதையில ஓடச் செய்ய வேணுமாம். மாற்றுக் கருத்துக்களைச் சொல்லுற ஊடகங்களுக்குச் சுதந்திரம் இருக்குத்தான் எண்டதை ஒப்புக்கொண்டாலும், அவைய தங்கட வழிக்குக் கொண்டுவர வேணுமெண்டுறார் மனிசன். அதாவது கிளிக்குப் பேசச் சுதந்திரமிருக்குது. ஆனால், அது நான் சொல்லித் தாறத மட்டுமே பேச வேணும் எண்ட உபதேசம். அது சரி, பத்திரிகைச் சுதந்திரமெண்டது இதுதானெண்டால் நீங்களேன் ஆளுக்கொரு பத்திரிகையாய்ப் புறம்பாய் நடத்திறியள். எல்லாரும் ஒண்டாய்ச் சேர்ந்து ஒரு பத்திரிகையை நடத்தலாமே. கருத்துப் பிசகாது! யாரும் சுடர நினைக்கிறது தப்பில்லை. சுட்டுப் பொசுக்க நினைச்சால்தான் பிசகு!

**நிமலராஜன்** படுகொலைக்குப் பிறகு இப்ப நடேசன் படுகொலைக்குத்தான் இந்தளவு பிரபலம் குடுக்கப்படுகுது. இரண்டுக்கும் இடையேயும், முன்னேயும் நடந்த பத்திரிகையாளர் கொலைகளை ஏன் கண்டுகொள்ளேல்லையெண்டு ஒருத்தர் வானொலியில கேட்டார். அதுக்குப் பதில் சொன்ன அந்தப் பத்திரிகை ஆசிரியர், அதெல்லாம் யுத்த காலத்தில நடந்ததெண்டு சொல்லி மழுப்பிப் போட்டார். அப்ப நிமலராஜன் விஷயம் எப்ப நடந்ததாம்? எல்லாப் பத்திரிகையாளருக்கும் அவரவர் கருத்தை எழுதிற சுதந்திரம் வேணும். எவருக்கு அநீதி நடந்தாலும் குரல் குடுக்க வேணும். இதுதானே தர்மம்? ஒருத்தருக்குப் புகழாரம், இன்னொருத்தருக்குப் பெயரையே காணோம் எண்ட நிலைமை ஏனோ? ஒருத்தர் மட்டும் தேசாபிமானியெண்டால் மற்றவை என்ன தேச விரோதிகளா? உதுகளையெல்லாம் கேக்கப் போய் ஏன் வம்பை விலைக்கு வாங்கிறியள்.? சைலன்ஸ் பிளீஸ்.

**ரெண்டாம்** உலகப் போரில சண்டைக்கு நிண்ட ஜேர்மனியே இப்ப, நினைவு தினக் கொண்டாட்டத்தில முன்னாள் எதிரிகளோட கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துது. முன்னைய பகையாளி ரொனால்ட் றீகனின்ர இறுதி அஞ்சலிக்கு சோவியத் முன்னாள் ஜனாதிபதி கோர்பச்சேவ் கலந்துகொள்ளுறார். உலகம் இப்ப எவ்வளவோ மாறிவிட்டுது. முந்தி நினைச்சுப் பாக்க ஏலாததெல்லாம் இப்ப நடக்குது. இதைப் போல இந்தச் சின்னஞ்சிறு நாட்டிலயும் பகைமை ஒழிஞ்சு எல்லாச் சமூகமும் நட்புறவு பாராட்டிற காலம் எண்டைக்குத்தான் வரப்போகுதோ?

**யாழ்.** கோண்டாவில் வடக்கு சிவகாமி அம்பாள் கோயில் திருவிழாவில பாட, எங்கட பிரபல பாடகர் சௌந்தரராஜன்ர புத்திரர் செல்வகுமாரை அழைச்சிருந்திச்சினமாம். பாவம், அவருக்குப் பாடுற உரிமை மறுக்கப்பட்டதால அவர் வெறுமனே கோயில் விக்கிரகத்தைப் பாத்துத் தன்ர போதாத காலத்தைப் பாடிப் போட்டுப் புறப்பட்டிருக்கிறாராம். அவன் சித்தம் ஏதெண்டு அறியாமல் ஏதேதோ செய்யப்போய் ஏன்தான் எங்கட சனம் ஏமாறுகினமோ! ⊙

# விளம்பரப் பகுதி



## சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் விபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.


## தினமுரசு சந்தா விபரம்

### சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்ப காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.


நன்றி.

- ஆசிரியர்


## நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்







**எனக்கு தெய்வம் தந்த அருள் ஞான கவசம் என்ன?**

இங்கு தீய வேலைகளை யாரும் பாரம் எடுப்பதில்லை. முடியும், முடியாது என்று முதலிலேயே சொல்லிவிடுவது. முடித்துக் கொடுக்கும் வேலைகளுக்கு முன்பதாகவே நிறைவேறும் திகதிகளைக் கூறிவிடுவது, வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பது. இத்துறையில் யாருமே செய்யாத - எனக்கென ஒரு பாணியை அமைத்து நிறுவனமாக செயற்பட்டுக்கொண்டிருப்பதால் இத்துறைக்கு வந்து குவியும் அன்பர்களின் நன்றிக் கடிதங்களை வரிசைப்படுத்தியுள்ளேன்.

**களுபோவிலவிலிருந்து - திருமதி விஸ்வநாதன்.....**

கலியுகத்தில் கண் கண்ட தெய்வம் ஐயா அவர்களுக்கு! படிக்காமல் இருந்த எனது மகனுக்கு தங்களின் சாந்தி பரிகாரத்திற்குப் பின்பு படித்து பின் வேலை கிடைத்தது. தங்களின் ஆசீர்வாதத்தால் பதவி உயர்வும் கிட்டியது. எனது குடும்பத்திலுள்ள எத்தனையோ எத்தனையோ பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன. எங்களுக்கு இருள் நீக்கி ஒளி ஏற்றிய உங்களை என்றும் மறக்க மாட்டோம்.

**கனடாவிலிருந்து - சிவமாரன்.......**

மதிப்பிற்குரிய மனித தெய்வமே!

எனது நண்பனும் அவனது மனைவியும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்ட நிலையில், தங்களின் பெருமைகளையும் பரிகாரம் செய்து வெற்றி கண்டவர்களின் பட்டியல்களையும் அறிந்து தொலைபேசி மூலமாகத் தங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தெரிவித்ததைப் பொறுமையுடன் கேட்டு, பின் பரிகாரம் செய்து தந்தீர்கள். ஐயா! இப்பொழுது இவ்விருவரும் கருத்து வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக ஒன்று சேர்ந்துவிட்டார்கள். பிரிந்த குடும்பத்தை ஒன்றாக்கிய உங்களுக்கு எனது மகிழ்ச்சியோடு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சுவிஸிலிருந்து - உதயகுமாரி.....**

அருள் ஞான சித்தர் ஐயா அவர்களுக்கு!

திருமணம் முடித்து கடந்த 3 வருடங்களாக சுவிஸில் குடியும் கும்மாளமுமாக இருந்து, என்னையும் எனது மகனையும் தவிக்க விட்டுவிட்டு வேறு பெண்களோடு சுற்றித் திரிந்த எனது கணவனின் போக்கையும் குணத்தையும் மாற்றி என்னை வாழ வைத்த தெய்வமே! எனது ஆயிரம் கோடி நன்றிகளை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

**கிளிநொச்சியிலிருந்து - துஷ்யந்தினி.....**

ஜோதிட பக்குவத் திலகம் டாக்டர் ஐயா அவர்களே!

தாங்கள் எனது ஜாதகத்தைக் கணித்தபொழுது தங்களுக்கு துர்க்காதேவி அருளிய அருள் வாக்கால், எனக்கு கணவர் எத்திசையில் இருந்து வருவார். எனது திருமணத்தின் திகதி, மணிக் கணக்கு, எனது வெளிநாட்டுப் பிரயாணத்தின் திகதி, மணிக் கணக்கு என்பனவற்றைத் துல்லியமாக வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறினீர்கள் ஐயா. எல்லாமே ஆச்சரியப்படும்படி தாங்கள் கூறியபடி நடந்து வருகின்றது. உங்களது இப்பணி தொடர, நீங்கள் நீண்ட காலம் வாழ துர்க்கையை மனதார வேண்டுகின்றேன்.

**ஜேர்மனியிலிருந்து - ஜெகதீஸ்வரன்.....**

கலியுகத்தின் கருணைக் கடலே! உங்களுக்கு எனது கோடி நமஸ்காரங்கள். நான் ஊரில் இருந்து இங்கு வந்த நாள் முதல் கடனாளியாகவும் நிரந்தர வேலை கிடைக்காமலும் அல்லற்பட்டுக்கொண்டிருந்தபொழுது, எனது நண்பனின் மூலமாகத் தங்களை அறிந்து எனது பிரச்சினையைக் கூறியதன் பேரில், தங்களின் மாந்திரீக பரிகாரத்தின் பின்பு ஐயா, தாங்கள் குறிப்பிட்ட திகதியிலேயே எனக்கு நிரந்தர வேலை கிடைத்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு அறியத் தருவதோடு நான் என்றும் தங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

**நோர்வேயிலிருந்து - குமுதினி....**

மனிதரின் மாணிக்கமே! ஐயா அவர்களுக்கு! திருமணம் முடிந்து 5 வருடங்களாகக் குழந்தைப் பேறு இன்றியும், எமக்குச் சொந்தமான வீட்டை விற்பதற்காகவும் அல்லற்பட்டுக்கொண்டிருந்தபோது தங்களின் மாந்திரீக பரிகாரத்தின் சக்தியால் எமது வீட்டை நல்ல விலைக்கு விற்று எமது கடன் பிரச்சினை தீர வழி செய்து தந்தீர்கள். அதோடு நானும் தற்போது கர்ப்பமாக உள்ளேன். ஐயா! ஆயிரம் மருந்துகளால் செய்ய முடியாத காரியத்தை தங்களின் மாந்திரீக சக்தியால் செய்துள்ளீர்கள். எனது குடும்பத்திற்கு ஒளி ஏற்றிய உங்களை என்றென்றும் நன்றியுடன் நினைத்திருப்போம்.

கூடிய விரைவில் எதிர்பாருங்கள்....
'கேள்விக்கு என்ன பதில்' நிகழ்ச்சியை ரூபவாஹினி 'ஐ' அலை வரிசையில் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரை.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி 'பக்குவதிலகம்'
**பேராசிரியர் டாக்டர். பி.கே.ஸாமி** (J.D.G.A.N) J.P.

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
தொ.பே: 011-2470615, 011-2342463
Fax : 0094-112344831 - E-mail: drpksamy@sltnet.lk
No. 3, Daily Fair Complex, Nuwara - Eliya.
Tel : 052-2222508, 052-2235097.


## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

**நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.**

நன்றி.

- ஆ - ர்

## இரவு நேர ராஜாக்களோ!

இலங்கையின் பிரதான புகையிரத நிலையமான கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்தில் இரவு நேரங்களில் நடக்கின்ற சில அநாகரிகமான செயற்பாடுகளை இப் பகுதியில் சுட்டிக்காட்டுவது மிகவும் அவசியமாகின்றது.

இரவு நேரத்திலேயே பெரும்பாலும் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் இப் புகையிரத நிலையத்தில் கூடுவது அதிகம். எனவே, முற்பதிவு செய்யப்பட்ட ஆசனங்களைத் தவிர, ஏனைய ஆசனங்களைக் கைப்பற்றுவதில் பயணிகள் முண்டியடிப்பது வழக்கம். இவ்வாறான நேரங்களில் சில இளைஞர்கள், குறிப்பிட்ட புகையிரதத்தில் ஏறி ஆசனங்களில் அமர்ந்து, பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு இடமளிக்காது, தாம் விரும்பியவர்களுக்கும், குறிப்பாகப் பெண்களைக் கவரும் விதத்திலும் ஆசனங்களை வழங்குவார்கள். இதில் சிலர் பணம் பெற்று ஆசனம் வழங்குவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, இச் செயற்பாடுகள் அதிகமாகக் காணப்படுவது பதுளையை நோக்கிப் புறப்படும் புகையிரதத்தில்தான். மலையகத்தைச் சார்ந்த இளைஞர்கள் கொழும்பில் கடைகளில் தொழில் பார்க்கின்றனர். இவர்கள் இரவு நேரங்களில், தொழில் முடிந்தவுடன் கோட்டை புகையிரத நிலையத்திற்கு விரைந்து, மேடைகளுக்கான ரிக்கற்றினை (Platform Ticket) பெற்று உள்ளே நுழைகின்றனர். பின் புகையிரதத்திற்காகக் காத்திருக்கும் பயணிகளுடன் தாமும் இணைந்து, புகையிரதம் வந்தவுடன் பயணிகளைப் புறந்தள்ளிவிட்டு, புகையிரதத்தில் ஏறி ஆசனம் பிடிக்கின்றனர். பல மணி நேரம் காத்திருந்து புகையிரதத்தில் ஏறும் பயணிகள் ஆசனங்கள் அனைத்தும் பயணப் பொதிகளாலும் குறிப்பிட்ட இளைஞர்களின் ஆக்கிரமிப்புகளாலும் நிரம்பியிருப்பதனைக் கண்டு ஆத்திரமடைவதுடன், வெறுப்பும் கொள்கின்றனர். இச் செயற்பாடு அநாகரிகமான கலாசாரமாகவே இந்த இளைஞர்கள் மத்தியில் இன்று உருவெடுத்துள்ளது.

மேலும் இவர்கள் இங்கு நடந்துகொள்ளும் விதமும் பார்ப்போரை முகஞ்சுளிக்கச் செய்வதுடன், கோபம் கொள்ளவும் செய்கின்றது. அரைக்காற்சட்டையுடன் வெறும் மேலங்கியை அணிந்துகொண்டு, சிகரட்டுடன் கழுத்தில் கண்ட கண்ட சங்கிலிகளை அணிந்துகொண்டு, வேண்டாத பேச்சுக்களைப் பேசி, பொது இடம் என்றும் பாராது மிக மிக அநாகரிகமாகவே நடக்கின்றனர். பெரும்பாலும் தமிழையும், சிங்களத்தையும் இணைத்துப் பேசி புது மொழியையே உருவாக்கிவிடுகின்றனர். பார்க்கும் அனைவருக்கும் இவ்விளைஞர்கள் மலையகத்தைச் சார்ந்தவர்கள் என மிக இலகுவில் அடையாளம் கண்டுகொள்ளவும் முடிகின்றது. இவர்களின் இச் செயலால் மலையகத்தைச் சேர்ந்த கற்ற, பண்பான மக்களுக்கும் இடையூறுகள் ஏற்படுகின்றன.

அண்மையில் கூட ஒரு நாள் இரவு நேர புகையிரதத்தில் மேற்படி இளைஞர்களின் வழமையான இச் செயற்பாடுகளால், ஆத்திரமுற்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர், அநாகரிகமான சொற்பிரயோகத்தை மேற்கொண்டார். தமிழினத்தைக் கொச்சைப்படுத்திய வசனமாகவே அமைந்தது. இவரின் அச் சொல்லால் மத்தியதர வயதையுடைய தமிழர் ஒருவர், அப் பெரும்பான்மை இனத்தவருடன் தர்க்கம் புரிய முனைந்தார். நல்லவேளை, அங்கு இருந்தவர்கள் அமைதி நிலவ வழி சமைத்தனர். அன்று தர்க்கம் முற்றியிருப்பின் பாரதூரமான விளைவுகள் உண்டாகியிருக்கும்.

எனவே, மேற்படி செயற்பாடுகளை மேலும் இவ்விடத்தில் வளராது தடுக்க வேண்டியது நமது கடமையாகும். ஏழைத் தொழிலாளிகளான பெற்றோர்கள் தம் பிள்ளைகள் கொழும்புக்குச் சென்று உழைத்து நன்றாக வாழ வேண்டும் என எத்தனையோ கனவுகள் காண்கின்றனர். அவர்களின் ஆசைகளை நிராசையாக்கும் விதத்தில் பிள்ளைகளின் செயற்பாடுகள் அமைகின்றன. மாறாக இவர்களின் செயற்பாடுகளால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். ஏனெனில், ஓடும் புகையிரதத்தில் ஏறுவதும், அங்கும் இங்கும் தொங்குவதும் எனப் பல சேஷ்டைகளைச் செய்கின்றனர். இறுதியில் பெற்றோருக்கு உழைக்கச் சென்ற பிள்ளை, பிணமாகவோ, உடல் ஊனமுற்ற நிலையிலோதான் கிடைக்க வேண்டிய நிலை ஏற்படும்.


ஆகவே, மேற்படி விடயத்தில் நாம் கவனம் செலுத்துவது மிக மிக அவசியமாகின்றது. சம்பந்தப்பட்டவர்களைக் கண்டித்தோ அல்லது தண்டித்தோ இச் செயற்பாடுகளை நிறுத்துதல் அவசியமாகின்றது. இவ்விடயத்தைப் பாதுகாப்புத் துறையினரின் கவனத்திற்கோ, புகையிரதப் பாதுகாவலர்களின் கவனத்திற்கோ கொண்டு செல்வது நமது கடமையாகும்.

நன்றி

- *"மலைக்கவி" கா. சுபாஷ்,*
*டிக்கோயா.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் 11.06.2004

தோற்றம்
04
05
1933



மறைவு
12
05
2004

## அமரர் உயர் திருமதி. சிவஞானம் கந்தசாமி

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் அன்பையும் பண்பையும் அணிகலனாகக் கொண்டு எம்மை அரவணைத்து, ஆதரித்து, இன்முகங்காட்டி வரவேற்று, ஆரமுதூட்டி, சீரிய சிறப்பு நல்வாழ்விற்கு நல்வழி காட்டிய எமது குடும்பத் தெய்வமே! அம்மாவே! நீங்கள் எம்மை ஆறாத் துயரில் விட்டுப் பிரிந்து 31 நாட்களாகிவிட்டன. எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும் உங்கள் பிரிவு எம்மை விட்டு நீங்காதம்மா, எங்கள் உயிருள்ள வரை உங்கள் ஆத்ம சாந்திக்காக நீங்காத நிதமான உங்கள் நினைவினோடு நித்தமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தெய்வம் எம்மை விட்டு மறைந்த செய்தியினைக் கேள்வியுற்று, உடனே எமது இல்லம் நாடி ஓடோடி வந்து கண்ணீர் சிந்திய முகத்துடன் எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி, பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைத்து உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பானவர்களுக்கும், இரங்கற் செய்திகளைத் தந்துதவியவர்களுக்கும், அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட அன்பிற்குரிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் இதயபூர்வமான நன்றிகளை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

*முகவரி :-*
*இல. 119/1, குட்செட் வீதி,*
*வவுனியா.*

தகவல் :- சுபாஸ், Hall 5
5 Rue Henri Brisson
75018 Paris
France.

இங்ஙனம்
*கணவர் கந்தசாமி,*
*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

**அரசியல் ஆய்வாளர் கெய்த் நொயர் 29.05.2004 திகதிய "டெய்லி மிரர்" ஆங்கில இதழில் எழுதிய அரசியல் ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்**

## இன்னொருவர் பார்வையில்

# டிக்ஸிற்றின் மீள் வருகை தீர்வுக்கு வழி வகுக்குமா? பழி தீர்க்கும் ஆரம்பமா?

எந்த வகையிலான இடைக்கால ஏற்பாடுகளும் இறுதித் தீர்வுடன் சம்பந்தப்பட்டதாகவும் பிரிக்க முடியாத பங்குடையதாகவும் இருக்க வேண்டும். இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும், இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவிப் பொறுப்பில் இருந்தபோது புதுடில்லியில் வெளியிட்டிருந்த கூட்டு அறிக்கையின் முக்கியமான வாசகம் இதுவாகும்.

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தபோது இந்தக் கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கை வெளியிடப்பட்டு சுமார் ஒரு மாதத்துக்குப் பின்னரேயே புலிகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குத் தன்னாட்சி கோரும் தமது யோசனைகளை முன்வைத்திருந்தனர். இந்த யோசனைகள் 2003 அக்டோபர் 31இல் புலிகளால் முன்வைக்கப்பட்டது.

எனவே, இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்ட நான்கு தினங்கள் கழிந்த பின்னர் ஜனாதிபதி பாதுகாப்பு உட்பட முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்றிருக்காதிருந்தால் அல்லது பெப்ரவரி 2004இல் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றுக்குப் போயிருக்காதிருந்தால், ஐ.தே.முன்னணி அரசு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இடைக்காலத் தன்னாட்சி உரிமையைப் புலிகளிடம் வழங்குவது குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கும் எனக் கருத முடியாது.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள் எதுவும் இறுதித் தீர்வுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும் என்று உலகுக்குப் பிரகடனம் செய்தமையின் பின்னர், பிரதமர் ரணில் எவ்வாறு புலிகளின் யோசனைகள் குறித்துப் பேசியிருக்க முடியும்?

காலத்தைக் கடத்துவதன் மூலமாக புலிகள், தாங்கள் வழங்கிய வாக்குறுதிகள், ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகள், முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் போன்றவற்றை ஏனைய தரப்பினர் மறந்துபோய் விடுவார்கள் என்றே நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். உண்மையில் இடைக்காலத் தன்னாட்சி உரிமைக் கோரிக்கையை, இறுதித் தீர்வு குறித்த உடன்பாடு எதுவும் இல்லாமலே வென்றெடுப்பது குறித்துப் புலிகள் பேசுவது என்பது, தடங்கலுக்கு உள்ளாகியிருக்கும் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான தொடக்கப் புள்ளியாக இல்லை.

ஐ.தே.முன்னணி அரசாங்கம் 25 மாதங்கள் பதவி வகித்துள்ளது. இதில் ஏழு மாத இடைவெளிக்குள் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்து முடிந்துள்ளன. புலிகள் முன்வைத்த கோரிக்கைளை நிறைவேற்றி ஐ.தே.முன்னணி அரசுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதற்கே சுமார் ஒன்பது மாதங்கள் வரை எடுத்துள்ளது. போரில் ஈடுபட்டிருந்த கொடூரமான ஒரு அமைப்பு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு இது அவசியமானது எனக் கருதுவது பொருத்தமானதல்ல.

ஜூன் மாதத்தில் டோக்கியோவில் நடைபெறவிருந்த இலக்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னோடியாக வாஷிங்டனில் நடைபெற்ற மாநாட்டில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறிப் பேச்சுவார்த்தை அரங்கிலிருந்து புலிகள் பின்வாங்கத் தொடங்கினர்.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக, பொருளாதாரம், நிர்வாகம் என்பவற்றுடன் கூடிய அரசியல் அதிகாரத்தைத் தரக்கூடிய இடைக்கால ஏற்பாடு அவசியம் என்பதைப் புலிகள் அப்போது காரணமாகக் காட்டினர். இத்தகையதொரு ஏற்பாடு நிறுவனமயமாக்கப்பட வேண்டுமெனப் புலிகள் கூறிக்கொண்டிருந்தபோது தமது தேவை என்ன என்பதை அவர்கள் அப்போது தெளிவாக எடுத்துரைக்கவில்லை. இதற்குப் பின்னர் சுமார் ஆறு மாதங்கள் கழிந்த பின்னரே இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கோரிக்கை புலிகளால் முன்வைக்கப்பட்டது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை அம்சங்கள் குறித்துப் பேசுவதற்கு முன்பாகவே வடக்கு - கிழக்கு மாகாண இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகம் வழங்கப்படவேண்டுமெனப் புலிகள் இப்போது வலியுறுத்துவது, முதலாவதாக பாக்குநீரிணைக்கு இரு பக்கத்திலும் உள்ள நாடுகளின் பிரதமர்கள் இருவரும் கண்டுள்ள இணக்கப்பாட்டிற்கு முரணானது. அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் பேசப்படாமல் காலம் கடத்துவதாக ஐ.தே.முன்னணி அரசு மீதும் புலிகள் மீதும் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குற்றம் சுமத்தி வந்த நிலையில், அவர் தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருப்பாரென்பது எதிர்பார்க்கப்பட முடியாதது. இரண்டாவது,

இறுதியாக இறுதித் தீர்வு குறித்துக் கலந்துரையாடுவதற்காக ஒரு அரசியல் விவகாரக் குழுவை அமைக்கப் புலிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர். அரசியல் விடயங்கள் குறித்துப் பேசுவதற்கான உப குழு அன்ரன் பாலசிங்கம் மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை இணைத் தலைவர்களாகக் கொண்டிருக்கும் என இணங்கப்பட்டிருந்தது. முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீமும் மற்றுமொரு உறுப்பினராகச் செயற்படுவாரென, இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் தாய்லாந்தில் இடம்பெற்ற பின்னர் நோர்வே அரசாங்கம் அறிவித்து இருந்தது.

ஆனால், இந்த அறிவிப்பு வெளியாகி சுமார் ஒரு மாத காலத்தினுள் பகைமை தவிர்ப்பு மற்றும் இயல்பு நிலையை உருவாக்குவதற்கான உப குழுவிலிருந்து புலிகள் வெளியேறினர். இறுதித் தீர்வு எதுவும் எட்டப்படுவதற்கு முன்பாகவே அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு படையினர் அப்புறப்படுத்தப்பட வேண்டுமெனப் புலிகள் வற்புறுத்தினர்.

ஆனால், இடைக்கால நிர்வாக அமைப்பை நிறுவனமயமாக்குவது மற்றும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது போன்ற கோரிக்கைகள் இறுதித் தீர்வுடன் சம்பந்தப்பட்டவை என்பதைப் புலிகள் உணர வேண்டும். புலிகள் இறுதித் தீர்வு குறித்துப் பேசவே முன்வராத நிலையில் பாதுகாப்புச் சமநிலையை பாதிக்கக்கூடிய எந்தச் செயற்பாடும் கடந்த காலங்களைப் போல படையினரைப் பலவீனப்படுத்துவதாகவே போய் முடியலாம். புலிகள் இவ்வாறான அனுகூலங்களைப் பெறுவதற்கு படையினர் அனுமதிக்கப் போவதில்லை என்பது நிச்சயமானது.

இரு தரப்பும் இணங்கி ஏற்படுத்திக்கொண்ட சிரான் உப குழு கூட, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசத்தின் புனரமைப்புக்குரிய பணத்தைப் பெற்றுப் பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவில்லை. ஆதலால் இடைக்கால ஏற்பாடு அவசியமெனப் புலிகள் வாதிடக்கூடும்.

ஆனால், ஜப்பான் உட்பட உதவி வழங்கும் நாடுகளில் பலவும் இப் பிரதேசத்தில் போர் மீண்டும் மூளாது என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னரே நிதி உதவி வழங்க முன்வரும் என்பது வெளிப்படையானது. ஜப்பானின் சர்வதேச உதவிக்கான நிறுவனம்கூட நிதி உதவிகளை வழங்க முன்வரவில்லை. இந்த நிறுவனத்தால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வேலைத் திட்டத்திற்கான அறிவிப்புப் பலகையில் இலங்கை அரசின் இலச்சினை பொறிக்கப்படுவதைப் புலிகள் அனுமதிக்காமையே இதற்குக் காரணமாகும்.

புலிகளும் முன்னைய அரசாங்கமும், வெளிநாட்டு நன்கொடையாளர்கள் நிதி உதவி வழங்குவதற்காக அரசியல் உறுதிப்பாடு பேணப்பட வேண்டுமென விதித்த நிபந்தனைகளுக்கு மாற்றாக பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படுமென உறுதி அளித்தனர்.

ஆனால், டோக்கியோ மாநாட்டைப் புறக்கணித்ததன் மூலமாக டோக்கியோ பிரகடனத்திற்குப் புலிகள் கட்டுப்படாத அதேவேளை, பின்னர் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கோரிக்கையை முன்வைத்து தற்போது அது அமுலாக்கப்பட்டாலே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியுமென வலியுறுத்துகின்றனர்.

தற்போது இடைக்கால நிர்வாக கோரிக்கை அல்லது அதன் உள்ளடக்கத்தில் சிறிது பலவீனமான நிலையில் நிறைவேற்றப்பட்டால் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்துள்ள பணத்திற்கு என்ன நடக்கும்? அது வடக்கு - கிழக்கிற்குப் போய்ச் சேரும் என்று கூறுவதற்கு இல்லை. ஏனெனில் வெளிநாட்டு நிதி உதவிகளுடன் வடக்கு - கிழக்கு மாகாணம் நேரடியாகப் புனரமைப்புச் செய்யப்படுமாயின் அது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அப் பகுதிகளை மீட்டெடுக்கும் வகையில் அரசாங்கம் தாக்குதல் எதனையும் மேற்கொள்வதை இயலாததாக்கிவிடும்.

புலிகள் தமது கோரிக்கையின் உள்ளடக்கத்தை மேலும் அதிகரித்து அரசியல் தீர்வு குறித்து முரண்பாட்டாலும் கூட சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தும் நோக்கில் மீண்டும் போருக்குச் செல்வது பதவியிலுள்ள அரசாங்கத்திற்கு இயலாதது ஆகிவிடும். நீண்ட இலக்குகளைக் கொண்ட புலிகளின் இடைக்கால நிர்வாகம் அமுலில் இருக்குமெனின் புலிகள் காலப்போக்கில் தனியான சர்வதேச அங்கீகாரத்தையும் தனிநாட்டுக்குரிய அந்தஸ்தையும் பெற்றுவிடக் கூடும்.

புலிகளின் தலைமையிலான இடைக்கால நிர்வாகம் உள்ளூரிலும் வெளிநாடுகளில் இருந்தும் நேரடியாகக் கடன் பெறுவதற்கும் உள்நாட்டு - வெளிநாட்டு வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

கடலையும் கடற்கரைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் கூட இடைக்கால நிாவாகத்தின் மூலமாகப் புலிகள் கோருகின்றனர்.

இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேணுவதாகக் கூறிக்கொள்ளும்போதும் மேற்குலகம் புலிகளின் பயங்கரவாதப் போக்கைக் கண்டுகொள்வதாக இல்லை. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பேணுவதில் மேற்குலகிற்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமாயின், அது முதலில் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு வரப் புலிகளை நிர்ப்பந்திக்க வேண்டும்.

இது சாத்தியமில்லை எனின், சிரான் போன்ற அமைப்பை விடக் கூடுதலான அதிகாரங்களுடன் கூடிய நிர்வாக அமைப்பு தோற்றுவிக்கப்படலாம். அரசின் யோசனைகள் அடங்கிய நகல் கவனத்தில் கொள்ளப்படலாம். வெளிநாட்டு நிதி உதவிகளை விரைவாகவும், நேரடியாகவும் பெறுவதையே இலக்காகக் கொண்ட இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குப் பதிலாகவும், அரசாங்க அதிகாரத்துவத்தின் சிவப்பு நாடா நிர்வாக முறைக்கு அப்பாற்பட்டதாகவும் இதனை வடிவமைக்கலாம்.

மேற்குலகைப் போல அல்லாமல் இந்தியா உண்மையிலேயே இலங்கைத் தீர்வுக்குள் பிரிவினைக்கு எதிரான போக்கைக் கொண்டுள்ளது. இக் காரணத்திற்காக இலங்கை, இந்தியாவில் கூடுதலாகத் தங்கியிருக்க முடியும். வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான எந்தவொரு இடைக்கால ஏற்பாடும் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வுடன் பின்னிப் பிணைந்ததாக இருக்க வேண்டுமென முன்னாள் இந்தியப் பிரதமர் வலியுறுத்தி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதுவும் புலிகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக கோரிக்கைக்கான யோசனைகளை முன்வைப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக இந்தக் கூட்டு அறிக்கை வெளியானது குறிப்பிடத்தக்கது.

> **இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் புலிகள் சீர்குலைத்த விதம் தொடர்பாக டிக்ஸிற் கடும் கோபம் கொண்டிருக்கக் கூடும். 1200 பேரை இழந்து, தனது பணிக்காக ஒரு சொல் பாராட்டைக் கூடப் பெறாமல் இந்திய அமைதிப்படை அவமானகரமாக வெளியேற நேரிட்டமை காரணமாக இந்தியா இவ்வளவு காலமும் தள்ளி நின்றது. ஆனால், மேற்குலக நாடுகள் மற்றும் ஜப்பானின் தலையீடுகள் அதிகரித்துச் செல்கின்றமை காரணமாக இனியும் இந்தியா தள்ளி நிற்க முடியாது.**

ஆனால், இந்தியாவில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பதவிக்கு வந்துள்ளது. இதையடுத்து புலிகளுக்கு ஆதரவான போக்குடைய மலையக மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையை மறந்துவிட வேண்டும் எனவும், புலிகளின் தலைவர்களை நாடு கடத்தும் கோரிக்கையை முன்வைக்கக் கூடாது எனவும் அறிக்கை வெளியிடுகின்றனர்.

ஆனாலும், புலிகள் மீதான தடை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருப்பதே விளைவாக வந்துள்ளது. மேலும் சர்ச்சைக்குரியவராகக் கருதப்பட்ட முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளமையானது புலிகளைக் குலை நடுங்க வைப்பதாக உள்ளது. டிக்ஸிற்றுக்குக் கிடைத்துள்ள இப் பதவி உண்மையில் ஒரு மத்திய அமைச்சருக்குரிய அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டது. பிரதமருக்குப் பதிலாக இந்தியாவின் பாதுகாப்பு அதிகாரங்கள் அனைத்தையும் கையாளக் கூடிய நிலைமை அவருக்குள்ளது. இந்த மிகக் கூடிய அதிகாரங்களுடன் டிக்ஸிற் எத்தகைய முடிவுகளை மேற்கொள்ளக் கூடும்? இது பற்றி 'சுடர் ஒளி' நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளது.

"இலங்கை விவகாரத்தில் தீவிரமான நிலைப்பாட்டை எடுத்ததன் மூலமாக இந்தியா மிகப் பெரும் அளவில் உயிர், உடைமை இழப்புக்களைச் சந்தித்து நின்றது என்பதையும், அவமானகரமாக வெளியேற நேரிட்டது என்பதையும் டிக்ஸிற் மறந்திருக்க முடியாது". இந்த ஆசிரிய தலையங்கத்தின் கடுமையான வாசகங்கள் புலிகளின் உள்ளார்ந்த நடுக்கத்தைப் புலப்படுத்துகிறது எனலாம்.

கடந்த கால பட்டறிவுகளிலிருந்து டிக்ஸிற் சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் தொடர்பாக மனமாற்றம் கொண்டிருக்கலாம் எனவும் அதனால் ஆதரவு காட்ட முன்வரலாம், எனவும் சிலர் எதிர்பார்க்கக் கூடும்.

ஆனால், தனது முயற்சிகளைப் பாழ்படுத்தியவர்கள் மீது ஒரு இராஜதந்திரி என்ற வகையில் பழிவாங்கும் முயற்சிகளை அவர் மேற்கொண்டால் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும்.

இந்தியப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இலங்கை விவகாரத்தில் இந்தியா முக்கிய பங்கை ஆற்ற வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டிருந்தனர். இதற்குப் பதிலளித்த இந்தியா, 'பெரிய அயல் நாட்டிற்கு உரிய பங்கு என்ன என்பதை இலங்கை மிகத் தெளிவாகவும், குறிப்பாகவும் வெளிப்படுத்த வேண்டும்' என்று கோரியிருந்தது. காங்கிரஸ் முன்னிலைக்கு வரக் கூடுமென்பதை மனத்தில் இருத்தியிருந்த கதிர்காமர், புலிகளின் தலைவர்கள் ராஜீவ் காந்தி கொலைக்காக நாடு கடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை மேலெழலாம் எனக் கோடி காட்டி இருந்தார்.

இந்தியத் தேர்தல்களுக்கு முன்பாகவே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தையும், இராணுவ தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவையும் இந்தியாவிற்கு அனுப்பி, கொள்கையளவில் ஐ.தே.மு. அரசுடன் இணக்கம் காணப்பட்டிருந்த பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாகப் பேச்சு நடத்தி இருந்தார்.

சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்கப் போவதாக மிரட்டுவதன் மூலமாக ஐ.தே.முன்னணி அரசு இந்த உடன்படிக்கை தொடர்பாக போதுமான உற்சாகத்தைக் காண்பிக்கவில்லையென இந்தியா உணர்ந்திருக்கக் கூடும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் புலிகள் சீர்குலைத்த விதம் தொடர்பாக டிக்ஸிற் கடும் கோபம் கொண்டிருக்கக் கூடும். 1200 பேரை இழந்து, தனது பணிக்காக ஒரு சொல் பாராட்டைக் கூடப் பெறாமல் இந்திய அமைதிப்படை அவமானகரமாக வெளியேற நேரிட்டமை காரணமாக இந்தியா இவ்வளவு காலமும் தள்ளி நின்றது. ஆனால், மேற்குலக நாடுகள் மற்றும் ஜப்பானின் தலையீடுகள் அதிகரித்துச் செல்கின்றமை காரணமாக இனியும் இந்தியா தள்ளி நிற்க முடியாது.

அவரது (டிக்ஸிற்றின்) இராஜதந்திரமும், நுட்பமான செயற்பாடுகளும் ராஜீவ் காந்தியிடம் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்று 'சுடர் ஒளி' நாளிதழ் சுட்டிக் காட்டுகிறது. இலங்கை விவகாரத்தில் மிக விரைவில் இந்தியா மிகப் பெரும் பங்கை வகிக்கும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி, புலிகளைச் சமாளிக்க சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சி, ஐ.தே.முன்னணியை விடவும் அதிகமாக ஒத்துழைக்கும் எனலாம்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் கொள்கை ரீதியான உடன்பாடொன்றை ஏற்படுத்த நோர்வே அரசுக்கு இதுவரையில் இயலவில்லை என்பது வெளிப்படை.

எவ்வாறாயினும், இந்திய அரசின் பலமான ஆதரவு இல்லாமல், புலிகளுடன் மீண்டுமொரு யுத்தத்திற்குச் செல்ல இலங்கை அரசு ஒருபோதும் முற்படமாட்டாது. இத்தகையதொரு பொன்னான வாய்ப்பு ஏற்பட பல டசின் வருடங்கள் காத்திருக்க நேரிடலாம். இதேபோல, கிழக்கு மாகாணப் பின்னடைவுகளுக்குப் பின்னர் புலிகளும் யுத்தத்திற்குச் செல்ல ஆர்வம் கொள்ளப் போவதில்லை. எனவே, இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் கோரிக்கையை விட, செயலிழந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குப் புத்துயிர் கொடுப்பது இந்தியாவினதும், டிக்ஸிற்றினதும் ஆசீர்வாதத்தைப் பெற வழி வகுக்கலாம். இந்திய - இலங்கை உடன்பாட்டில் கூட இடைக்கால நிர்வாகத்திற்கு வழி உண்டு. சர்வதேச நாடுகளின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கைப் புனரமைப்பதும், ஒஸ்லோ தீர்மானத்துக்கு அமைய சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வைக் காண்பதும் ஐக்கிய இலங்கைக்கு அவசியம்.

By : Keith Noyahr.

Thanks to Daily Mirror : 29.05.2004


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## -வாழ்க்கை சரிதம்-

*முதல் பாட்டு*

படத்திற்குப் பாடல்கள் எழுதும் ஆற்றலும் அறிவும் என்னுள் விரவிக் கிடப்பதாக நானே எண்ணிக்கொண்டாலும், Expert's Opinion' - என்று கிரிக்கெட் வர்ணனையில் பழைய ஜாம்பவான்களின் விமர்சனங்களை வேண்டுவார்களே, அஃதே போல், வெள்ளித் திரையில் வித்தகர்கள் சிலரது வழிமொழிதல்களையும் விமர்சனங்களையும் நான் வேண்டிப் பெற்ற பிறகே, திரைத்துறையில் பிரவேசிக்கத் துணிவுற்றேன்.

அத்தகைய வித்தகர்களில் புகழ்சால் பின்னணிப் பாடகர்களாகிய திரு.டி.எம். சௌந்தரராஜன் அவர்களும் திரு.பி.பி. ஸ்ரீநிவாஸ் அவர்களும் அடங்குவர். இவர்கள் இருவரும் திருச்சி வானொலி நிலையத்திற்கு மெல்லிசை நிகழ்ச்சியில் பங்குபற்ற வருகை புரிந்த போதெல்லாம் என் பாடல்களை நிறையப் பாடியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வந்து போன நேரத்திலெல்லாம் சினிமாவிற்குப் பாட்டு எழுதுவதற்கான தகுதி எனக்கிருப்பதாக, 'சீல்' குத்தி விட்டுப் போனார்கள்.



திரு.டி.எம்.எஸ். எப்பொழுதேனும் திருச்சி வழியாக மதுரை போக நேர்ந்தால் எனக்கு ஒரு Post Card எழுதுவார். நான் திருச்சி ஜங்ஷனில் அவரை முதல் வகுப்புப் பெட்டியில் அதிகாலை நேரத்தில் சந்தித்து அளவளாவியிருக்கிறேன்.

"எருமை மாட்டெ தண்ணில போட்டுக்கிட்டு விலெ பேசினா எப்படியப்பா? மெட்றாசுக்கு வாரும்..." என்று திரு.டி.எம்.எஸ். என்னை அன்போடு அதட்டியிருக்கிறார்.

ஒரு Inland Leterஇல் நான் எழுதி அனுப்பிய முருகன் பாடல்களையெல்லாம் அவர் அழகுற இசையமைத்து எச்.எம்.வி. இசைத் தட்டுகளில் பதிவு செய்திருக்கிறார்.

திரு. P.B. ஸ்ரீநிவாஸ் அவர்களும் என்னை அன்பால் குளிப்பாட்டியவர். என் பட்டணப் பிரவேசத்திற்குப் பல முறை பச்சைக் கொடி காட்டியவர்.

திரு. P.B.S பன்மொழி வித்தகர். ஹிந்தியிலும் உருதுவிலும் கவிதைகள் யாத்துப் பாடுமளவு அந்தந்த மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். அவரைக் கல்விக் கடல் என்று சொன்னால் கூட, அது உயர்வு நவிற்சி ஆகாது. எல்லாவற்றிற்கும் மேலாக A to Z அவர் ஒரு பண்பாளர். என்னை நிறைய ஊக்கப்படுத்தியிருக்கிறார்.

'இசையால் எதுவும் வசிய மாகும்;
இதுவே இசையின் அதிசய மாகும்'

என்ற என் பாடலை Columbia Record இல் பாடி என்னைக் குதூகலப்படுத்தியவர். இத்துணை பேர், என் உடம்பில் உற்சாக ஊசிகளை ஏற்றியும், உடனடியாகச் சென்னைக்குக் குடியேற எனக்குச் சக்தியில்லாது போயிற்று. காரணம், என் குடும்பத்தின் வாய்க்கும் கைக்குமே எட்டிவந்த பொருளாதார நிலை.

'பெண் குலத்தின் பொன் விளக்கு' என்ற என்னுடைய நாடகம் ஒன்றை என் குருநாதர் கவிஞர் பெருமான் திரு. துறைவன் அவர்கள் திருச்சி வானொலியில் ஒலிபரப்பத் தேர்ந்தெடுத்தார். அதில் நடிப்பதற்காக புகழ் வாய்ந்த திரைப்பட நடிகர்கள் பலர் சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்டனர். 'வேலைக்காரி' புகழ், திரு.டி.பாலசுப்பிரமணியம், 'தேவகி' புகழ் திரு.எம்.என். கண்ணப்பா, இவர்களோடு மனோரமாவும் வி. கோபாலகிருஷ்ணனும் வந்திருந்தார்கள்.

ஏற்கெனவேயே கடிதங்கள் மூலமாக நானும் கோபியும் காதலை வளர்த்துக் கொண்டவர்கள். ரேடியோ நாடகத்திற்கு நடிக்க வந்திருந்த சமயம்தான், திரு. கோபியிடம், 'நான் சென்னை வந்து சினிமாவில் பாட்டெழுதி முயற்சிக்கலாம் என்றிருக்கிறேன்', என்று மெல்லக் காதைக் கடித்தேன்.

"Come on வாலி! நான் இருக்கேன். கவலைப்படாதீங்க..." என்று என் முதுகில் மிகப் பிரியமாக ஒரு தட்டுத் தட்டினார் கோபி.

என் தந்தையாரிடம் சொன்னேன். மிகுந்த சிரம நிலையிலும், என் முன்னேற்றம் கருதி என் தந்தையார் என்னை சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள்.

1958 டிசம்பர் முதல் வாரத்தில் எழும்பூரில் வந்து இறங்கினேன்.

(தொடரும்.....)




உலகில் இன்று ஏற்பட்டு வருகின்ற மரணங்களில் 1,49,000 (நூற்றுக்கு மூன்று சதம்) மரணங்களுக்குக் காரணம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைமைகளைப் பின்பற்றாமையும், கருத்தடைச் சாதனங்களை உரிய வகையில் உபயோகிக்காமையுமேயாகுமென உலக சுகாதார அமைப்பின் அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டுகின்றது.

இதன் பிரகாரம் எதிர்பாராத கருத்தரிப்புகள் ஏற்படுவதாகவும் அதன் பிரகாரம் தாய் மற்றும் சேய் மரணங்கள் வளர்ச்சி கண்டுள்ளதாவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

அனைத்துமே பெண்களுக்கு ஆபத்தானவையாகும்.

உலகம் முழுவதிலுமாக மேற்கொள்ளப்படுகின்ற சட்ட விரோதக் கருக்கலைப்புகள் வருடமொன்றுக்கு 20 மில்லியன்களையும் தாண்டுவதாக உலக சுகாதார அமைப்பு புள்ளிவிபரங்களின்படி சுட்டிக்காட்டி உள்ளது. உலகில் ஏற்படுகின்ற கருச்சிதைவுகளில் பத்தில் ஒன்று சட்ட விரோதக் கருக்கலைப்பினால் ஏற்படுவதாக அது கூறுகின்றது. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலேயே 9.5 வீதமான சட்ட விரோதக் கருக்கலைப்புகள்

# அதிகரித்து வரும் கர்ப்பக்கால மரணங்கள்!

இன்று உலகம் முழுவதிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்ற நவீன கருத்தடைச் சாதனங்களாக வில்லைகள், லூப் வகையறாக்கள், கொண்டம் சத்திர சிகிச்சைகள் என்பன நடைமுறையில் இருந்து வருகின்றன. இதே நேரம் சம்பிரதாயபூர்வமான மரபு வழி குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளும் உண்டு. இவ்வகையான எந்தவொரு முறையையும் உபயோகிக்காத மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

உலகில் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி நவீன கருத்தடைச் சாதனங்களை மக்கள் அதிகமாக உபயோகப்படுத்தி வருவதாகத் தெரிய வந்தது. இதில் 15 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் நூற்றுக்கு 8 முதல் 62 வீதத்தினர் நவீன முறையைக் கையாண்டு வருவதுடன் மரபு வழி முறையை நூற்றுக்கு 3 முதல் 8

மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான கருக்கலைப்புகளுக்கு உள்ளாக்கப்படுகின்ற பெண்களில் 80,000 பேர் மட்டில் வருடமொன்றுக்கு மரணத்தைத் தழுவுகின்றனர். அதே நேரம் கர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழுகின்ற மரணங்களில் 13வீதமானவை இவ்வாறான கருக்கலைப்புகளால் ஏற்படுகின்றன என்றும் உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது.

இதன்படி பார்க்கும் பொழுது 15க்கும் 45க்கும் இடைப்பட்ட வயதுகளையுடைய பெண்களில் 1000 பேரில் 13 வீதமானவர்கள் சட்ட விரோதக் கருக்கலைப்புகளுக்கு உட்படுவதாகவும் தெரிய வருகின்றது.

கர்ப்பம், பிள்ளைப் பேறு, கருச்சிதைவு போன்ற காரணிகளை அடிப்படையாகக்



வீதத்தினர் கையாண்டு வருகின்றனர்.

இவ்வாறு இருந்தபோதிலும், உலகின் அனைத்துத் தாய்மார்களும் பிள்ளைகளிடையேயான வயது வித்தியாசங்களைப் பேணவும் மேலும் தேவையற்ற குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கவும் வேண்டி புதிய கருத்தடைச் சாதனங்களின் பயன்படுத்துகையை 43 வீதத்திலிருந்து 85 வீதம் வரை வளர்க்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது.

அதே வேளை, உலகில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளின் மூலம் குழந்தைகளின் எண்ணிக்கையை பெண்கள் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமானால் உலகின் பல கண்டங்களிலுமாக அதன்பாலான ஈர்ப்பைப் பெண்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் அது கூறுகின்றது.

எதிர்பாராத வகையில் கருத்தரிப்புகள் நிகழ்வதால் தேவையற்ற பூரணமற்ற குழந்தை பிறப்புக்கள் இடம்பெறுவதுடன் கருச்சிதைவுகள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாத விடயங்களாக இருக்கின்றன.

இவ்வாறான தருணங்களின்போது, பெண்கள் சட்ட ரீதியற்ற கருக்கலைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அதனால் ஏற்படுகின்ற தீமைகள் கொஞ்ச நஞ்சமல்ல என்றும் கூற வேண்டும். இவற்றிலிருந்து பெண்களைக் காப்பாற்றும் முகமாகவே முறையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைமைகள் அவர்களிடையே தெளிவுபடுத்தப்பட வேண்டும் என உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது.

சட்டரீதியற்ற கருக்கலைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பெண்களது குறி வழியிலும், சிறுநீர் வழியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வேதனைகள் ஏற்படும் நோய்கள் தோன்றுவதாவும் தெரிய வருகிறது. அதே நேரம் எதிர் காலத்தில் டெஸ்ட் டியூப் மூலம் கருத்தரிக்கக்கூடிய அச்சுறுத்தல்களும் தென்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆகவே, இந் நிலைகள்

கொண்டு வருடந்தோறும் 5,85,000 பெண்கள் மரணமடைந்து வருவதாகக் கூறும் உலக சுகாதார அமைப்பு, தினமொன்றுக்கு இவ்வாறான மரணங்கள் 1600ஐத் தாண்டி விடுவதாகவும் கூறுகின்றது. இதில் 90வீதமானவை ஆசியா மற்றும் ஆபிரிக்கா கண்டங்களிலேயே நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே நேரம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளது குழந்தைகளது மரண வீதத்தையும் அபிவிருத்தியடைந்த நாடுகளது குழந்தைகள் மரண வீதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் 18 மடங்கு குறைவான குழந்தைகள் மரணத்தையே கொண்டிருக்கின்றன.

இதைத் தவிர மேலும் 50 மில்லியன் பெண்கள் கர்ப்பம் தொடர்பான பிற நோய்களால் பீடிக்கப்பட்டு வருவதாகவும் இதில் குறைந்த பட்சம் 15 மில்லியன் பெண்கள் நீண்ட கால நோய்களைக் கொண்டிருப்பதாகவும் அறிய முடிகின்றது.


உலகில் நடைபெற்று வருகின்ற நேரடியான பிரசவங்கள் 100,000த்தின் போது 430 தாய்மார்கள் மரணத்தைத் தழுவி வருவதாகவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இது 100,000 க்கு 480 ஆக இருப்பதாகவும் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் 100,000க்கு 27 என்றும் உலக சுகாதார புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருந்து வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் சுகாதாரக் குறைபாடுகளை எதிர்நோக்குவதும், பிரசவகால கவனிப்புகள் குறைபாடுகள் போன்றனவும் இத்தகைய மரணங்கள் ஏற்படக் காரணமாகும் எனக் கூறப்படுகின்றது.

இவற்றை விட உலகில், பிறந்து ஒரு மாத காலத்துள் இறக்கும் குழந்தைகள் மற்றும் இறந்து பிறக்கும் சிசுக்களின் எண்ணிக்கை 08 மில்லியன்களாகும்.

இதற்கான குறைபாடுகளாக, சீரற்ற சுகாதார வசதிகள், பணிவிடைகள், பிரசவ முகாமைத்துவ குறைபாடுகள் என்பன முன்வைக்கப்படுகின்றன.

- பாரூக் -




## தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

"நீங்கள் இங்கிருந்து விடுதலையாகுவதற்கு இன்னும் எத்தனை நாள்கள், மாதங்கள், வருடங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லுகிறேதோ?"

"இல்லை" ஜெக் சொன்னார். பிறகு அவர் வோஷ்பேசினுக்குக் கீழே காட்டினார். அங்கே ஒரு சிறு எறும்புக் கூட்டம் கூடியிருந்தது. நான் மெதுவாகவே முடிவெடுத்தேன். இரண்டும் இரண்டும் நாலு என்று அனுமானிக்க முடியாமல் இருந்தேன். ஜெக் விபரித்தார். ஒவ்வொரு நாள் வரவும் நாம் மூவரும் எறும்பு ஓட்டப் பந்தயத்தை ஏற்பாடு செய்வோம். அதுதான் பந்தயத் திடல் ஒரு விதத்தில் எறும்புகளில் Ascot" அவர் சிரித்தபடியே சொல்லுகிறார்.

திரு.பீல், அது ஏற்கெனவே கேட்டுப் பழக்கப்பட்ட ஒன்றைப் போல் தலையசைக்கிறார். பிறகு அவர் விபரிக்கிறார். பெல்மார்ஷ் சிறையில் ஐந்து ஆணையாளர்கள் இருக்கின்றனர். அவர்களில் க்ரேண்ட்செஸ்டரில் நடக்கும் எனது தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டதாக உறுதியளித்த அவர், என்னைக் கட்டாயமாக நாளை காலை 7 மணிக்கே தயாராகிவிடுமாறு பணித்தார்.

'ஏன் காலை ஏழு மணிக்கே செல்ல வேண்டும்? இறுதிக் கிரியைகள் பதினொரு மணிக்குத் தானே? அங்கே போவதற்கும் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம்தானே பிடிக்கும்?'

இதையெல்லாம் அவரிடம் கேட்பதற்கு நினைத்தேன். அவர் தனது ஆசனத்திலிருந்து எழுந்தவாறே "நீங்கள் கேம்பிறிட்ஜிலிருந்து திரும்பிய உடனே நான் உங்களை மீண்டும் சந்திப்பேன்." என்று கூறினார்.

திரு.பீல் "குட்நைட்" சொன்னார். ஆயினும் இரண்டாவது தடவையாகக் கைகுலுக்கவில்லை. நான் அவரது அறையிலிருந்து வெளிப்பட்டு எனது சிறைக் கூண்டுக்குப் போவதற்கான வழியைக் கண்டுபிடிப்பதற்கு முயன்றுகொண்டிருந்தேன். நான் யாராலும் அழைத்துச் செல்லப்படாமையால் எனது வழியைத் தவறவிட்டுவிட்டேன். ஓர் அதிகாரி உடனே என் உதவிக்கு ஓடி வந்தார். நீண்ட ஒடுங்கிய வழியில் அவர் என்னைக் கூட்டிச் சென்றார். நான் தப்பிச் செல்வதற்கு முயற்சிக்கவில்லை என்பதில் அவருக்கு நம்பிக்கை இருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. என்னால் எனது வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தனியே விடப்பட்டேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

காலை 9 மணி.

மீண்டும் எனது சிறிய அறையில் தாழிடப்பட்டதும் நான் 'The moon's a Balloon' புத்தகத்தைத் திரும்பவும் வாசிக்கத் தொடங்கினேன். டேவிட் நிவென் உடைய முதலாவது செக்ஸ் / பாலியல் அநுபவத்தை வாசித்ததும் சிரித்தேன். ஆம் சிரித்தேன்.

(பக்கங்கள் வளரும்)

# ஏகாதிபத்திய பயங்கரவாதத்திற்கு........ முடிவுதான் என்ன?

அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் பல சுற்றுக்களாக நடந்த ஜனாதிபதித் தேர்தல் தெரிவுகளில் இப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை எதிர்த்து, இவ்வருடம் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட ஜோன் ஹெரி தேர்ந்தெடுக் கப்பட்டார்.

நவம்பர் 11ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் மும்முரமாக நடந்துவருகின்றன. குடியரசுக் கட்சி சார்பில் புஷ் போட்டியிடுகிறார். ஜோன் ஹெரியின் பிரசாரத் தந்திரங்கள், உத்திகள், நடவடிக்கைகள் புஷ்ஷுக்கு உள்ளூரப் பயத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஜோன் ஹெரி 45 வயதுடைய ஒரு வியட்நாம் போர்வீரன். வியட்நாம் போரின் பின்னர் அமெரிக்க பாதுகாப்புப் படையில் இருந்து விலகி அரசியலுக்கு வந்து அமெரிக்க ஜனநாய கக் கட்சித் தொண்டராகவே முதலில் இணைந் தார். இன்று ஜனாதிபதித் தேர்தலில் புஷ்ஷுக்கு எதிராகப் போட்டியிடுகிறார்.

புஷ்ஷின் வெளியுறவுக் கொள்கைகளை நேரடியாகவே விமர்சிக்கும் ஹெரி, படுகுழிக்குள் சென்றுகொண்டிருக்கின்ற பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முக்கிய குறிக்கோளுடன், ஏனைய நாடுகளுக்கு நன்மை கிடைக்கும் வண்ணம் தனது நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கிறார்.

அபுகிரைப் சிறை வரை சென்று அமெரிக்காவை மட்டுமல்ல, உலகையே சர்ச்சைக்குள் தள்ள வைத்திருக்கும் ஈராக் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து ஏகாதிபத்திய சர்வாதிகார நடவடிக்கைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் முடிவு காண்பதாகவும் ஹெரி தெரிவிக்கிறார்.

புஷ் தனது சுய இலாபத்துக்காக பெருமளவு அமெரிக்கப் படைகளைப் பலிக்கடா ஆக்கு கிறார். ஈராக்கின் பாலைவனங்களில் நமது உறவுகள் செத்து மடிகின்றன. உலகின் அனைத்துப் பகுதிகளுமே இப்பொழுது குழப்ப நிலையில் உள்ளன போன்ற பல குற்றச் சாட்டுக்களை அமெரிக்க மக்கள் ஜனாதிபதி புஷ்ஷுக்கு எதிராக முன்வைத்து வருகின்றனர்.

தீவிரவாதத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதே தனது முழு நோக்கம் எனத் தெரிவித்த புஷ்ஷுக்கு செப்.11, இன்னும் பலமாக அமைந்தது. 2001ஆம் ஆண்டு நடந்த இச் சம்பவம் உலகை அமெரிக்காவுக்கு ஆதரவான தாகக் காட்ட முற்பட்டது. கடந்த தேர்தலில் புஷ் பெருவாகை சூடினார் என்பதில்லை. ஆனால் இம் முறை நடக்கின்ற தேர்தலில் ஹெரி வெற்றியீட்டுவார் என்கிறது அமெரிக்காவின் பல முக்கிய கருத்துக் கணிப்புக்கள்.

இப்போது ஈராக்கில் நடப்பதெல்லாம் ஒருவகை இமேஜ் யுத்தமே, தனது தன்மானத்துக்காக அமெரிக்கப் படைகளையும் ஈராக் மக்களையும் வீண் துன்பத்துக்குள் தள்ளும் புஷ்ஷின் செயற்பாடுகளுக்கு ஆதரவு கிடைக்குமா என்பதுதான் இப்போதைய கேள்வி ஆகும்.

ஈராக்கில் யுத்தம் ஆரம்பிக்கும் முன்னர் இருந்த 60 வீதமான மக்களின் ஆதரவு, இப்போது பெருமளவுக்குக் குறைந்துவிட்டது. அதற்குக் காரணம், ஈராக்கில் நடக்கின்ற அட்டூழியங்கள், கொடுமைகள் பல அமெரிக்காவின் இமேஜ் காரணமாக சர்வசாதாரணமாக வெளி வந்ததுதான்.

தற்போதைய சூழலில் ஆசிய நாடுகளையும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இழுக்கும் முயற்சியில் அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலாளர் றம்ஸ் பீல்ட் இறங்கியிருக்கிறார்.

பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் தொடுத்த யுத்தம் சரி என்பது போல் ஜோர்ஜ். டபிள்யூ. புஷ் பேசியிருக்கிறார். இவரது இக் கருத்துக்கு அரேபிய சமூகம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகமே ஆத்திரப்பட்டது. உண்மை என்னவென்றால் யூதர்களை எதிர்ப்பது கொஞ்சம் கஷ்டம் என்பது.

எதற்கும் ஈராக்கில் இடைக்கால நிர்வாகம் உருவாகி அதற்குள் ஈராக்கின் செயற்பாடுகள் முடங்கும் வரைக்கும் அமெரிக்கத் தேர்தல் வியூகங்களில் கொஞ்சம் சிரமம் இருக்கிறது. ஜூன் 30இல் இருந்து அதற்கான அடிக்கல் நாட்டப் படுகிறது. அமெரிக்காவின் ஹீரோவாக வர்ணிக்கப் படும் புஷ் பதவியேற்ற பின்பு பொருளாதாரம் பலம் பெற்றிருக்கிறது. வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு ஓரளவுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த வகையில் ஈராக் விவகாரம் சிவப்பு வளையமானது மட்டுமே அவருக்கு எதிராக உள்ளது என்பது மட்டும் உண்மை.

அரசியல் என்பது ஒரு சாக்கடை என்ற கட்டுப்பாட்டுக்குள் வந்தால் அன்றைய தினம்தான் தேர்தல் தீர்மானம். தனது ஈராக் நடவடிக்கைகளை இன்னும் பல வருடங்களுக்குத் தொடரவே எண்ணியுள்ள புஷ்ஷிற்கு ஜனாதிபதித் தேர்தல் ஒரு அளுங்குப் பிடியாய் உள்ளது. அதற்குள் ஈராக் விவகாரத்தை ஒரு சுமுக நிலைக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்பதுதான் இப்போதைக்குத் தீர்வாகின்றது.

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாமை ஒரு சர்வாதிகாரியாகக் காட்டித் தம்மை வரம் கொடுக்கும் தெய்வமாக வர்ணித்த அமெரிக்கா அபுகிரைப் சிறைச்சாலை விடயங்கள் மூலம் இப்போது அடங்கியிருக்கிறது. அமெரிக்கா தனது படைகளை ஈராக்கிற்குள் நகர்த்தி வெகு விரைவில் ஈராக்கைத் தன் வசமாக்கியது. ஒரு சில நாட்கள் அமைதியானபோது ஏதோ நிம்மதி இருந்தது. ஆனால், அதன் பின்னரான விஷ்வரூபம் தான் மீண்டும் இன்னும் ஒரு வியட்நாம் உருவாகுமா என்ற கேள்வியை அனைவரது மனங்களிலும் ஏற்படுத்தியது.

இரசாயன ஆயுதங்கள் உள்ளன என்ற குற்றச்சாட்டுடன் ஈராக்கிற்குள் நுழைந்து இதுவரை அதற்கான தடயங்கள் கூடக் கண்டுபிடிக்கப் படவில்லை. அல்கொய்தா தொடர்ந்தும் தனது கைவரிசை களைக் காட்டி வருகிறது. புஷ்ஷின் சிலுவைப் போருக்கு எதிராக இஸ்லாமியர்கள் புனிதப் போர் நடத்திவருகின்றனர்.

1969களில் வியட்நாமில் நடந்த 'மைலாய் படுகொலைகள்' போல் ஈராக் சித்திரவதைகள் குறித்த விடயங்களும் தகவல்களும் மிகவும் மும்முரமாக முழு உலகுக்குமே வெளியானது புஷ்ஷையும் அதனது கூட்டுகளையும் மனச் சஞ்சலத்துள் தள்ளிவிட்டன.

இப்போதைக்கு ஜனாதிபதி புஷ்ஷிற்கு வந்துள்ள அவமானம் காரணமாக அவரால் முன்போல் வேகமாகவும் துணிவாகவும் செயற்பட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் அண்மையில் வத்திக்கான் சென்று பாப்பரசரைச் சந்தித்துக் கௌரவித்ததுடன் ஆசிபெற்றார். அங்கு பாப்பரசர் மக்களைத் துன்பப்படுத்தும் நடவடிக்கைகளை விட்டுவிடுமாறு கேட்டதுடன் ஈராக்கை முதன்மைப் படுத்தியிருக்கிறார். இவை எல்லாம் புஷ்ஷை இன்னும் குழப்பத்திற்குள் வைத்திருக்கிறது.

எது எப்படியென்றாலும் அமெரிக்கர்களின் ஹீரோவான புஷ் எப்போது தனது சர்வாதிகார ஈராக் நடவடிக்கைகளை உதறிவிட்டு வருவார் என்பது தான் அனைவரதும் சிந்தனையில் உள்ளது.

இன்னொரு வகையில் பார்த்தால் ஈராக்கில் நடக்கின்ற அட்டூழியங்களுக்குள் இருந்து அமெரிக்கப் படைகளை மாத்திரம் மீட்டு வெளிக்கொண்டுவருவதன் மூலம் ஈராக் சுதந்திரப் படுமா, மீண்டும் இப்போது நடப்பது போன்ற இன்னல்கள் பிரச்சினைகள் தொடராதா என்பதே கேள்வி.

அவற்றுக்குத் தீர்வாக ஈராக்கில் இடைக்கால அரசை அமைத்து தானாகப் படைகளை நகர்த்தாதது போன்று ஐ.நா.மற்றும் இடைக்கால நிர்வாக சபை என்பனவற்றின் மூலம் படைகளை அகற்றி, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் மனங்களை உடைக்காத வண்ணம் புஷ் தீர்வு காணப்போகிறார் என்பது கூட உண்மையாக இருக்கலாம்.

அமெரிக்க அரசின் மிக முக்கிய பதவியான ஜனாதிபதி என்ற இடத்துக்கு நவம்பரில் நடக்கும் தேர்தல் எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும். புஷ் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டால், பயங்கரவாத எதிர்ப்புக்கு மீண்டும் பச்சைக் கொடி கிடைத்துவிட்டதாகவும், அராபிய எதிர்ப்பும் கட்டாயம் என்பதும் உறுதி.

**ஏ. இலக்குவன்**

இல்லை நாம் மகிழ்வுடன் இருப்பது மட்டுமல்ல, உலக மக்களும் இவ்வாறிருக்க வேண்டும். பிரச்சினைகள் தணியட்டும். உலகம் அமைதியடையட்டும் என்றால் ஹெரி ஜனாதிபதியாவார். ஆனால், அவர் ஜனாதிபதியானால் அமெரிக்கா என்ற நாட்டிற்காக வியட்நாமில் போராடிய போர்வீரன் என்ற ரீதியில் அவரது இப்போதைய நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறிருக்கும் என்பது அச்சத்துக்குரியதே. ●

# கதிர்காமரின் இந்திய விஜயம்! பலன் என்ன?

இந்தியாவின் புதிய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியதும் உடனடியாக இந்தியாவுக்கு விஜயம் செய்த பிறிதொரு நாட்டின் முதலாவது வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே. இத்தகைய விஜயத்தில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. எனவே, இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் பெரிதும் இந்தியாவை தங்கியிருக்கின்றன. குறிப்பாக அதன் அரசியல் நிலைப்பாடுகளும், இனப் பிரச்சினை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான விடயங்களும் இந்தியாவின் அங்கீகாரத்தை நாடி நிற்பவையாகும்.

தென்கிழக்காசியாவின் பிராந்திய வல்லரசாகத் திகழும் இந்தியா, இலங்கையின் மிக நெருங்கிய அண்டை நாடாகவும் விளங்குகிறது. அத்தோடு இலங்கையுடன் ஏராளமான இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளதுடன் இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நீண்டகாலமாக முக்கிய பங்காற்றி வருகிறது. இது தொடர்பாக இலங்கையுடன் உத்தியோகபூர்வ உடன்பாட்டொன்றை 1987இல் இலங்கை – இந்திய உடன்படிக்கை என்ற பேரில் மேற்கொண்டிருந்தது.

அதேவேளை, இலங்கையின் இனப் பிரச்சினையின் எதிர் விளைவுகள் பல இந்தியாவில் எதிரொலிக்கின்றன. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியையே பலிகொள்ளும் அளவுக்கு அது சென்றிருந்தது.

இத்தகைய தொடர்பினைக் கொண்டுள்ள இந்தியாவில் புதிய அரசாங்கம் ஒன்று பதவியேற்கும் தருணத்தில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் விஜயம் செய்து சாதகமான உறவு நிலையினை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிப்பது எவரும் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே. கடந்த அரசாங்க காலத்தில் இத்தகைய செயற்பாட்டை முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட கரிசனையுடன் செய்துகொண்டு வந்தமையை இங்கு நினைவு கூரலாம். ஏன், முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட பல இந்திய விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

கதிர்காமரின் விஜயத்தில் பாரிய அரசியல் நோக்கம் ஏதாவது இருக்கக் கூடுமென எண்ணுவதற்கு இல்லை. எனவே, இது யாவரும் எதிர்பார்க்கக் கூடிய சம்பிரதாயபூர்வமான ஒன்றுதான். புதிய இந்திய அரசாங்கம் பதவியேற்று அதன் நிலைப்பாடுகள், வெளிநாட்டுக் கொள்கைகள் என்பன வகுக்கப்பட்ட பின்னர் ஒரு அரசியல் திட்டமொன்றை முன்வைப்பதற்குக் கதிர்காமர் முனைந்தால் அது எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும். தற்போதைக்கு அத்தகைய நிலைமை ஏற்படவில்லை.

> ராஜீவ் கொலை வழக்கில் வேண்டப்படுபவர்களாகிய புலிகள் தலைவர் பிரபாகரன், பொட்டுஅம்மான் ஆகியோரை நாடுகடத்தும்படியான தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனினும், அதனைத் தற்போதைக்கு வலியுறுத்தப் போவதில்லையென இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், கதிர்காமரின் விஜயத்தில் உடனடி நோக்கங்கள் சில இருக்கவே செய்யும். முக்கியமாக, புதிய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக்கொள்வதற்கான முயற்சிகள் இவ் விஜயத்தில் அமைந்திருக்கும். அத்துடன் இலங்கை இனப் பிரச்சினையில் அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாடுகளையும் முன்னெடுக்கும் அணுகுமுறைகளையும் பற்றி, புதிய இந்திய அரசாங்கத்தின் தலைவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய ஒரு தேவையையும் இவ் விஜயத்தின் நோக்கம் கொண்டிருக்கிறது. தற்போதைய சமாதான முயற்சிகளில் மூன்றாந் தரப்பினராக நோர்வேயின் பங்கெடுப்புக் குறித்தும் இந்திய புதிய தலைமைகளுக்கு இருக்கக் கூடிய எச்சரிக்கையுடனான அக்கறையை மதித்து இந்தியாவிடம் இதன் செயற்பாடுகள் வரையறைகளைப் பற்றி விளக்க வேண்டியுமுள்ளது.

இவற்றுக்குப் புறம்பாக நலிந்து போயுள்ள இலங்கைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இந்தியாவின் பொருளாதார உதவிகள் பற்றியும் பேச வேண்டியதாகவுள்ளது. இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் பொருளாதார உதவிக்கான உத்தரவாதங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தேக்கத்தையடுத்து கைக்கெட்ட முடியாத நிலையில் உள்ள இத் தருணத்தில் உடனடி நெருக்கடிகளைச் சமாளிக்க இந்தியாவின் ஒத்துழைப்பை இலங்கை கோரக் கூடும்.

இத்தகைய நோக்கங்களுடன் அமைந்திருக்கக் கூடிய இந்திய விஜயத்தில் கதிர்காமருக்குச் சாதகமாகக் கிடைத்திருப்பவை என்ன என்பதை எடுத்து நோக்கினால், அவை கதிர்காமரின் விஜயத்துக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியவையாகவே காணப்படுகின்றன. கதிர்காமர் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங்கையும், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தியையும், பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்திருந்தார். இச் சந்திப்பில் சோனியாகாந்தியுடனான சந்திப்புப் பற்றிய விபரங்கள் எவையும் வெளிவராவிட்டாலும் இந்திய அரசாங்கத்தால் கதிர்காமருக்கு தெரிவிக்கப்பட்ட செய்திகள் சில



வெளிவந்திருந்தன.

குறிப்பாக, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்குமென்றும், ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத் தீர்வொன்றை ஈட்டுவதையே இந்தியா விரும்புகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது இலங்கை கடைப்பிடிக்கும் தற்போதைய அணுகுமுறைக்கு இந்தியாவால் வழங்கப்பட்ட ஓர் அங்கீகாரமாகக் கருதக் கூடிய ஒன்று.

இதேவேளை, இதற்கு மேலதிகமாக வடக்கு – கிழக்குப் புனர்நிர்மாணப் பணிகளுக்கு இந்தியா நேரடியாக உதவுமென்றும் தெரிவித்திருந்தது. இது இச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நேரடியான பங்கொன்றை இந்தியா வகிக்காவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் தனது பங்களிப்பைக் கூடிய அளவில் செலுத்த வேண்டுமென்ற அதன் அக்கறையை வெளிப்படுத்துவதாகவுள்ளது. இதுவும் கதிர்காமரின் விஜயத்துக்குக் கிட்டிய ஒரு வெற்றி என்றே கூறலாம். இந்தியா புலிகளைத் தனது நாட்டில் தடை செய்துள்ள நிலையில், பேச்சுவார்த்தைகளில் நேரடியாகப் பங்குபற்றுவதென்பதில் அதற்கு ஒரு சங்கடம் உள்ளது. இதனாலேயே அது புனர்நிர்மாணப் பணிகளில் தனது பங்களிப்பைச் செலுத்த முன்வந்துள்ளது.

இதேவேளை, புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் இரண்டு வருடத்திற்கு நீடித்துள்ளது. கதிர்காமரின் விஜயத்தின் மூலம்தான் இது ஏற்பட்டதென்று கூறுவதற்கில்லையென்றாலும், இத்தகைய தடை நீடிப்பு என்பது புலிகள் மீது ஒரு அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமான அம்சமாகவே அமைந்துள்ளது.

இருப்பினும் ராஜீவ் கொலை வழக்கில் வேண்டப்படுபவர்களாகிய புலிகள் தலைவர் பிரபாகரன், பொட்டுஅம்மான் ஆகியோரை நாடுகடத்தும்படியான தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனினும், அதனைத் தற்போதைக்கு வலியுறுத்தப் போவதில்லையென இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதுவும் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்திற்குச் சங்கடங்களை உருவாக்காதிருக்கும் வகையில் இந்திய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும்.

மேலும் பிரதானமாக, கடந்த அரசாங்க காலத்தில் இரு நாட்டின் முன்னாள் அரசாங்கங்கள் மேற்கொள்ள முனைந்திருந்த இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை, இரு நாட்டின் முன்னாள் அரசாங்கங்களும் தொடர்ந்து மேற்கொள்வதெனவும், அதனை ஈட்டுவதற்குத் துரித கதியில் செயற்படுவதெனவும் இணக்கம் காணப்பட்டிருந்தமை கதிர்காமரின் விஜயத்தில் அவருக்குக் கிட்டிய மிகச் சாதகமான வெற்றியாகும். இப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான சில அறிக்கைகள் ஏற்கெனவே இரு தரப்பாலும் பரஸ்பரம் பரிமாறப்பட ஆரம்பித்துள்ளது.


ஒட்டுமொத்தத்தில் பார்க்கப் போனால் கதிர்காமரின் இவ்விஜயம் அவருக்கு வெற்றி என்றுக் கூறிக்கொள்ளக் கூடிய பல அனுகூலங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்றே கூறலாம்.

# பாப்பா முரசு



சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சக்திரு வருளினைச் சேர்க்கும் -மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
தாமதப் பொய்த் தீமைகளைப் போக்கும்.

-சுப்பிரமணிய பாரதியார்



## நரியும் கீரியும்

பாப்பா முரசு சிறுகதை

அந்தக் காட்டில் ஒரு நரி வசித்து வந்தது. அன்று அதற்குச் சரியான இரை கிடைக்கவில்லை. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அருகே இருந்த ஒரு ஆற்றங்கரையோரத்தில் இரண்டு கீரிகள் விளையாடிக்கொண்டிருந்தன.


ஒரு கீரிக்குப் பசியெடுத்தது. உடனே அது ஆற்றுக்குள் இறங்கி ஒரு மீனைக் கவ்விப் பிடித்தது. அது ஒரு பெரிய மீன். அந்த மீனின் வால் பகுதி கீரியின் வாயில் மாட்டிக்கொண்டது. அந்த மீன் தப்பிக்க இப்படியும் அப்படியும் குதித்தது. உடனே அந்தக் கீரி ஆற்றங்கரையோரம் இருந்த மற்றொரு கீரியை உதவிக்கு அழைத்தது. உடனே அந்தக் கீரியும் ஓடி மீனின் வாய்ப் பகுதியைக் கவ்விப் பிடித்தது. இப்போது மீனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இரண்டு கீரிகளும் மீனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து கரையில் போட்டன. அந்த மீன் இப்போது இறந்து போயிருந்தது. இரண்டு கீரிகளும் அந்த மீனைப் பங்கு போட்டுச் சாப்பிட விரும்பின.

“நான்தான் மீனைப் பிடிச்சேன். அதனால எனக்கு அதிக பங்கு வேணும்.”

ஒரு கீரி சொன்னதை மற்றொரு கீரி மறுத்தது.

“நீ பிடிச்சிருக்கலாம். ஆனா நான் வந்து தலையைப் பிடிக்கலேன்னா, அந்த மீனை நீ பிடிச்சிருக்க முடியாது. அதனால எனக்குத்தான் நிறையப் பங்கு தரணும்.”



வாக்குவாதம் முற்றிச் சண்டை ஆரம்பித்தது.

இதுதான் சமயமென்று நரி அங்கே வந்தது.

“உங்க ரெண்டு பேரோட பிரச்சினையை நான் தீர்த்து வைக்கட்டுமா?”

இரண்டு கீரிகளும் இதற்குச் சம்மதித்தன.

“நீதான் முதல்ல மீனோட வாலைப் பிடிச்சே. அதனால வால் பகுதி உனக்குச் சொந்தம்”

நரி மீனின் வாலைப் பிய்த்து ஒரு கீரியிடம் கொடுத்தது.

“நீ மீனோட வாயைப் பிடிச்சே. அதனால மீனோட வாய்ப் பகுதி உனக்குச் சொந்தம்.”

நரி மீனின் வாய்ப் பகுதியைப் பிய்த்து மற்றொரு கீரியிடம் கொடுத்தது. இரண்டு கீரிகளும் இதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டன.

நரி மீனின் உடல் பகுதியைக் கவ்விக்கொண்டு புறப்பட எத்தனித்தது. இப்போது இரண்டு கீரிகளும் நரியைத் தடுத்தன.

“எதுக்காக மீனோட உடம்பைத் தூக்கிகிட்டு போகப் பார்க்கிறே. அதை பங்கு போட்டு எங்களுக்குக் குடு.”


“உங்க ரெண்டு பேரோட பிரச்சினையை நல்லபடியா தீர்த்து வெச்சேன் இல்லை. அதனால மீனோட உடம்பு எனக்குத்தான் சொந்தம்”

நரி அந்த உடலைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போனது.

கீரிகள் ஏமாற்றத்துடன் நரி ஓடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றன.

ஆம் பிள்ளைகளே! இரண்டு கீரிகளும் ஒற்றுமையுடன் செயற்பட்டிருந்தால் அந்த மீனை இருவரும் சமமாகப் பங்கிட்டுச் சாப்பிட்டிருக்கலாம். ஒற்றுமையின்றித் தமக்குள்ளேயே சண்டை பிடித்ததால், இடையில் சமாதானம் செய்ய வந்த நரியும் தனக்கு பங்குபோட்டுக் கொண்டது. அதனால் கீரிகள் வெட்கிப் போயின. ஆகவே எந்தப் பிரச்சினையையும் நாமே நமக்குள் தீர்த்துக்கொள்ளப் பழக வேண்டும். இல்லையேல் விபரீதம் ஏற்பட்டு நாம் ஏமாற்றம் அடைவோம். புரியுதா குட்டீஸ்!

## சிரிக்கும் தாத்தா!



‘உண்மை, அகிம்சை, இரண்டும் நமது
கண்கள்’ என்னும் தாத்தா.
‘உயிர்கள் யாவும் உறவு’ என்றே
உணர்த்தும் காந்தித் தாத்தா.

உழைத்திடாமல் உண்ணு வோரைத்
திருடர் என்பார் தாத்தா.
உலகில் உள்ள இருளைப் போக்கும்
ஒளியாய் வந்த தாத்தா.

எங்கள் வீட்டுக் கூடம் அதிலே
இருக்கும் காந்தித் தாத்தா.
என்றும் என்னைப் பார்த்துப் பார்த்துச்
சிரிக்கும் காந்தித் தாத்தா.


நமது நாட்டின் சுதந்திரத்தைப்
பெற்றுத் தந்த தாத்தா.
நாமெல் லாரும் வாழும் வழியைக்
கற்றுத் தந்த தாத்தா.

## உங்கள் பொது அறிவு எப்படி?

### விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| 1. டைனமைட் | - அல்பிரேட் நோபல். |
| 2. மின்னற் கடத்தி | - பெஞ்சமின் ஃபிராங்ளின். |
| 3 மின்கலம் (பற்றறி) | - அலெக்ஸான்றா வோல்டா. |
| 4. சுரங்கக் காவல் விளக்கு | - சேர் ஹம்பிறி டேவி |
| 5. நீராவி இயந்திரம் | - ஜேம்ஸ் உவாட். |
| 6. அம்மை | - எட்வேட் ஜென்ன. |
| 7 விசர்நாய்க் கடி மருந்து | - லூயி பாஸ்டர். |
| 8. கசநோய்க் கிருமி | - றொபேட் கொச். |
| 9. இரத்தத்தின் சுற்றோட்டம் | - வில்லியம் ஹார்வே. |
| 10. அணுக் கொள்கை | - ஜோன் டால்டன். |

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.06.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 549
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 547

**பரிசுக்குரியவர்:**
கி. லக்ஷணா,
கல்வளை,
சண்டிலிப்பாய்.

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| ரா.திவ்யா, தரம் 5B, ப/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | பா. சம்ருத் நஸீர், இல: 189/2, மீரானியா வீதி, கொழும்பு-12 |
| ஏ.எஸ். ஜெனிபர், இல.120, நூறு வீட்டுத் திட்டம், எழுத்தூர், மன்னார். | அருட்செல்வம் செந்தூரன், 246, அன்புவழிபுரம், திருகோணமலை. |
| மஷிட்டா மௌஜூட், B 14 1/7, சொய்சாபுர தொடர் மாடி, மொரட்டுவ. | ஸ்ரீ. சரண், த.சி. வீதி, ஆரையம்பதி-01 |
| தி. சதிஸ் நாபா, இல: 06, கெமுனு லேன், கிராண்ட்பாஸ், கொழும்பு-14. | எப். பி. மரியா டிலுக்ஸன், இல.23, முதலாம் குறுக்குத் தெரு, எமில்நகர், மன்னார் |
| எம். எச். அமானி, 2ஆம் வகுப்பு, கஹட்டபிட்டியா, முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | சி. துஷானி, 23, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |

## அதிசய உலகம்

### நம்பிக்கை



18ஆம் நூற்றாண்டில் இருந்து 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரைக்கும் பழைமை மீது நம்பிக்கை கொண்ட இந்துக்கள் கடல் கடந்து பயணம் செய்வதில்லை. அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது.



பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்பதைக் கண்டுபிடித்துச் சொன்னவர் வானவியல் விஞ்ஞானி கலிலியோ.

15ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் வசித்த முஸ்லிம் மதக் குருக்கள் கோப்பி பருகுவதற்குத் தடை விதித்தனர். கோப்பி ஒரு மயக்கம் தரக்கூடிய போதைப் பொருள் என்று அவர்கள் விளக்கம் தந்தனர்.




## உள்ளங்கையில் உலகம்

அமெரிக்காவைச் சேர்ந்த டிரேக் என்பவர்தான் உலகின் முதல் எண்ணெய்க் கிணற்றின் உரிமையாளர் ஆவார். இவர் தம்முடைய நிலத்தைத் தோண்டும்போது ‘பிசுக்’கான கரிய பொருள் வெளிப்படவே அது என்ன? என்று அறிய பலரை நாடினார். பலருக்கு அதைப் பற்றித் தெரியாததால் மேற்கொண்டு ‘டிரேக்’ முயற்சி செய்யவில்லை. அவருக்குப் பின் வந்தவர்கள் எண்ணெயின் முக்கியத்துவம் புரிந்து செயற்பட்டதால் கோடீஸ்வரர்களானார்கள்.

உலகின் முதல் கம்ப்யூட்டர் புரோக்ராம் அமைத்த பெருமை ஒருபெண்மணிக்கே போய்ச் சேருகிறது. ‘அகஸ்டா’ எனும் இங்கிலாந்துப் பெண்மணி 1852ஆம் ஆண்டில் ஐந்து கார்டு கொண்ட புரோக்ராம் அமைத்தார். என்றாலும் இவர் பயன்படுத்திய ஆரம்ப காலக் கம்ப்யூட்டர் கருவி ‘சார்லஸ் பாபேஜ்’ எனும் விஞ்ஞானியால் உருவாக்கப்பட்டது.




# விண்வெளியில் வெடித்துச் சிதறிய கொலம்பியா விண்கலம்



சில காலமாக விண்வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்கல மத்திய நிலையத்தின் செயற்படுத்துகை தொடர்பாகவும் ஏனைய விஞ்ஞான ஆய்வுகள் சிலவற்றை மேற்கொள்வது தொடர்பாகவும் விண்வெளி வீரர்கள் சிலருடன் விண்வெளிக்குச் சென்ற கொலம்பியா விண்கலம் மீள பூமியை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தபோது 2003, பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெடித்துச் சிதறியது. இந்த இறுதித் தறுவாயின்போது விண்வெளி வீரர்களும் கட்டுப்பாட்டு நிலையமும் எவ்விதமான செயற்பாடுகளை மேற்கொண்டன? விண்கலம் வெடித்துச் சிதறுவதற்கான காரணம் என்ன? போன்ற கேள்விகளுக்குப் பதிலாகப் பல்வேறு விடயங்கள் தற்போது வெளிவந்த வண்ணமுள்ளன. இவ்வாறான விடயங்கள் அனைத்தையும் கொண்டு இறுதியாக எழுதப்பட்டுள்ள விடயங்களையே இங்கு தருகின்றோம்.

117 தொன் எடையுடன் கூடிய கொலம்பியா விண்கலம் 16 நாட்களுக்கான தனது விண்வெளிச் செயற்பாடுகளை முடித்துக்கொண்டு மணிக்கு 30000 கிலோ மீற்றர் வேகத்தில் பூமியை நோக்கி வந்துகொண்டிருந்தது. எனினும் அதனுள் இருந்த விண்வெளி வீரர்கள் 7 பேரும் இந்த வேகத்தை உணர்ந்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவில்லை. தாங்கள் மீண்டு தங்களது தாயக தேசத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சி மாத்திரமே அவர்களிடம் குடிகொண்டிருந்தது. இச் சந்தர்ப்பமானது அந்தளவுக்குச் சந்தோசத்தைத் தரக் கூடியதாக அவர்கள் உணர்ந்திருந்தனர்.

அவர்களை வரவேற்பதற்காக கெனடி விண்கல ஆராய்ச்சி நிலையத்தில் சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு மக்கள் கூடி நின்றனர். அமெரிக்க நாஸா (Nasha National Aeronatics) நிறுவன முக்கியஸ்தர்கள், பிரதம அதிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் 7 விண்வெளி வீரர்களினது உறவினர்கள் என்போர் விஷேட அதிதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரிவில் காணப்பட்டனர். ஏனையோர் பொதுமக்களாவர்.

துப்பாக்கித் தோட்டா பயணிக்கக் கூடிய வேகத்திலும் பார்க்க 8 மடங்கு கூடிய வேகத்தில் பூமியை நோக்கி விரைந்துகொண்டிருந்த கொலம்பியா விண்கலம், இன்னும் 15 நிமிடங்களில் அமெரிக்க பூமியை வந்தடையச் செய்யும் பாரிய பொறுப்பு விண்கலத்தின் இயக்குநரான (விமான ஓட்டி) 40 வயதுடைய ரிக் ஹஸ்பன்ட் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. விண்கலங்களைத் தரையிறக்குவது தொடர்பாக நாஸா நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து விரிவுரைகளின்போதும் ரிக் ஹஸ்பன்ட்டின் பெயர் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு விண்கலத்தை இப்படித்தான் தரையிறக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டுவதற்கு உதாரணமாக, ரிக் ஹஸ்பன்ட் விண்கலங்களை தரையிறக்கும் முறையே முன்வைக்கப்பட்டு வந்தது. அவர் இப் பணியைக் கடுகளவேனும் பிசகாமல் செய்யக் கூடியவர். விண்கலங்களைத் தரையிறக்குவதில் அவரை மிஞ்சிய ஒரு நபர் இல்லை என்றே கூற வேண்டும். அந்தளவுக்கு அவர் அதில் விற்பன்னராகத் திகழ்ந்தவர்.

தான் இப்போது தரையிறக்கப் போகின்ற கொலம்பியா விண்கலமானது வாயு மண்டலத்தினுள் பிரவேசித்து, வாயு அணுக்களுடன் மோதி, சூடேறி, நெருப்புத் தணல் போல் மாறிவிட்டதை அவர் அறிந்துகொண்டார். இது பொதுவாக எந்தவொரு விண்கலமும் முகங்கொடுக்கக் கூடியதொரு நிலையாகும்.

"1650 சென்ரிக்ரேட் அளவுக்கு விண்கலம் தற்போது சூடேறியுள்ளது. விண்கலத்தின் முன் பகுதி சூடேறி மின்னுகிறது" என அவர் தனது உதவி இயக்குநரான வில்லியம் மெக் கூல்லிடம் கூறினார்.



41 வயதுடைய கடற்படை மாலுமியான மெக் கூல் ஜன்னலூடாக வெளிப் பக்கமாகப் பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தார். விண்கலத்தின் முன் பகுதியில் காணப்பட்ட தலைப்பை அவர் கண்ணுற்றபோது, அது புகைக் குழாய் ஒன்று பற்றி எரிவதைப் போன்று காணப்பட்டது.

இவர்கள் இருவரும் அமர்ந்திருந்த இருக்கைக்குப் பின்னால் இருந்த இருக்கையில் இந்தியாவில் இருந்து அமெரிக்கா சென்றிருந்த (விண்கலப் பொறியியல் விஞ்ஞானத்துறை சார்ந்த கலாநிதிப் பட்டம் பெற்றிருந்த) 40 வயதையுடைய கல்பனா சவ்லா அமர்ந்திருந்தார்.

விண்கலத்தில் இருந்த நான்காமவர் திட்ட நிபுணரான லொரில் க்ளாக் என்பவராவார். விண்கலம் பூமியை நோக்கி வரும் பயணத்தை அவர் வீடியோ மூலம் படமாக்கிக் கொண்டிருந்தார்.

விண்கலத்தின் சுமை மற்றும் அதில் அடங்கும் பொருட்கள் அனைத்துக்கும் பொறுப்பாக மைக்கல் எண்டர்சன் நியமிக்கப்பட்டிருந்தார். இச் சந்தர்ப்பத்தின்போது அவர் கலத்தின் கீழ் மாடியில் இருந்துள்ளார். அமெரிக்க விண்கல முகவர் நிலையத்தில் பணியாற்றி வருகின்ற ஆபிரிக்க வம்சாவளியான நபர்களில் 43 வயதுடைய சென்டர்சனும் ஒருவராவார்.

இஸ்ரேலில் இருந்து நாஸா நிறுவனத்துக்கு வந்திருந்த விண்வெளி வீரரான இலான் ரெமோன் என்பவர் பின் பக்கமாக அமர்ந்திருந்தார். இஸ்ரேலின் முதற்தர விமானியாக இருந்து வந்த அவருக்கு, இத்தகைய ஆபத்து மிக்க வான் பயணங்கள் ஒன்றும் புதியவையல்ல. இவர் இஸ்ரேலிய நாட்டுக்கு முக்கியம் வாய்ந்த ஒரு நபராகக் கருதப்படுவதன் காரணமாக, இஸ்ரேல் நாட்டு ஊடகவியலாளர்கள் சிலரும் ரெமோனின் மனைவி மற்றும் பிள்ளைகள் நால்வரும் அவர் வரும் வரை கெனடி விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் காத்துக்கொண்டிருந்தனர்.



கொலம்பியா விண்கலப் பயணத்தின் நிபுணராக நியமிக்கப்பட்டிருந்த டேவிட் பிரவுண் இதிலிருந்த ஏழாவது நபராவார்.

இவர்கள் அனைவரையும் கொண்ட கொலம்பியா விண்கலம் 2003.02.01ஆம் திகதி காலை 8.44 ஆகும்போது 121920 மீற்றர் உயரே வானில் இருந்தது.

ஹூஸ்டனில் உள்ள ஜோன்சன் விண்வெளி ஆய்வு நிலையத்தில் உள்ள விண்கலத்தை நிர்வகிக்கும் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த பாரிய திரையில் கொலம்பியா விண்கலத்தின் பிம்பம் காட்சியளித்துக்கொண்டிருந்தது. இதன்படி விண்கலம் தற்போது ப்ளோரிடாவிற்கு உயரே வானில் இருக்கிறது என அறியப்பட்டது.


இத் திரை மீது மிகுந்த அக்கறையுடன் தனது பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்த இயந்திரத் தொகுதிகள் தொடர்பான பொறியியலாளர் ஜெப்க்ஸின்க், தனது கணினித் திரையில் தென்படுகின்ற விண்கல பிம்பத்தின் இடது பக்க இறக்கைப் பகுதி அசாதாரணமான வகையில் சூடேறியிருப்பதைக் கண்டறிந்தார். உடனே அவர், "விளையாட்டல்ல; ஏதோ ஒரு தீய நிகழ்வு நிகழ்ந்துகொண்டிருக்கிறது" என விமானப் பயணங்கள் பணிப்பாளர் லெரோய் சாயினிடம் கூறினார்.

16 தினங்களுக்கு முன்பாக, அதாவது ஜனவரி 16ஆம் திகதி விண்கலம் விண்வெளிக்குச் செலுத்தப்பட்டபோது நிகழ்ந்த நிகழ்வுகளை சாயின் மீட்டுப் பார்க்கலானார். 'ரொக்கெத்' எரிபொருள் கிலோ மீற்றரில், 18 இலட்சம் கிலோ மீற்றர்களுக்கான எரிபொருள் எரிக்கப்பட்டு, விண்கலம் விண்வெளி நோக்கி அனுப்பப்பட்டு 82 செக்கன்கள் கழிந்த நிலையில், விண்கலத்தின் எரிபொருள் தாங்கியின் வெளிப்புறக் கவசமாக இருந்த ரீஜிபோர்ம் ரகத்திலான கவசத்தில் இருந்து ஒரு சூட்கேஸ் அளவிலான துண்டு கழன்று சென்று இடது பக்க இறக்கையில் மோதியுள்ளது. இதன் காரணமாக இடது பக்க இறக்கையில் பொருத்தப்பட்டிருந்த வெப்பத்தைக் காட்டும் உபகரணம் பழுதடைந்து தவறான தகவல்களைக் காட்டுகின்றதா என லெரோய்காயின் எண்ணினார். அதே நேரம் 'இல்லை, அப்படி இருக்க முடியாது' என்ற சிந்தனையும் அடுத்தபடியாக அவருள் எழுந்தது.

காலை 8.56 ஆகும்போது விண்கலம் மின் வேகத்தில் மெக்ஸிக்கோவுக்கு உயரே வானத்திலிருந்து பூமிநோக்கி வந்துகொண்டிருந்தது. எனினும் பூமிக்கு அதிலிருந்து தீங்கு தரத் தக்க தகவல்களே கிடைத்துக்கொண்டிருந்தன. விண்கலத்துடனான தகவல் தொடர்புகள் அடிக்கடி சிதைந்து இறுதியில் எந்தவொரு பேச்சுச் சத்தமும் கேட்காத நிலையை அடைந்தன. காலை 9.05 ஆகும்போது கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்த அனைவரும் 'விண்கலம் எங்கள் பார்வையை விட்டுத் திசைதிரும்பிவிட்டது' என்ற பொதுவானதொரு முடிவுக்கு வந்தனர். இதன் அர்த்தம் என்ன?

இதன் அர்த்தத்தை டெக்ஸாஸில் உள்ள விவசாயப் பண்ணை ஒன்றில் இருந்து 59 வயதுடைய ரோஜர் கோட் உட்பட மேலும் சிலர் தாங்கள் கண்களாலேயே கண்டுகொண்டனர். பாரியதொரு சத்தத்தை எழுப்பியவாறு நெருப்பு மண்டலம் ஒன்று தரையின் பால் வேகமாக வருவதை அவர்கள் கண்டனர். பண்ணையில் இருந்தவாறே தனது மனைவியை அழைத்த ரோஜர் 'என்ன இது?' என வினவினார். மனைவியால் அதற்கான பதிலைக் கூற இயலாமற் போய்விட்டது. அதன் பின்னர் ரோஜர் தனது டிரெக்டரை எடுத்துக்கொண்டு அது வீழ்ந்திருந்த இடத்தை நோக்கிச் சென்றார்.

"மனிதர்களது உடம்புகளில் கூட அதன் துகள்கள் இருப்பதை நான் கண்டேன்" என வியட்நாமிய யுத்தத்தில் கலந்துகொண்ட பொறியியலாளரான அவர் பின்னர் கூறினார். எனினும் அத் துகள்கள் உலகில் உள்ள இறந்த விண்வெளி வீரர்கள் எழு பேரினதுமான துகள்கள் என்பதை அவர் வெகு நேரத்திற்குப் பின்பே அறிந்துகொண்டுள்ளார்.



கொலம்பியா விண்கலம் இவ்வாறு வெடித்துச் சிதறிய பின்னர் அதற்கான விசாரணைச் சபை ஒன்றை (Caib Colombia Accident Insvestigation Board) நாஸா நிறுவனம் நியமித்தது.

நீண்டதொரு பயணத்தின் பின்னர் விண்கலம் தறையிறங்கவிருந்த தறுவாயில் இவ்வாறு அது வெடித்துச் சிதறுவதற்கான காரணம் யாது? இதற்கான நான்கு காரணங்களை விசாரணைச் சபை தனது கவனத்தில் கொண்டது. இந் நான்கு காரணங்களும் விண்கலத்தின் இடது பக்கம் தென்பட்ட உஷ்ண அதிகரிப்புக்கான பாதிப்பு என்ன என்பதை அறியும் முகமான காரணங்களாகின.

விண்கலம் விண்வெளி நோக்கிச் செலுத்தப்பட்டபோது அதிலிருந்து கழன்று சென்ற ரீஜிபோர்ம் ரகத் தகடு, இடது பக்க இறக்கையில் பட்டு ஓட்டை ஏற்படுத்தியதா? இல்லையா? என்பது முதலாவது காரணியாகும்.

விண்கலம் தரையிறக்கப்பட்ட வேளையில் அதிலிருந்து வெளிப் பக்கமாகப் பொருத்தப்பட்டிருந்த சக்கரங்களில் இடது பக்கச் சக்கரத்தின் ஆணி ஒன்று தளர்ந்து வேகத்தின் காரணமாக வெடித்ததா? இல்லையா? என்பது ஆராயப்பட்ட இரண்டாவது காரணியாகும்.

விண்கலத்தின் உஷ்ணம் உள்ளுக்குள் விளங்காத வகையில் அதனைச் சூழ விசேடமான சிலிக்கா பைபர் ரக செங்கல் கவசம் ஒன்று உள்ளது. விண்கலம் வேகமாகத் தரையிறக்கப்பட்டபோது அதிலிருந்து செங்கல் ஒன்று கழன்று, அதனால் ஏற்பட்ட இடைவெளி காரணமாக மீண்டும் மீண்டும் கற்கள் கழன்று, அவை சூடேறி கலத்தின் இடது பக்கம் சூடேறியதா? இல்லையா? என்பது ஆராயப்பட்ட மூன்றாவது விடயமாகும்.

விண்கலத்துக்கு எதிராக வந்த விண்வெளிக் கல்லேதும் கலத்தில் மோதியமை காரணமாக அதனது சமாந்தர நிலை இல்லாது போய் அது வெடித்துச் சிதறியதா? இல்லையா? என்பது ஆராயப்பட்ட நான்காவது விடயமாகும்.

இந்தக் காரணிகள் நான்கையும் ஆராய்ந்து பார்த்த விசாரணைச் சபை இறுதியில் கூறப்பட்ட மூன்று காரணிகளும் விண்கலம் வெடித்துச் சிதறியமைக்கான காரணங்கள் அல்ல என்பதை உறுதியாக்கிக் கொண்டது.

ஆகவே, ரீஜிபோர்ம் ரகத் துண்டொன்று கழன்று விண்கலம் ஓட்டையாக்கப்பட்டதா? இதன் உண்மைக் காரணிகளை அறிய மீண்டும் அச் சந்தர்ப்பத்தை மீட்டுப் பார்த்து, நடைமுறைச் சாத்தியமான தகவல்களைத் திரட்ட சபை தீர்மானம் கொண்டது.

2003 ஜூலை மாதம் 7ஆம் திகதி இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கொலம்பியா விண்கலத்தில் இருந்து கழன்று சென்றதைப் போன்ற 760 கிறாம் நிறையுடைய ரீஜிபோர்ம் துண்டொன்றை கொலம்பியா கலத்தின் இறக்கையைப் போன்ற இறக்கை ஒன்றின் மீது மோதச் செய்வதே இந் நடவடிக்கையாகும்.

எட்லெண்டிஸ் கலத்தின் இறக்கை கொலம்பியா கலத்தின் இறக்கையை ஒத்ததாகும்.

(மிகுதி பக்கம் 22ஐ பார்க்க...)

## கௌதம் இயக்கத்தில் கமல்

'மின்னலே', 'காக்க....காக்க....' என இரண்டே இரண்டு படங்களால் சினிமாவையே தன் பக்கம் திருப்பியவர் இயக்குநர் கௌதம். 'காக்க....காக்க...' படத்தின் திரைக் கதையமை... ஏராளமான பாராட்டுகள். இதே படத்தை கௌதமை வைத்து ஆங்கிலத்தில் எடுக்கும் முயற்சியில் தயாரிப்பாளர் கலைப்புலி தாணு ஈடுபட்டிருக்கிறார். இந் நிலையில் கௌதம் சத்தமில்... மீண்டும் சூர்யாவையே வைத்து, 'சென்னையில் ஒரு மழைக்காலம்' என்ற படத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார். கதாநாயகி யாரென்று முடிவு செய்யாமலேயே பாடல் பதிவையும், படப்பிடிப்பையும் தொடங்கியவர்கள் இப்போது ஆ... ஹீரோயினாக்கி இருக்கிறார்கள். படத்தில் சூர்யாவை முதல் முறையாக ஒரு பாடலையும் பாட வைத்திருக்கிறார் கௌதம்.

'சென்னையில் ஒரு மழைக்காலத்தில்' மூழ்கியிருக்கும் கௌதமுக்கு ஒரு சந்தோஷ அதிர்ச்சி. அவரின் அடுத்த படத்தில் நடிக்க கமல் சம்மதம் தெரிவித்துள்ளார். இதைத் தயாரிக்கப் போவது ரோஜா கம்பைன்ஸ் காஜாமைதீன்.

நல்ல கதையை மட்டுமே வைத்துப் படங்களை எடுக்கும் எல்லா இயக்குநர்களுக்கும், கமலுடன் ஒரு படம் செய்ய வேண்டும் என்பது ஒரு கனவாக இருக்கும். எவ்வளவு கனமான பாத்திரத்தையும் இவர் மீது சுமத்தலாம் என்ற நம்பிக்கைதான் காரணம்.

இளம் தலைமுறை இயக்குநர்களில் குறிப்பிடத் தகுந்தவர்களாக இருக்கும் பாலாவும் கௌதமும் தங்களது அடுத்த படங்களில் கமலை நடிக்க வைக்க முயற்சி செய்தார்கள். இதில் இருவருக்குமே வெற்றி.

அடுத்ததாக தனுஷை வைத்து ஒரு படத்தை முடித்துவிட்டு கமலுடன் பாலா இணைவார் என்கிறார்கள். இந்தக் கூட்டணியில் இளையராஜாவும் நிச்சயம் உண்டாம்.

'சென்னையில் ஒரு மழைக் காலத்தை' முடித்துவிட்டு கமலை வைத்துப் படத்தை ஆரம்பிக்கப் போகிறாராம் கௌதம். அதற்குள் குறுகிய காலத் தயாரிப்பாக 'கிருஷ்ணலீலா'வை கமல் முடித்து ரிலீஸ் செய்துவிடுவார் என்கிறார்கள்.


படம் : மீசைமாதவன்
ரமணா - குட்டிராதிகா



**முகப்பில்**
**சதீஸ் கௌசிக்**
**காயத்திரி ரகுராம்**

## மீண்டும் ஜொலிக்க விரும்பும் சிம்ரன்

ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்காது என்பது சிம்ரன் விஷயத்தில் உண்மையாகி இருக்கிறது. கல்யாணம் ஆகிக்கொண்டு செட்டிலாவதாகச் சொன்ன சிம்ரன் மீண்டும் வாய்ப்பு தேடுகிறார் என்பதையும், தனது கணவரை ஹீரோவாக்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்கிறார் என்பதையும் நமது வாசகர்களுக்கு முன்பே தெரிவித்திருந்தோம். சிம்ரன் நடித்து கடைசியாக வெளியான படம் 'உதயா'. நான்காண்டு காலத் தயாரிப்பான இந்தப் படம் நான்கு வாரங்கள் கூட ஓடவில்லை. இனி ரிலீஸ் ஆகவிருக்கும் படம் 'நியூ'. இயக்குநர் எஸ்.ஜே.சூர்யா கதாநாயகனாக அறிமுகமாகும் இந்தப் படத்தில் அவருக்கு ஜோடி சிம்ரன். கல்யாணத்துக்கு முன்பே இந்தப் படத்தை நடித்துக் கொடுத்துவிட்டார். திருமணத்துக்குப் பின் நடிப்பதில்லை என்ற கொள்கை முடிவில் இருந்த சிம்ரன் போகிற போக்கில் மிச்ச சொச்சம் இருந்த கவர்ச்சி அனைத்தையும் இந்தப் படத்தில் வாரி வழங்கினார்.

## கல்யாணமான தியா

'குறும்பு' படத்தில் நடித்த தியாவிற்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகிவிட்டதாகச் சொலகிறார்கள். 'குறும்பு' படத்தில் கிளாமராக நடித்து கெட்ட ஆட்டம் போட்டார் தியா. படத்தில் கதாநாயகியாக நடித்த நிகிதாவைவிட இவர்தான் அதிகம் பேசப்பட்டார். தியாவின் கவர்ச்சி விருந்தில் கிறங்கிப் போயிருக்கும் இரசிகர்களுக்கு ஒரு அதிர்ச்சித் தகவல். மனதைத் திடப்படுத்திக்கொண்டு மேலே படியுங்கள்.

தியாவிற்குக் கல்யாணமாகி, குழந்தை கூட இருக்கிறதாம். அவர் தனக்கு 19 வயது என்று சொன்னாலும், அதில் உண்மையில்லை என்று விஷயமறிந்தவர்கள் சொல்கிறார்கள். தியாவின் கணவர் சினிமாவில் குரூப் டான்ஸ் ஆடுகிறவராம். இரண்டு பேரும் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டவர்களாம். குழந்தையோடு, சென்னை அயோத்திக் குப்பம் அருகே இருக்கும் மாட்டா? குப்பத்தில் இருவரும் வசித்து வந்தவர்களாம்.

கணவரின் மூலமாகத்தான் 'குறும்பு' படவாய்ப்புக் கிடைத்தது என்றும், கல்யாணமான விஷயம் படத்தின் இயக்குநருக்குக் கூடத் தெரியாது என்றும் கோலிவுட்டில் பேச்சு நிலவுகிறது.

இதே போல திருமணத்தை மறைத்துவிட்டு நடித்துக்கொண்டிருக்கும் இன்னொரு நடிகை 'இயற்கை' படத்தின் ஹீரோயின் ராதிகா. இவரது கணவர் தற்கொலை செய்துவிட்டதாக அவரது சொந்த ஊரான கர்நாடகத்தில் சொல்கிறார்கள்.

## வசீகரனை கைது செய்த ப்ரியாமணி

பாரதிராஜாவின் அறிமுக நாய...ான பிரியாமணி, தனது முதல் படத்தின் நா...ான வசீகரனை வசீகரித்துவிட்டதாகச் செய்...லா வருகிறது. பாரதிராஜா இயக்கும் படம் 'கண்களால் கைது செய்', இதில் பெயங்களூரைச் சேர்ந்த மாடல் பிரிய...ும் வசீகரனும் ஜோடியாக நடிக்கிறார்கள். அட்டகாசமான அழகுடன் உள்ள பிரியாமணிக்கும், அதே அளவுக்கு ஹேண்...மாக உள்ள வசீகரனுக்கும் இடையே நிஜத்திலும் காதல் பூத்துவிட்டதாம். இருவரையும் அடிக்கடி ஜோடியாகத் தியேட்...ில் பார்க்க முடிகிறது. இருவருமே இந்தி மற்றும் ஆங்கிலப் படங்கள் பார்ப்பதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இரு...ால், அந்தப் படங்கள் ஓடும் தியேட்டர்களுக்குக் கைகோர்த்தபடி வந்து செல்வதை அடிக்கடி பார்க்க முடிகிறது. இதனால் கொலிவுட்டின் லேட்டர்ஸ்ட் காதலர்கள் பட்டியலில் இருவரையும் சேர்த்துவிட்டனர். இதற்கு முன் மும்பை மாடல் ஒருவருடன் பிரியாமணிக்குக் காதல் இருந்து வந்தது. அது என்ன ஆனது என்று தெரியவில்லை.

முதல் படம் வெளியாகும் முன்னரே பிரியாமணிக்கு ஏகத்துக்கும் வாய்ப்புக்கள் குவிந்துள்ளன. தனுஷுடன் பாலுமகேந்திரா இயக்கத்திலும் நடித்து வருகிறார். இந் நிலையில் இந்தக் காதலால் டான்ஸ்கள் கை நழுவிப் போகலாம் என அவருக்கு வேண்டியவர்கள் எடுத்துச் சொல்ல ஆரம்பித்துள்ளார்களாம். உதாரணத்துக்கு ஸ்னேகாவின் கதையை அவரிடம் சொல்கிறார்களாம். ஸ்ரீகாந்துடன் அவருக்குக் காதல் அரும்பியதால் ஸ்னேகாவை தமிழ் சினிமாவின் இளம் நடிகர்கள் ஓரம் கட்டியது நினைவிருக்கலாம். இதன் பின்னர் ஸ்ரீகாந்துடனான உறவை முறித்துக் கொண்டார் ஸ்னேகா. இது ஒரு பக்கம் இருந்தாலும், முதல் படம் வருவதற்குள், காதலை ரிலீஸ் செய்துவிட்ட இந்த ஜோடிக்கு அந்தப் படத்தின் இயக்குநர் பாரதிராஜாவின் ஆசி இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

**சினி விசிட்**


படம் : பிள்ளையார் பட்டியும் கந்து வட்டியும்
பாண்டியராஜன் - காயத்ரி பிரியா


பொன்னம்பலம் - பாபிலோனா

## கமல் நடிக்கும் வசூல் ராஜா MBBS

மாபெரும் வெற்றி பெற்ற 'மு...ாய் எம்.பி.பி.எஸ்.' இந்திப் படத்தின் கதை உரிமையைப் ...த்த போட்டிக்கிடையே ஜெமினி பிலிம் சர்க்யூட் பெற்று ஒரே நேரத்தில் தமிழிலும், தெ...லும் அத் திரைப்படத்தைத் தயாரிக்கிறது. 'வசூல் ராஜா MBBS' என்று வித்தியாசமான பெயரிடப்பட்டிருக்கும் இப்...த்தை 'ஜே.ஜே' வெற்றிப் படத்திற்குப் பின் அஜித் நடிக்கும் 'அட்டகாசம்' படத்தை இயக்கி வரும் சரண் திரைக்கதையினை அமைத்...யக்க, வசனங்களை கிரேஸிமோகன் எழுதுகிறார். டாக்டருக்குப் படிக்க ஆசைப்படும் ஒரு தாதா வேடத்தில் கமல்ஹாசன் நடிக்க, அவருக்கு நண்...ஒரு முக்கியமான வேடத்தில் நடிக்க பிரபு முன்வந்திருக்கிறார். இதன் தெலுங்குப் பதிப்பில் இதே வேடத்தில் முன்னணித் தெலுங்கு ஹீரோ ஸ்ரீகாந்த் நடிப்பது குறிப்பிட...க்கது. கமல்ஹாசன் - பிரபு கூட்டணி 'வெற்றி விழா' திரைப்படத்திற்குப் பிறகு இதில் இணைகிறது. இதில் வரும் சுவாரஸ்யமான கதாபாத்திரத்தில் வித்தியாசமான பரிமாணத்தில் பிர...ஷ்ராஜ் நடிக்கிறார். இதற்காக பிரகாஷ்ராஜ் சில தெலுங்கு, தமிழ்ப் படங்களைத் தவிர்த்திருக்கிறார். கமல்ஹாசன். பிரகாஷ்ராஜ் இணையும் முதல் படம் இது...அதைப் போல கமல் படத்திற்கு ...வாஜ் முதன்முதலாக இசையமைக்கிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது. கமல்ஹாசன் ஜோடியாக சினேகா நடிக்கிறார். அன்பும் பண்பும் நிறைந்த குடும்பப் பாங்கான வேடத்தில் நடிக்கும் சினேகா, முதன்...யாக கமல்ஹாசனுடன் கதாநாயகியாக நடிப்பது குறிப்பிடத் தக்கது. திரையுலகில் மிகப் பிரபலமாக விளங்கும் ஒரு முக்கிய புள்ளியை கமல்ஹாசனின் தந்தை வேடத்தில் நடிக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன. அது தி...லகில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக இருக்கும். இவர்களுடன் காக்கா ராதாகிருஷ்ணன், கருணாஸ், எம்.எஸ். பாஸ்கர், சிஸர் மனோகர், சித்ரா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். நகைச்சுவையுடன், மனித உணர்ச்...க்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு பொதுநல நோக்கத்தில் கதையம்சம் அமைந்திருக்கும் இந்த 'வசூல்ராஜா MBBS' திரைப்படத்தின் படப்பிடிப்பு, மாபெரும் பொருட்செலவில் அமைக்கப்பட்ட காட்சி அரங்கங்களில் மே 14ஆம் திகதி துவங்கி, சென்...றும் சுற்றுப்புறங்களில் படமாக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் திரைக்கு வருகிறது.

ஒளிப்பதிவை ஏ.வெங்கடேஷ்"ம் இசையை பரத்வாஜ்"ம் கவனிக்கின்றனர். வசனங்களை கிரேஸி மோகனும், பாடல்களை கவிப்பேரரசு வைரமுத்துவும் எழுத, கலையை மோகன மகேந்திரனும், சண்டைப் பயிற்சியை சூப்பர் சுப்பராயனும், படத் ...ப்பை சுரேஷ் அர்ஸ்"ம் ஒப்பனையை ஆர். சுந்தரமூர்த்தியும் கவனிக்கின்றனர். உடைகளை நளினி ஸ்ரீராம் அமைக்கிறார். மக்கள் தொடர்பு : நிகில். தயாரிப்பு மேற்பார்வை : ராஜா ஸ்ரீதர். தயாரிப்பு : ஜெமினி பிலிம் சர்க்யூட். திரைக்கதை டைரக்ஷன் : ...ண்.

விளம்பரப் படங்களில் நடிக்க நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் சம்பளம் வாங்குகிறார் சினேகா. அந்த பிரபல ரங்கநாதன் தெரு கடை விளம்பரத்துக்கு மட்டும் மொத்தமாக 50 இலட்சம் சம்பளம் பெற்றுள்ளார்.

# மலையாளத்துக்குப் போன அபர்ணா

தமிழ்ப் பெண் என்பதால் தன்னை இயக்குநர்கள் ஒதுக்குவதாகப் புகார் கூறும் அபர்ணா, மலையாளத்தில் நடிக்கப் போய்விட்டார். 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்தில் தனுஷுக்கு ஜோடியாய் பரபரப்பாக அறிமுகமானார் அபர்ணா. பார்க்க குட்டிப் பெண்ணாய் இருந்தாலும் கவர்ச்சியில் சுட்டியாய் இருந்தார். 'மிஸ் சென்னை', அமெரிக்க பத்திரிகையின் 'மிஸ் போட்டோஜெனிக்' பட்டம் என்ற அட்டகாசமான தகுதிகளுடன் சினிமாவுக்குள் வந்தார்.

ஆனால், முதல் படத்திலேயே காட்டு வெள்ளம் போல கவர்ச்சியைக் காட்டியதால் அபர்ணாவுக்கு அத்தோடு சான்ஸ் கும்பிடு போட்டுவிட்டது கோடம்பாக்கம்.



படம் : முதலாம் சந்திப்பில் கார்த்திக் - கௌசல்யா

# தவிக்கும் ஜோதிகா

ஜோதிகாவுக்கு கொஞ்சம் நேரம் சரியில்லை.

'அருள்' படத்தின்போது விக்ரமுடன் நெருங்கிவிட்டதாக இருவரையும் முடிச்சுப் போட்டுக் கிசுகிசு வெளியானதால் சூர்யாவும் ஜோதிகாவும் படு மூட் அவுட். அதிலிருந்து மீண்டு இருவரும் சகஜ நிலைக்கு வந்தபோது ஜோதிகாவுக்கு டைபாய்ட் காய்ச்சல்.

கண்டிப்பாக பெட் ரெஸ்ட் எடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டதால், 15 நாட்களுக்குப் படப்பிடிப்பை இரத்துச் செய்துவிட்டு மும்பையில் இருக்கும் தன் அம்மாவிடம் போய்விட்டார் ஜோதிகா.

இந் நிலையில் புதிய பிரச்சினை. ஒப்புக்கொண்ட படத்தில் நடிக்காமல் ஏமாற்றியதாக கூறி ஜோதிகாவுக்கு தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் படங்களில் நடிக்கத் தடை விதித்துள்ளது.

# மீண்டும் இணையும் பாரதிராஜா, சத்யராஜ்

'கடலோரக் கவிதைகள்', 'வேதம் புதிது' படத்திற்குப் பிறகு சத்யராஜும், பாரதிராஜாவும் மீண்டும் இணைந்து பணியாற்ற உள்ளார்கள். வித்தியாசமான வில்லனாக நடித்துக்கொண்டிருந்த சத்யராஜ் பின்னர் ஹீரோவானார். அவருக்கு 'கடலோரக் கவிதைகள்' மூலம் பெரிய பிரேக் கொடுத்தார் பாரதிராஜா. அதன் பிறகு இருவரும் சேர்ந்து 'வேதம் புதிது' என்ற அட்டகாசமான படத்தைக் கொடுத்தார்கள்.



படம் : ஜாலி மேன் ஸ்ரீதர் - வர்ஷினி

நடிகர் மாதவன் மனைவி சரிதா மாத மொருமுறை வெளி நாடுகளுக்குப் பறந்து விடுகின்றார். அங்கே லேட்டஸ்டாக வடிவமைக்கப்படும் உடைகளை தன் கணவருக்காக வாங்கத்தான் இந்த ட்ரிப். பயணமெல்லாம் தயாரிப்பாளர்கள் செலவில்தான்.

'சகலகலா வல்லவன்' படத்தில் கமலின் கற்பழிக்கப்பட்ட தங்கையாக நடித்தாரே துளசி...அவர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஷங்கரின் 'அந்நியன்' படத்தில், சதாவின் அம்மாவாக நடிக்கிறார்.

# திருந்திவிட்டேன் : கார்த்திக்

கார்த்திக்கிடம் சில கெட்ட பழக்கங்கள் உள்ளன. அவற்றிலிருந்து மீண்டு வந்துவிட்டால் அவரது இடத்தை அவரால் மட்டுமே முறியடிக்க முடியும்.

இது கேப்டன் விஜயகாந்த் கொடுத்த பாராட்டு. இடம், 'மனதில்' ஆடியோ கேசட் விழா, 'எங்கள் அண்ணா' படத்தில் நடிக்க வராமல் டேக்கா கொடுத்ததால், கேப்டனால் கடுக்காய் கொடுக்கப்பட்ட கார்த்திக், அவரது வாயாலேயே இப்படிப் பாராட்டப்பட்டது கார்த்திக்கை நெகிழ வைத்துள்ளது.



இயல்பான நடிப்புக்குப் பெயர் பெற்றவர். எந்தக் கேரக்டரைக் கொடுத்தாலும் அதைத் திறம்படக் கையாளும் நடிகர். வசன உச்சரிப்பில் சற்று சொதப்பினாலும், முக பாவனையிலும் , பாடி லாங்வேஜ்ஜிலும் கலக்குபவர். 'மௌனராகம்', 'அக்னி நட்சத்திரம்', 'கோகுலத்தில் சீதை' படங்களைப் பார்ப்பவர்கள் இவரது நடிப்பில் மனதைப் பறிகொடுக்காமல் இருக்க முடியாது.

அத்தகை திறமையுயைவர் கால்ஷீட் சொதப்பல், படப்பிடிப்புக்குத் தாமதமாக வருவது போன்ற காரணங்களால் பீல்ட் அவுட்டானார். நடிகர் சங்கத்துக்குத் தினமும் சென்று பொழுது போக்கிக் கொண்டிருந்தவருக்கு 'மனதில்', 'காஷ்மீர்' பட வாய்ப்புகள் கிடைத்தன. இப்போது ஆள் கொஞ்சம் பிஸி.

அண்மையில் (படு கிளாமராக) கௌசல்யாவும் கார்த்திக்கும் நடித்த 'மனதில்' படத்தின் ஆடியோ கேசட் விழா சென்னையில் நடந்தது. இதில் விஜயகாந்த், சரத்குமார் , பிரபு உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# ரஜினிக்கு ஜோடி ஐஸ்வர்யா ராய்?

'ஜக்குபாய்' படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க ஐஸ்வர்யா ராயிடமும், ராணி முகர்ஜியிடமும் பேச்சு நடந்து வருகிறது. 'பாபா' படத்தைப் போலவே, ஷூட்டிங் தொடங்கும் முன்பே 'ஜக்குபாய்' படம் பற்றியும் புதுப் புதுச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. கதை விவாதம் கோடம்பாக்கத்தில் உள்ள ரஜினியின் பண்ணை வீட்டில் கடந்த 4 நாட்களாக நடைபெறுகிறது.

இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரும் அவருடைய உதவியாளர்களும் கதை விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். ரஜினியும் அவ்வப்போது கலந்துகொள்கிறார். படத்தின் கதை பற்றி ஒரு சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் படத்தில் ரஜினி, ஜஹாங்கீர் என்ற பெயரில் தீவிரவாதியாக நடிக்கிறார் என்றும், அவரை சாந்தா ஜக்குபாய் என்ற பெண் சாமியார் அறிவுரை கூறித் திருத்தி நல்வழிக்கு மாற்றுவது போலவும் சீரியஸாகக் கதை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், சீரியஸ் கதையெல்லாம் கே.எஸ்.ரவிக்குமாரை வைத்துக்கொண்டு ரஜினி எடுக்க மாட்டார் என்று சொல்லும் கோடம்பாக்கம் குருவிகள் வேறு கதை சொல்லுகின்றன. கதை வழக்கமான கே.எஸ்.ரவிக்குமாரின் ஸ்டைலில்தானாம். அப்பா பண்ணையார் ரஜினி, அவர் ரொம்ப நல்லவர், வெளிநாட்டில் படித்துவிட்டுத் திரும்பும் மகன் ரஜினி, ஒரு பங்காளி எதிரி (நம்ம ராமதாஸ் மாதிரி) ரஜினி பக்கத்து ஊரோடு ஒரு தண்ணீர்ப் பிரச்சினை. அதில் அப்பா ரஜினியைப் பங்காளி கொல்வது, இதையடுத்து ஊரே சேர்ந்து மகன் ரஜினிக்குத் துணை நிற்பது. கடைசியில் மக்கள் துணையுடன் பக்கத்து ஊரில் இருந்து தண்ணீர் கொண்டு வருவது, இதையடுத்து மக்களின் எதிரியை ஒழித்து அல்லது திருத்தி, தலைவனாக உயர்வது, நாடே போற்ற வாழ்வது, இடையிடையே மகன் ரஜினியின் காதல்...டான்ஸ் எனக் கதை போகும் என்கிறார்கள். அரசியல் டயலாக்குகள், "இதோ வரப் போறேன்", "இதோ வந்துட்டேன்..." என்று இரசிகர்களை மீண்டும் அரசியல் நம்பிக்கைகளுடன் இருக்க வைத்து, எல்லோரையும் மீண்டும் ரஜினி குறித்து ஒரு எதிர்பார்ப்போடு இருக்கச் செய்யும் சமாச்சாரங்களும் அதிக அளவில் சேர்க்கப்படுமாம். கதையில் தண்ணீர்ப் பிரச்சினையோடு, சம கால அரசியல், மெல்லிய திராவிட எதிர்ப்பு, தேசியவாதத்துக்கு ஆதரவு என எல்லா சப்ஜெக்ட்களையும் தொடப் போகிறார்களாம். கதாநாயகியாக ஜோதிகா அல்லது த்ரிஷா நடிக்கலாம் என்று முதலில் கூறப்பட்டது. சிம்பு, சூர்யா என்று இளைய தலைமுறை நடிகர்களுடன் நடித்துக்கொண்டிருக்கும் இவர்களைத் தனக்கு ஜோடியாக நடிக்க வைத்தால் மக்கள் ஒத்துக்கொள்வார்களா என்று ரஜினி யோசிப்பதாகத் தெரிகிறது.

ரஜினிக்கு ஜோடி என்றால் கொஞ்சம் வயதான, அதே நேரத்தில் தமிழக மக்களுக்கு அறிமுகமான நடிகை வேண்டும். இதற்கு முன்பே சௌந்தர்யா, மனிஷா கொய்ராலா ஆகியோர் அப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த ரீதியில் ஐஸ்வர்யா ராயை நடிக்க வைக்கலாம் என்ற யோசனை எழுந்துள்ளது. ஐஸ்வர்யா ராயிடம் பேச்சுவார்த்தை நடக்கிறது. அதே நேரத்தில் 'ஹே ராம்' படம் மூலம் தமிழக மக்களுக்கு அறிமுகமாகியிருக்கும் ராணி முகர்ஜியின் பெயரும் பரிசீலிக்கப்பட்டு, அவரிடமும் பேச வருகிறார்கள். இந்தியில் நம்பர் ஒன்னாக இருக்கும் ஐஸ்வர்யா ராய் தற்போது ஒரு ஆங்கிலப் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ரஜினிக்கு ஜோடியாக நடித்தால், பின்னால் தமிழ், தெலுங்கில் இளம் நடிகர்களுடன் நடிப்பது நெருடலாக இருக்கும் என்பதால் அவர் அனுமதிப்பாரா என்பது சந்தேகம்தானாம்.

(கற்பனை)

# சிவ பக்தையாக மீனா

'மகா சிவராத்திரி' என்ற பக்திப் படத்தில் சிவ பக்தையாக நடித்து வருகிறார் நடிகை மீனா.

மீனா ஒரு காலத்தில் தமிழ், தெலுங்கு என கொடிகட்டிப் பறந்தார். தமிழ் இரசிகர்களுக்கு சேலையில் தரிசனமும், தெலுங்குக்காரர்களுக்கு நீச்சலுடை தரிசனமும் தந்தார். முன்னணிக் கதாநாயகர்கள் அனைவருடனும் இணைந்து நடித்தார். இப்போது ஃபீல்டில் இருக்கும் கதாநாயகிகளில் ரம்யா கிருஷ்ணனுக்கு அடுத்தபடியாக மூத்த நடிகையாக இருப்பவர் இவர்தான். அதனால்தானோ என்னவோ, இளைய தலைமுறை நடிகர்கள் இவரை ஓரங்கட்டிவிட்டனர். தமிழில் படங்கள் குறைந்ததும் வேறு வழியின்றி சம்பளம் குறைவாகத் தரும் கன்னடப் படவுலகுக்குத் தாவினார்.

அங்கு அவர் நடித்த 'சுவாதிமுத்ய' 'சிப்பிக்குள்' 'முத்து ரீமேக்' படம் சூப்பர் ஹிட் ஆகவே, அடுத்து ஒரு பட வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதற்கிடையே தமிழில் 'அன்புச் சகோதரன்' என்ற படத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாகவும், 'மகா சிவராத்திரி' என்ற படத்தில் சிவ பக்தையாகவும் நடித்து வருகிறார்.

'கண்ணாத்தாள்', 'தாயே புவனேஸ்வரி' ஆகிய பக்திப் படங்களைத் தயாரித்த ஆதிபராசக்தி நிறுவனம்தான் 'மகா சிவராத்திரி' படத்தையும் எடுத்து வருகிறது. ஒரு பக்தையின் வாழ்க்கையில் இறைவன் ஏற்படுத்தும் அற்புதங்களைப் பற்றிய கதையாம்.

# ஸ்ரீகாந்த்தை காதலிக்கவில்லை : ஸ்னேகா


"ஸ்ரீகாந்த் எனது நண்பர் மட்டுமே, அவரை நான் காதலிப்பதாகக் கூறுவது முழுப் பொய்" என்று மீண்டும் சொல்கிறார் ஸ்னேகா. 'ஏப்ரல் மாதத்தில்' ஸ்ரீகாந்த் - ஸ்னேகா ஜோடி சேர்ந்தனர். பின் 'பார்த்திபன் கனவு' படத்திலும் ஜோடியாக நடித்தனர். இருவரும் காதலித்து வருவதாகப் பேசப்படுகிறது. ஆனால், இருவரும் இதை மறுத்து வருகின்றனர். இந் நிலையில் ஒரு வாரப் பத்திரிகை வெளியிட்டுள்ள போஸ்டர்களில் "ஸ்ரீகாந்த்தை நான் காதலிக்கிறேன்" என்று ஸ்னேகா பேட்டியளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இது குறித்து ஸ்னேகா கூறுகையில், "அந்தப் பத்திரிகை நிருபரிடம் நான் அப்படிக் கூறவில்லை. ஸ்ரீகாந்த் எனது நண்பர் என்றுதான் கூறினேன். ஆனால், நான் சொல்லாததையும் சேர்த்து எழுதியுள்ளனர். பேட்டி எடுத்த நிருபர், வேறு பத்திரிகைக்கு என்று கூறிவிட்டு, வார இதழுக்குக் கொடுத்துள்ளார். யாராவது இப்படிப் பேட்டி கொடுப்பார்களா? இது குறித்து நான் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வேன்" என்றார்.

இது குறித்து ஸ்ரீகாந்த் கூறுகையில் "நான் எனது தொழிலைத் தவிர வேறு எதையும் காதலிக்கவில்லை. என் பெயரைக் கெடுக்க வேண்டாம்" என்று கேட்டுக்கொள்கிறேன்" என்றார். அந்தப் பத்திரிகைக்கு ஸ்னேகா அளித்துள்ள பேட்டியில், "ஸ்ரீகாந்த்தும் நானும் தினமும் ஒரு முறையாவது போனில் பேசிக்கொள்வோம். அவர் என் மனதை முழுமையாக ஆக்கிரமித்துவிட்டார்" என்று சொன்னதாகத் தெரிகிறது. ஏற்கெனவே இந்தக் காதல் கிசுகிசு காரணமாக ஸ்னேகாவுக்குப் படவாய்ப்புகள் பெருமளவு குறைந்துவிட்டது குறிப்பிடத் தக்கது.



படம் : சுள்ளான் தனுஷ் - துலானி

'வானம் வசப் படும்' படத்தில் அறிமுகமாகி இருக்கும் பூங்கோதையை "புலிப் பொண்ணு" என்கின்றனர் சினிமா வட்டாரத்தினர். காரணம் இவரது தந்தை சந்திரஹாசன் இலங்கை இனப் பிரச்சினை துவங்கிய காலத்தில் விடுதலைப் புலிகளின் ஆலோசகராக இருந்தவர்.





## ஏமாற்றம்!

கண்களை
இரண்டாகப்
படைத்த
இறைவன்
இதயத்தை
மட்டுமேன்
ஒன்றாக்கி
விட்டான்
ஒரு சில
பெண்களுக்கு
இதயமே
இல்லாமல்
படைத்தாலும்
பரவாயில்லை
இருந்தும் உணராமல்
இருப்பதை விட......

இரா.கோணேஸ்வரன்,
கண்டி வீதி, நுவரெலியா.

## சமூக நெம்புகோல்



சராசரி மனிதன் நான்
என்னை தலையில் தூக்கி வைத்து
மே தினத்தில்
சமூக நெம்புகோல் - ஆணிவேர் தான்
எம் தொழிலாளி என்று
உயர்த்திப் பேசுவார்கள்

பசிக்கு ஒன்றும்
இராது
அவர் படலையை நாம்
திறந்தால்
அவன் வராது
பாரென்று வாசலில் நிற்கும்
நாய்க்கு கட்டளையிடுவார்
நம் முதலாளி

செய்யும் தொழிலைத்
தெய்வமாகச் செய்பவன் நான்
கொண்ட கடமையை தம்
பதவி என்பவன் நான்
தொழிலில் காட்டும்
திறமையே செல்வம்
என்பவன் நான்

இப்படியிருக்க
நான்
ஒன்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்

என் கைகளும் கால்களும்
என் பேராற்றல் என்பதையும்
அதுவே அவன் உயர்வுக்கு
உறுதுணை என்பதையும்
மறப்பவனுக்கு
என்ன தகுதி
என்னைப் பற்றிப்
பேசுவதற்கு?

தம்பிலுவில் தயா.

## கிறுக்கள்



உள்ளே
அழுது
ஊமையாகிறது
மனசு!

விழியோர
நீர்த்துளி
காதலை
ஈரப்படுத்துகிறது!

இப்பொழுதெல்லாம்
உன் பெயரை
உச்சரித்தே
உயிர் வாழ்கிறேன்!

நீ ஜன்னலைத்
திறக்கும் போதெல்லாம்
ஜனனமடைகிறேன்!

உன்னால்
வரண்ட உதட்டிலும்
வற்றாத புன்னகையுடன்!



கிறுக்கனாகிவிட்டேன்
ஒரு கிளியோபாட்ராவால்!

கொஞ்சம்
இதழ் வீசி - இல்லை
உயிர் பறி!

புத்தளம் நஸீம்ருமி.

## காவியமாய் முடி

வாழ்க்கை என்பது
ஒரு பாடப் புத்தகம்
அதனைப் படித்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு தொடர் நாடகம்
அதனை நடித்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு நீண்ட பயணம்
அதனை நடந்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு பெருங்கடல்
அதனைக் கடந்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு சுவர்க்கம்
அதனை ருசித்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு பூந்தோட்டம்
அதனை இரசித்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு போராட்டம்
அதனைப் போராடி முடி....;

வாழ்க்கை என்பது
ஒரு தேரோட்டம்
அதனை இழுத்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு விளையாட்டு
அதனை விளையாடி முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு நெருப்பாறு
அதனை நீந்தி முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு பல்சுவைக் கதம்பம்
அதனைச் சுவைத்து முடி.....!

வாழ்க்கை என்பது
ஒரு பெருங் காவியம்
அதனைக் கற்று முடி....
அதிலே நீயும் காவியமாய்
முடி.

கன்னிமுத்து வெல்லபதியான்,
எருவில்.

## வறுமை

நிலவே
கிடுகுகளின் இடுக்கில்
எட்டிப் பார்த்து
எங்களோடு பரிகாசமா
நாங்கள் ஏழைகள்

தினமும் எரிகிறது
அடுப்புகளில்லை
எங்கள் வயிறுகள்
உலை ஏறிப்
பல வாரங்கள்

சுட்டித் தங்கையின்
முட்டி உண்டியலும்
உடைத்தாயிற்று
அவள் ஆசைப்பட்ட
பொம்மைக்காக அல்ல
ஒரு வேளை
உணவுக்காக

அம்மாவின் முகத்தில்
ஆயிரம் வறுமைக்
கோடுகள்
எங்களை நினைத்து
அழுவதால்
பாவம் அம்மா
அழுதே பழகிப்போயிற்று

ஊருக்குத் தெரியும்
நாங்கள் வாழ்ந்து
கெட்ட குடும்பமென்று
உதவத்தான்
எவருமில்லை
எங்களுக்காக

வயிற்றுக்கே
வழியில்லை
அக்காவின் வரனுக்காக
எதை மிச்சப்படுத்துவது
சீதனச் சிறையில்
அவள் சீதை
இராமனைத்
தெரிந்தவர்கள்
முகவரியைத்
தந்துதவுங்கள்.

திருமலை தாமரைமகள்.

## ஞானோதயம்



மனித சஞ்சாரமற்ற
நிலப்பரப்பொன்றில்
நிம்மதி வேண்டி
என் ஆன்மா.....

காயம் பட்ட
இதயத்திற்கு
கவிதைகளால்
களிம்பு பூசி
காலம் நகரும்....

சிற்றின்பச் சிறையின்
'தாழ்' உடைத்து
வெளிவந்த
மெய்ஞ்ஞானப் பறவை
நித்திய வாழ்வை
காண விழையும்....

'வெறும் மாயை'
இருள் கிழித்து
ஆன்மிக ஒளிக்கீற்று
ஞான வழி காட்ட....
அங்கே என் பாதங்கள்
நடை பழகும்!!

பாவக்கறைகள் படிந்த
லௌகீக வாழ்வை
விட்டு விலகி
பரவசமூட்டும்
ஆன்மிக விடிவை
நோக்கி என் ஆன்மா
சிறகை விரிக்கும்!!!

கால நீரோட்டம்
கற்றுத் தந்த பாடங்கள்
'நேர்வழி' செல்வதற்கு
உறுதுணை நெறியாகும்!

இனிமேல்.....

செய்யத் மர்சூன்,
மொறட்டுவை.

## காலைவேளை

விண்மீன் ஆடைகளை
விலக்கி விட்டு
நிர்வாணமாகும் வானம்

மே மாதத்து மேகங்கள்
காமத்து நடை நடந்து
வானத்தை
மேய்ந்து பார்க்கும்.

இரவு கொடுத்து
விட்டுப்போன
குளிர்ச்சியை
இப்போதுதான் வாசித்துப்
பார்க்கும்
ஓர் அருவி....

கா கா வென
கவிதை வாசிக்கும் காகங்கள்....
ராத்திரியை
ஏலம் போடும் சேவல்கள்....

இலைகளின்
ரேகைகளைப் பார்த்து
சோதிடம் சொல்லும்
சூரிய ஒளி...

மர கிளையில்
விரல்களைப் பதிக்கும்
காலைக் காற்று.....

நிர்வாண வண்டுகளுக்கு
ஆடையாகும் பூக்கள்....

அதற்கிடையில்
பனித்துளிகளுக்காக
புல் வெளிகளின்
பிரியாவிடை வைபவம்.

அப்துல் றஹ்மான், பட்டியடிப்பிட்டி.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]


## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"இவர் கவிதையில் – ஆச்சரியப்படும்படியாக பாஷை கரைந்துவிடுகிறது. கற்பூரம் கரைவதைப்போல், பேச்சின்பின் வியாபகமுறும் மௌனத்தைப் போல. இதை இன்னொரு வகையில் சொல்வதென்றால் பாஷைக்கும் அனுபவத்திற்குமுள்ள இடைவெளி கணிசமாகக் குறைந்து விடுகிறது. கவிதையில் இயங்கும் குரல் யாப்பின் விளைவன்று; உள்ளுணர்வின் நுண்மையான சப்தரேகை" என்று நகுலனால் பாராட்டப்படுகிற ஆர்.ராஜகோபாலன், மாணவப் பருவத்திலிருந்தே தமிழின் நவீன இயக்கத்தில் பங்களித்தவர். ஆங்கில இலக்கியம் போதிப்பவர். 'ழ' கவிதை இதழின் இணையாசிரியராக இருந்தவர்.

பேச்சு மொழிக்கு மிக அருகாமையில் இருக்கிறது இவர் கவிதை மொழி. சோடனைகள் அற்ற நடையில் அனுபவத்தைச் சொல்லி அவரடைந்த உணர்வைத் தொற்றவைக்கிறார்.

ஆர்.ராஜகோபாலனின் சில கவிதைகள்.

### என் உலகம்



அமைதியாய் எண்ணமில்லாத சமயம்
யாரோ அவசரமாய்க் கூப்பிடும் குரல்
திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்
வயதேறித் தளர்ந்த கிளியொன்று
கூண்டுச் சட்டத்தைத் தட்டித் தட்டி
மேலும் கீழும் உருண்டு ஓடி
ஏதோவொன்றை எனக்குச் சொல்ல
சன்னமாய்க் குரலெடுத்துச் சோகமாய்க் கூவியது.

இன்னதென்று சொல்ல முடியாமல்
மனது கிடந்து தவித்தது
காற்றில் அலைந்து பிரிந்து
நிலை கொள்ளாமல் போகும்
மதியத்து வெண் மேகங்களாய்.

கூண்டைத் திறந்துவிட்டாலும்
பறப்பது மறந்தே போயிருக்கும்
பின் என்னதான் வேண்டும் அதற்கு.

### உறவுகள்

என்னை நான் மறந்துவிட்டு
மற்றவர்க்காய் காரியங்கள்
செய்ய வேண்டும் என
நீ சொல்கிறாய்

படுத்துக் கொண்டு யோசிக்கும்போதும்
தனியாக நடந்து போகும் போதும்
என்னைச் சுற்றியே என்
பிரக்ஞை உழலுகிறது.

ஏன் நான் இறந்துபோகும் போது கூட
என்னைப் பற்றியே என்
நினைவுகள் இருக்கும்.

ஆக, எப்படியும் என்னை
முதலில் சரிசெய்து கொள்ள வேண்டும்

ஒருவேளை அதுதான்
மற்றவர்க்காய் செய்யும் காரியமோ?

### காலை மணி ஆறு

எதிர் வீடு தூங்கும் போது
படிகளில் கால் பரப்பி விழித்திருந்து
தெரு பெருக்கித் தண்ணீர் தெளிக்க
ஒதுங்கியிருந்து வழிவிட்டு
வரப்போகும் சாதத்திற்கு
வால் குழைத்துக் காத்திருக்கும் நாய்.

பக்கத்துத் திண்ணையில் சத்தமாய்
பேசிக் கொள்ளும் இரண்டு
சிட்டுக் குருவிகள்

உடல் சிலிர்த்து தலை அசைத்து
குப்பை கிளறித் தீனி
தேடிடும் செங்கல்நிறப் பசு

தினசரியைப் பிரித்து
எங்கோ நடக்கும் கொலைகளில்
ஆழ்ந்து போகும் நான்.

### நிலவு

விளக்கிழந்த ஒரு மாலை நேரமாய்
மனதில் பரவிய சோகம்
தூரத்துப் பார்வையில் கூட்டமாய்
மனை திரும்பும் காக்கைகள்
நடந்து முடிந்த கடமைகளின்
பிரதிபலிப்பாய் நினைவில் பெரும் சுமைகள்

கிளை ஒடிந்து இலைகளற்று
வெளிறிய மரம் எதிரில்
நாமே உண்டாக்கிய குழப்பங்களில்
தீர்வு காணா பிரச்சினைகள்
சலிக்காமல் அடுக்கடுக்காய் துன்பம்
கைநீட்டி வழிமறிக்கும்.

ஆனால், கடமைகள் கடமைகள்
சோம்பலையும் மீறி செயல்படவைக்கும்
மகிழ்ச்சி சோகம் எதுவுமே இல்லாமல்
மனது அமைதி வேண்டும்
இருட்டும் இருட்டைக் கீறி எழும் நிலவும் என.

### குருவிகள்

என்ன இது இப்படி
பணத் தட்டுப்பாடு வரும்போதும்
அல்லது உடம்பில் ஏதும்
நோய் வந்தாலும் மனது
மிகவும் குறுகிப் போகிறது.


என்னுள் ஒரு பாதுகாப்பு உணர்வு
யாரையும் கிட்டே சேர்க்காதே
என்பது போல.

ஏன் சுற்றிலும் எங்கும் வன்முறை
மற்றவர்க்கு உதவ வேண்டாம் என்றாலும்
அவர்களை ஏற்றுக் கொள்ளவாவது வேண்டாமா?
என்ன ஆயிற்று இவ்வளவு நாள்
மனித வளர்ச்சி நாகரிகம்
ஒருவேளை வாழ்க்கை என்றால்
நான் மட்டும் என்பதாலா?


பக்கத்திலே
குழாயின் மேல் உட்கார்ந்திருக்கும்
கருங்கழுத்துப் பெருங்குருவி சொல்வது
போலக் கேட்டது
இன்னும் மன அகலம் வேண்டும்
மேலே துணி உலர்த்தும் கம்பியின் மேல்
சிறிய தாம் வெண்குருவி மேலும் சொன்னது
இன்னும் கொஞ்சம் கனிவும் வேண்டும்

சரி குழந்தைகளைக் கூப்பிடு.

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : த.மயூரன்
வயது : 23
முகவரி : காளிகோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, உதைபந்தாட்டம், ரீ.வி, தினமுரசு.



பெயர் : இ.உதயராசா
வயது : 22
முகவரி : இல. 10, காசி கடை வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரீ.வி, கிரிக்கெட்.



பெயர் : செ.செந்தூரன்
வயது : 24
முகவரி : அருள்மனை சிறுவர் இல்லம், மானிப்பாய்.
பொழுதுபோக்கு : எதையும் புதிதாய்த் தேடுதல்.



பெயர் : ப.கவிதா
வயது : 24
முகவரி : Abdallah Zalatimo, P.O Box 5266, Amman 11183, Jordan.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரீ.வி.

# அழகை அள்ளித்தரும் மலர்கள்

"பல வண்ணப் பூக்கள் சூடி மகிழ மட்டுமல்ல, அவைகள் சருமம் மற்றும் கூந்தல் பாதுகாப்பிற்கும் பல விதங்களில் உதவுகின்றன. இவைகளினுள் புதைந்துள்ள மருத்துவக் குணங்களினால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் எத்தனை தெரியுமா?"


"பூக்களின் நறுமணம் அமைதியைத் தருவதுடன் நம் நல்லுணர்வுகளையும் தூண்ட வல்லது. பூக்களுக்கு நறுமணத்துடன் பல பயனுள்ள மருத்துவக் குணங்களும் உண்டு. இவைகள் 'அரோமா தெரபி'யிலும், பேட்ச் ஃபிளவர் ரெமி டீஸ்லும் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. இதுபோன்ற சிகிச்சை முறைகளில் முக்கிய பங்கு வகிப்பது பூக்களின் நறுமணங்கள்தான்.

மல்லி, முல்லை, ரோஜா, செம்பருத்தி, தாமரை, ஆவாரம் போன்ற பூக்கள் அழகுக்கலை சிகிச்சையில் பெரும் பங்கு வகிக்கின்றன. அயல்நாடுகளிலும் கூட இதுபோன்ற சிகிச்சைகளில் பயன்படும் லேவண்டர், சாமோமிலி போன்ற மலர்கள் உண்டு. இவைகள் மிகுந்த மருத்துவப் பயன்கள் கொண்டவை. ஆனால், இவைகள் நம் நாட்டில் கிடைப்பதில்லை.

தவிர, சூரியகாந்தி, செண்பகம், தாழம்பூ, மகிழம்பூ, சாமந்தி (மஞ்சள் நிறம் கொண்டவை) மரிக்கொழுந்து, வேப்பம்பூ, மருதாணிப்பூ, எலுமிச்சம் பூ இப்படி பலவகைப் பூக்கள் அழகுச் சிகிச்சைக்குப் பெரிதும் உதவுகின்றன.

25 கிராம் எலுமிச்சம் பூவை 250 மில்லி டிஸ்டில்ட் வாட்டரில் ஒரு மணி நேரம் கொதிக்கவிட்டு ஆறவைத்து, வடிகட்டி சம அளவு பன்னீர் சேர்த்து அதனுடன் ஒரு டீஸ்பூன் முல்தானிமுட்டி பவுடரைச் சேர்த்துக் குழைத்து முகத்தில் பேக் போல போட, முகத்தில் அதிகமாக உள்ள எண்ணெய்ப் பசை குறையும். எண்ணெய்ப் பசை மிகுந்த சருமத்திற்கு நல்லதொரு சிகிச்சை இது.

தொன்றுதொட்டு நம் நாட்டுப் பெண்கள் விரும்பிச் சூடிக்கொள்ளும் குண்டு மல்லிகையை எண்ணெயாக வடித்துப் பயன்படுத்துவது உண்டு. இதன் எண்ணெய் சிவப்பு நிறத்தில் வரும். இதன் தாவரப் பெயர் ஜாஸ்மினம் எபிசினேட். புண்களை ஆற்றும் குணம் மல்லிகைக்கு உண்டு. இதன் நறுமணம் நம் மனத்திற்கு மிகுந்த புத்துணர்வு தரும். அரோமா தெரபியில் இதை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதைப்



பன்னீர் சேர்த்து நன்கு இடித்துச் சாறு பிழிந்து பாலேட்டுடன் கலந்து முகத்தில் மஸாஜ் செய்துவர நிறம் கூடும் முகம் பளபளப்பாகும். இதன் பலனை முழுமையாகப் பெற சைனா களிமண் கொண்டு செய்யப்பட்ட சிறிய உரலை மல்லிகை மலரை இடிக்கப் பயன்படுத்த வேண்டும். இதிலேயே நல்லதொரு 'ரிசல்ட்' கிடைக்க கீழ்க்கண்ட முறையைப் பயன்படுத்தலாம்.

பாலை பஞ்சில் நனைத்து முகத்தை நன்கு துடைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் சருமத்தின் அடி ஆழத்தில் உள்ள அழுக்குகள் நீங்கும். பின்பு உலர்ந்த மகிழம் பூக்களை சற்றுக் சொரசொரப்பாக அரைத்து அதனுடன் 3 முதல் 4 துளிகள் தேன் சேர்த்துக் கலந்து முகத்தில் தேவையான இடங்களில் 'ஸ்க்ரப்'பாகப் பயன்படுத்தித் தேய்க்க, சருமத்தில் உள்ள இறந்துபோன செல்கள் அகலும். பின்பு மல்லிகைப் பூவை நன்கு மை போல அரைத்து அதனுடன் சிறிது தேன் கலந்து புருவம், இமைகளில் படாமல் மஸாஜ் செய்யலாம்.

இதே போல சம அளவு ரோஜா இதழ்களுடன், மல்லி இதழ்களைச் சேர்த்துப் பன்னீர் விட்டுப் பசை போல அரைத்து முகத்தில் தடவி உலரவிட்டு பின்பு நல்ல தண்ணீர் கொண்டு கழுவலாம். சருமத்திற்கு ஆரோக்கியம் தரும் சிகிச்சைகள் இவை.

கண்களின் கீழ் ஏற்படும் கருவளையம் என்பது இன்று பலருக்கும் உள்ள பொதுவான பிரச்சினை. இதற்கு நல்ல பலன் தரக்கூடியவை ரோஜா இதழ்கள். ரோஜா என இங்கு குறிப்பிடப்படுவது சாதாரண ரோஸ் நிறம் கொண்ட ரோஜாக்கள். பல நிறம் கொண்ட ரோஜா மலர்களை அல்ல. இந்த சாதாரண ரோஜா மலர்கள்தான் குல் கந்து தயார் செய்யவும், பன்னீர் தயாரிக்கவும் உதவும்.

இந்த ரோஜா இதழ்களை ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனுடன் 250 மி.லி. டிஸ்டில்ட் வாட்டர் சேர்த்து 15 நிமிடங்கள் கொதிக்கவிட்டு ஆறவைக்க வேண்டும். நன்கு ஆறிய பின்பு அதில் பஞ்சை நனைத்து கண்களைச் சுற்றிலும் தடவி வர கருவளையம் மாறும். ரோஜா இதழ்களைக் கொண்டு தயார் செய்யப்படும் குல்கந்தை தினமும் உண்டு வர நிறம் கூடும் என்பது இன்றும் பலரின் நம்பிக்கை.

# லேடிஸ் ஸ்பெஷல்




## நலமாக வாழ்வோம்

### ஜானு சீர்சாசனம் செய்வதால் ஏற்படும் பலன்கள்

1. எருவாய், கருவாய் பகுதிகளிலுள்ள நரம்பு மண்டலங்களும் தசைகளும் வலிமை பெறுகிறது.
2. இரவில் ஏற்படும் சொப்பன ஸ்கலிதத்தையும், வீரியக் குறைபாடுகளையும் போக்கிவிடுகிறது.
3. ஆண்களுக்கு ஏற்படும் வெள்ளை விழுதல் (Spermatirrhoea) எனும் நோயை இது போக்கிவிடும்.
4. சிறுநீரகம், சிறுநீர்ப்பை, சிறுநீர் குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் கற்களை இந்த ஆசனம் கரைத்துவிடும்.
5. பிரமச்சரியத்தைக் கடைப்பிடிக்க உதவும்.
6. சிற்றின்ப போகத்தில் அளவுக்கு மீறி ஈடுபட்டு அதனால் உடல் நலிவு ஏற்பட்டவர்களுக்கு இவ்வாசனம் புத்துயிர் ஊட்டும்.
7. நீரிழிவு நோய்க்கு மிக முக்கியமான ஆசனம்.
8. குண்டலினி சக்தியை எழுப்புகிறது.
9. வயிற்று உப்புசம், இருமல், சளி, காய்ச்சல் ஏற்பட்டால் உடன் குணமாகும்.
10. உடல் எடை தொந்தி குறையும்.
11. ஆண்களுக்கு விரை வீக்கத்தை சரி செய்கிறது.
12. தாதுக் குறைவால் ஏற்பட்ட ஆஸ்துமா நோய் குணமாகும்.
13. பெண்களுக்கு கருப்பை சம்பந்தமான நோய்கள் இருந்தால் அதனாலும் ஆஸ்துமா நோய் வருவதுண்டு. இந்த ஆசனம் கருப்பை கோளாறுகளை சரி செய்துவிடுவதால் ஆஸ்துமா நோய் குணமாகும்.
14. இந்த ஆசனத்துடன் சர்வாங்காசனம் செய்து வந்தால் வயதான காலத்தில் ஏற்படும் புரோஸ்டேட் கிளாண்டு வீக்கத்தை சரி செய்துவிடும்.
15. இரவில் படுக்கையில் சிறுநீர் கழித்துவிடும் குழந்தைகளுக்கு அவ்வாறு ஏற்படாமல் இவ்வாசனம் தடுத்துவிடும்.
16. குடல் இறக்கத்தை சரி செய்துவிடும்.

**செய்முறை :-**

1. விரிப்பின் மீது கால்களை நீட்டி அமரவும்.
2. வலது காலை மடித்து இடது தொடையை உள்ளங்கால் தொடும்படி வைத்து குதிக்காலை உள்ளே இழுத்து தொடை இணைப்பைத் தொடும்படி வைக்கவும். இது 'ட' வடிவத்தில் இருக்கும்.
3. கைகளை பக்காவாட்டில் கொண்டு வந்து மேல் நோக்கி நீட்டவும்.
4. முன்னால் குனிந்து நெற்றி கால் முட்டியைத் தொடும்படி செய்து இடது கால் கட்டை விரலைக் கைகளால் பிடிக்கவும்.
5. சாதாரண மூச்சில் 30 எண்ணிக்கை இருக்கவும். கண்கள் மூடியிருக்க வேண்டும்.
6. கட்டை விரலைப் பிரித்து கைகளை நீட்டி நிமிர்ந்து உட்காரவும். கைகளை பக்கவாட்டில் கொண்டு வந்து தரையில் வைக்கவும்.



அப்படியே ஓய்வு எடுக்கவும்.

7. மறுமுறை குனிந்து முன்பு கூறியது போல் செய்யவும். பிறகு கால்களை நீட்டி அமரவும்.
8. மாற்று ஆசனமாக இடது காலை மடித்து இரண்டு முறை செய்து ஓய்வு எடுக்கவும்.

***குறிப்புகள்***

1. இந்த ஆசனத்தை மஹாமுத்திரை அல்லது ராஜமுத்திரை என்று கூறுவர்.
2. குதிக்கால் மீது உட்காரக் கூடாது.
3. குனிந்து கட்டை விரலைத் தொடுவதற்காக கால்களை சரி செய்யக் கூடாது. அப்படி சரி செய்திருந்தால் கால்களை பிரித்து நீட்டியதும் பாதங்கள் விலகி இருக்கும். அப்படி விலகாது ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும்.
4. முடிந்தளவு முயற்சிக்கவும் கால்களைத் தொட முடியவில்லை என்று நீட்டிய காலை மடித்துச் செய்யக் கூடாது. கால் முட்டி அல்லது தொடையைப் பிடித்து குனிந்து செய்யலாம்.
5. அடி முதுகு வலி, முதுகுத்தண்டுக் கோளாறு உள்ளவர்கள் இவ்வாசனத்தை தவிர்க்கவும்.

# மலச்சிக்கலுக்கும் தீர்வு காணலாம்!

மலச்சிக்கல் என்று தன் பெயரிலேயே சிக்கலை வைத்துக் கொண்டுள்ளது இவ் வியாதி. அது மட்டுமல்ல, இந்த ஒரு சிக்கலால் உடலின் பல பாகங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்த முக்கியமான சிக்கல் தீர்ந்தால் பல சிக்கல்கள் தீரும் வாய்ப்பு உள்ளது. (அப்பாடி எத்தனை சிக்கல்கள்!) காலைக் கடன்களில் மலசலம் கழிக்கும் கடன் சீராக முடிந்தால் உடல் ஆரோக்கியத்துடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பதை நாம் உணரலாம்.

சரி, இதன் ஆரம்பக் கட்டத்திற்குப் போவோம். நம் வாயில் போடும் உணவு நன்கு மெல்லப்பட்டு உமிழ்நீருடன் கலந்து கிரியை புரியும்போது முதற்கட்டமான செரிமானம் ஆரம்பமாகிறது. பிறகு உணவு வயிற்றுக்குள் தள்ளப்படுகிறது. உணவை நன்கு மெல்லாமல் அவசரம் அவசரமாக விழுங்குபவர்களுக்கு ஜீரண சக்தி குறைவாக இருக்கும்.

வயிற்றில் உணவு அங்குள்ள அமிலங்களுடன் நன்கு கடையப்பட்டு சிறுகுடலுக்குச் செல்கிறது. வயிற்றிலுள்ள அமிலத்தன்மை அதிகமாகும் போது நமக்கு அசிடிடி அல்லது நெஞ்செரிச்சல் உண்டாகிறது. செரிமானம் பாதிக்கப்படுகிறது.

சிறுகுடலுக்கு வந்த உணவு அமிலத்தன்மையுடையது. கணையத்திலிருந்து கணைய நீர், கல்லீரலில் இருந்து பித்தநீர் இவை காரத்தன்மையுடையன. இவற்றுடன் சிறுகுடலில் சுரக்கும் பல என்ஸைம்களுடன் கலந்து உணவு அமிலத்தன்மை இழந்து நடுநிலை அடைகிறது. இங்கு உணவின் சத்துக்கள் உட்கிரகிக்கப்பட்டு, சக்கைகள் பெருங்குடலுக்குள் தள்ளப்படுகின்றன.

பெருங்குடலில் இக் கழிவுகளில் உள்ள நீர் உறிஞ்சப்பட்டு, மலமாக வெளியேறுகிறது.

***மலச்சிக்கல் ஏற்படுவதன் காரணங்களும் தீர்வுகளும்:***

1. நமது செரிமானம் வாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் என்று நான்கு நிலைகளில் செயற்படுகிறது. இதில் எந்த நிலையில் தடை ஏற்பட்டாலும் மலச்சிக்கல் ஏற்படும். ஆகவே செரிமானம் நன்கு நடைபெறும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. போதிய அளவு நீர் குடிக்காததால் மலச்சிக்கல் ஏற்படும். காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் 2 அல்லது 3 தம்ளர்கள் நீர் அருந்த வேண்டும். நீரில் எலுமிச்சைச் சாறு கலந்தும் குடிக்கலாம். சிலர் இரண்டு லீட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று கூறுவர். இது சரியல்ல. அதிக அளவு நீர் குடித்தால் சிறுநீரகங்களின் வேலை அதிகமாகி பாதிப்பு ஏற்படலாம்.

3. நாம் உண்ணும் உணவில் நார்ச்சத்துக் குறைவாக இருந்தால் மலச்சிக்கல் ஏற்படும். வெள்ளை ரொட்டி, கேக், பிஸ்கெட், ஜாம், கிரீம், துரித உணவுகள், டின்களில் பாதுகாக்கப்பட்ட உணவுகள் இவை மலச்சிக்கலை ஏற்படுத்தும். கீரைகள், காய்கறிகள், பழங்கள் இவற்றில் நார்ச்சத்து அதிகம் உள்ளது.

4. வயதானவர்களுக்கும், போதிய உடற்பயிற்சி இல்லாதவர்களுக்கும் மலச்சிக்கல் ஏற்படும். வயதானவர்கள் அதிக சத்துள்ள உணவுகள், காய்கறிகள், பழங்கள், நார்ச்சத்துள்ள உணவுகள் இவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். அவரவர் வயதிற்கேற்ப காலையில் சுமார் அரை மணி நேரமாவது எளிய உடற்பயிற்சிகள் செய்யலாம். நடத்தல், ஜாகிங் போன்ற பயிற்சிகள் செய்யலாம்.

5. மலச்சிக்கல் ஏற்பட்டால் சிலர் உடனே மலமிளக்கி மருந்துகளை நாடுவர். இம் மருந்துகள் சில நாட்களுக்குத்தான் பலன் தரும். பிறகு மருந்துகளின் அளவை அதிகரிக்க வேண்டி வரும். இம் மருந்துகளால் குடல் பலவீனமடை.கிறது. உடலில் வைட்டமின் சத்துக்கள் உட்கிரகிக்கும் சக்தி குறைந்துவிடும். ஆகவே, இம் மருந்துகளைத் தவிர்த்து இயற்கையான முறைகளைப் பின்பற்ற வேண்டும். மருந்திற்குப் பதில் இவர்கள் எனிமா எடுத்துக்கொள்ளலாம். இயற்கை வைத்தியத்தில் உபயோகிக்கும் எளிமையான எனிமா கருவி மருந்துக் கடைகளில் கிடைக்கும் சில நாட்களுக்கு எனிமா எடுத்துக் கொண்டால், பிறகு இயற்கையாகவே மலம் கழிக்கும் பழக்கம் வந்துவிடும்.

# சமைப்போம் சுவைப்போம்

***தொகுத்துத் தருவது : ஷோபா***

## சால்ட் குல்ஃபி

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| துருவிய வெள்ளரிக்காய் | – 1 கப். |
| புளிக்காத கெட்டித் தயிர் | – 2 கப். |
| துருவிய இஞ்சி | – 1 ஸ்பூன். |
| பொடியாக அரிந்த மாங்காய் | – 2 ஸ்பூன். |
| உப்பு | – தேவையான அளவு. |
| பெருங்காயத் தூள் | – தேவையான அளவு. |
| பொடியாக அரிந்த கொத்தமல்லித் தழை | – 1 ஸ்பூன். |
| ஃப்ரெஷ் க்ரீம் | – 1 கப். |

***செய்முறை :–***

1. வெள்ளரிப் பழத்தை தோல் நீக்கி, விரல்களால் நன்கு மசித்துக்கொள்ளவும். (மிக்ஸியில் போட வேண்டாம்)

2. பாலில் கஸ்டர்ட் பவுடரைக் கலந்து, அடுப்பில் வைத்து, கட்டிபடாமல் கிளறி, இட்லி மாவு பதத்தில் நிறுத்தி ஆறவைக்கவும்.

3. ஒரு அகலமான பௌலில், கன்டென்ஸ்ட் மில்க், பொடித்த சர்க்கரை, கஸ்டர்டு மூன்றையும் நன்கு கலந்து கொள்ளவும். இத்துடன் மசித்த வெள்ளரிப்பழம், உடைத்த முந்திரி, சாரைப் பருப்புகள் சேர்த்துக் கலந்து, குல்ஃபி மோல்டு(அ) சிறிய ஐஸ்கிறீம் கப்புகள் (அ) சிறிய தம்ளர்களில் இக் கலவையை முக்கால் அளவிற்கு ஊற்றி, 2 (அ) 3 மணி நேரம் ஃப்ரீஸரில் வைக்க சுவையாக, சத்தான "குக்கும்பர் ஸால்ட் குல்ஃபி" ரெடி.

4. ஒரு பாத்திரத்தில் கெட்டித் தயிர், ஃப்ரெஷ் க்ரீம், உப்பு சேர்த்து நன்கு அடித்து, இத்துடன் வெள்ளரித் துருவல், பொடியாக நறுக்கிய மாங்காய், துருவிய இஞ்சி, நறுக்கிய கொத்தமல்லி தழை சேர்த்துக் கலந்து, முன் கூறியது போல், குல்ஃபி மோல்டு (அ) ஐஸ்கிறீம் கப் (அ) தம்ளர்களில் ஊற்றி ஃப்ரீஸரில் 2 (அ) 3 மணி நேரம் வைத்தால் "குக்கும்பர் ஸால்ட் குல்ஃபி" ரெடி.

***குறிப்பு :–*** வெள்ளரிப் பழத்திற்குப் பதில் அந்தந்த சீசனில் வரும் பழங்கள் மாம்பழம், பப்பாளி, சப்போட்டா போன்ற சதைப் பற்றான பழங்கள் சேர்த்தும் குல்ஃபி செய்யலாம்.

# துரோகம் துரத்துகிறது!

**அங்கம் 6**



தாய்க்கும் பெண்ணுக்கும் உள்ளே ஹால் தெரியாதபடி நிறுத்தி, கர்ட்டனை இழுத்து விட்டிருந்தார்கள்.

"பாலுசாமி! உன் பெண்டாட்டி, பெண்ணுங்க வந்திருக்காங்க! சொல்லிடறியா? அல்லது..."

பல் கிடுக்கியது.

அடுத்த நிகழ்ச்சி அவசரமாக நடந்தது.

தாயை அழைத்து ஒரு பனியன் அப்பால் கூட்டிப் போக, மற்றொரு பனியன் அந்தப் பதினைந்தின் அருகில் வந்து விருட்டென்று கையை வலது மார்பில் பாய்ச்சி...

"அம்மா அம்மா" என்று பிஞ்சு அலறல் இறக்கை அடித்துத் தத்தளிக்க,

சோளியின் கிழிசல், பனியனின் கையோடு வந்துவிட்டது.

பாலுசாமி திடுக்கிட்டான் - "காந்தா" என்று கத்தினான்.

- "அப்பா" என்றாள் அவள்.

பாலுசாமியின் கண் உயிர்த்து சுற்றிப் பார்த்தது - "அட, பாவிகளா" என்று சாபம் இட்டது.

அவன் உடம்பு நெளிந்தது.

"என்னை இறக்குங்குடா, பாவிங்களா! சொல்லிடறேன்" என்றான்.

இறக்கினார்கள். பெண்ணையும் அம்மாவையும் வண்டியில் கொண்டுபோய் உட்கார வைத்தார்கள்.

பாலுசாமி மேசையில் கிடந்தான். மூச்சு பெரிது பெரிதாய் வந்தது. வாயிலிருந்து ரத்தம் கசிந்தது - "பாவிங்களா, பாவிங்களா" என்று முணுமுணுத்தான்.

"சொல்லு சீக்கிரம்!"

கூண்டு மிருகத்தின் பரிதாபக் கண்ணோடு பார்த்தான்.

"சொல்றேன்! சொல்றேன்."

பெருமூச்சுகளாக விட்டான். உடம்பு உலைந்து அங்கங்கே சிதறிப்போய்க் கிடந்தது.

"சொல்லு.... கூட்டாளி யாரு?"


- அவன்தான், அவன்தான்!...

(இழைத்தான்) லோகநாதன்...

"இன்னொருத்தன்?"

இழைப்பு அடங்கவில்லை.

"பால..."



பாதி வார்த்தையில் மூர்ச்சை ஆனான்!

கமலம் முத்து முத்தாக எழுதிருந்தாள்.

உங்கள் ஜோலி முடிந்துவிட்டதா? சித்தப்பா சந்தோஷமாக இருக்கிறார். ஆஸ்மா இப்போ வருவதில்லை. விஜயா நன்றாகப் படிக்கிறாள். பாட்டு கத்துக்கணும் என்கிறாள். காப்பிப் பொடி அலமாரியின் வலது பக்க அலுமினிய டின்னில் இருக்கிறது...

சீக்கிரம் வந்துடுங்க! சீக்கரம் வந்துடுங்க. இரண்டைக் கோடு போட்டு முடித்திருந்தாள்.

சீக்கிரம் போக வேண்டியதுதான்!

ஒரு விஷயத்திற்குக் காத்திருந்தான். மூன்று பேரில் ஒருத்தன் கிடைத்துவிட்டான். அந்த லோகநாதனையும், பால... ஐயும் பொலிஸ் வலை விரித்துத் தேடுகிறார்கள். (முழுப் பெயரையும் சொல்லிட்டு மூர்ச்சை போட்டிருக்கக் கூடாதா?)

இவர்கள் கிடைத்துவிட்டால், பெரிய தொகை கிடைக்கும்! அவார்டு கூடக் கிடைக்கும்!

ஆனால், ஒரு வாரமாகிவிட்டது. இரண்டு ஆட்களும் கிடைக்கவில்லை. தலைமறைவாகிவிட்டார்கள். இங்கிருந்தான், அங்கிருந்தான் என்கிறார்கள். எங்கேயும் இல்லை.

ஓர் ஐம்பது சதவீதம் பயம் இருந்தது.

எல்லாக் கஷ்டத்திற்கும் இவன்தான் காரணம் என்று தெரிந்து இவர்கள் பழிவாங்க வந்தால்...

- எமர்ஜென்ஸி இருக்கு! என்று இன்ஸ்பெக்டரின் பொன்மொழிகள் 'நானிருக்கப் பய'மேனாக இருந்தது.

வாசல் கதவு தடதடத்தது.

" யார்?" என்றான்! இடுக்கில் பார்த்தான். படீர் என்று திறந்தான்.

பாலுசாமியின் சம்சாரம் வந்தாள். அழுது வெளுத்திருந்தாள். கண்கள் தொய்ந்திருந்தன. இளைத்திருந்தாள்.

இடுப்பைக் காட்டி மடிப்பை அவிழ்த்தாள். பிதுங்கும் தோலைப் பார்த்ததும் மனம் சில செகண்டுகள் கெட்டுப் போயிற்று.

"இதை வச்சுக்குங்க."

இருபது நூறு ரூபாய்த் தாள்கள்!

"என்ன இது!"

- எப்படியாச்சும் அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்துவிடுங்க! கோடிப் புண்ணியமுண்டு! அவர் இல்லாட்டி குடும்பம் பாழாப் போயிடும். ராமக்கா மாதிரி நா ஆயிடுவேன். கருணை வையுங்க! உங்க சகோதரின்னு நினையுங்க."

அவன் எண்ணப்படி அழகாக அழுதாள்.

"என்னாலே என்ன செய்ய முடியும்மா? போலிஸ் அவங்க நினைச்சாத்தான் ஏதேனும் செய்ய முடியும். எனக்கும் அவங்களுக்கும் எந்த சம்பந்தமும்..."

"அப்படிச் சொல்லிடாதீங்க! போலிஸிலே உங்களுக்கு செல்வாக்கு உண்டுன்னு எனக்குத் தெரியும்!"

"யார் சொன்னாங்க?"

"எத்தின பேரு பணத்தையும், பொருளையும் இந்த வீட்டிலே கொண்டு கொடுத்திருக்காங்க? அவங்கள்லே ஒருத்தர் சொல்லமாட்டாங்களா? எனக்காக இதைச் செய்திடுங்க! உங்களைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன்."

நின்றால் மறுத்துவிடுவானோ என்று பயந்து விடுவிடென்று போய்விட்டாள்.

பச்சை நோட்டு பால் மணம் மாறாமல் இப்போதுதான் பிறந்திருக்கிறது.

ஒரு ஸைசிக் விறுவிறுப்பு அவனை இழுத்தது. நோட்டைப் பார்க்கும் கணத்தில் எவ்வளவு பெரிய துக்கமானாலும் மறந்துவிடுகிறது. அதனுடன் அப்படி ஓர் அன்னியோன்னியம்!

நிலவறையில் கொண்டு வைத்தான்.

மீண்டும் அவள் பத்தாவது நாளில் வந்தபோது ஏற்கெனவே பதில் யோசித்திருந்தான்.

"இன்னும் மூவாயிரம் வேணும். இன்ஸ்பெக்டர் அவங்க இவங்கன்னு கொடுக்கணுமே!"

ஸ்தம்பித்து நின்றாள்.

"எங்கே போவேன்," என்றாள்.

அவன் எங்கேயோ அனாயாசமாகப் பார்த்திருந்தான்.

"அவ்வளவு பணத்துக்கு எங்கே போவேன்?" என்றாள்.

ரொம்ப நாழிகை நின்றாள். பிறகு எதுவும் முடிவு செய்யாமல் போனாள்.

இந்தத் தடவைதான் அந்த ஆசை வந்தது. கமலம் ஊரில் இல்லாத நேரம். இத்தனை நாள் தொடர்ந்தாற் போல் உடலுக்கு அந்த சுகம் மறுக்கப்பட்டதில்லை. இப்போது இவளது உடம்பு வந்து உறுத்தியது. அந்தத் தொடைகளின் புஷ்டிகள் அவனைப் பைத்தியமாக்கின. சுந்தரமான உடம்பு! ஒரு முதிர்ச்சியான சுகத்தைத் தேடிக்கொள்ளலாம்.

அடுத்த முறை வந்தபோது அந்த பதில் காத்திருந்தது.

அதற்குத் தகுந்தாற் போல் அவளுக்கும் ஆயிரம் ரூபாய் குறைவாக இருந்தது. வீட்டில் எல்லாவற்றையும் விற்றுவிட்டேன்" என்றாள்.

எதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

பணக் குறைவை நிறைவாக்க வழி இருக்கிறது என்று ஆரம்பித்து அந்த வழியையும் சொல்லியபோது...

தாய் முதல் வாரம்!

மகள் மறு வாரம்!

கதவு தட்டியது. திறந்தான். வழக்கம் இல்லாமல் காலையில் அவள் வந்திருந்தாள்.

அவள் கத்தியை உருவியிருந்தாள். சந்தேகமே இல்லை. அது கத்திதான்!

"ஏய் மோசக்காரா? இன்னிக்கு வந்துடுவாருன்னு ஒவ்வொரு வாரமும் ஏமாத்திக்கிட்டே வந்தே! பொருளெல்லாம் வித்து ஐயாயிரம் கொடுத்தேன்! என்னைக் கொடுத்தேன்! என் மகளைக் கொடுத்தேன். இன்னும் என்னடா கொடுக்க பாக்கி இருக்கு? என் புருஷன் எங்கேடா? என் புருஷன் எங்கே?"

கேள்வியே கத்தி போல் வெட்டியது. நிஜக் கத்தி கையில் ஆடியது. இன்னும் இரண்டு செகண்டில் சாடிடுவாள்.

அவளைக் குறைத்து மதிப்புப் போட

**எழுதுவது**
**புஷ்பா தங்கதுரை**

இஷ்டமில்லை. ஆத்திரத்தில் வந்ததால் ஆயிரம் பலம் இருக்கும். ஒன்று சாகடிப்பாள்! அல்லது சாவாள்!

"கொஞ்சம் நில்லு! நான் சொல்றதைக் கேளு." இரண்டு கையையும் நீட்டிக் கெஞ்சினான்.


- இன்ஸ்பெக்டர் செய்யறேன்னுதான் சொன்னாரு! இந்த வாரத்திலே முடிச்சுடுவாரு! இதோ போறேன்! இதோ...

அவனுக்கு ஆச்சரியம். அவள் கண்களில் ரத்தம் ஊறியிருந்தது.

(துரோகம் துரத்தும்......)

# இரண்டாம் உலக யுத்த ஞாபகார்த்தம்
# எண்பது வயதுக் கிழவர்கள்
# இராணுவ அணிவகுப்பு

1944ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் திகதி உலக வரலாற்றில் மறக்க முடியாத ஒருநாள். இரண்டாவது உலக மகா யுத்தம் உலகை உலுப்பிக் கொண்டிருந்த வேளையில், அமெரிக்காவும் அதன் நேச அணியான ஐரோப்பிய நாடுகளும் இணைந்து ஹிட்லரின் நாஸி ஜேர்மனியின் பிடியிலிருந்து ஐரோப்பாவை மீட்பதற்கான இறுதி யுத்தத்துக்கு வித்திட்ட நாள் இது. "ஒப்பரேசன் ஓவர்லோட்" என்ற பெயருடன் நடத்தப்பட்ட இத் தாக்குதல் நடவடிக்கை பிரான்ஸின் நோர்மான்டிக் கடலோரத்தில் ஆரம்பமானது. அறுபது மைல்கள் நீளமான இக் கடற்கரைப் பகுதியில் ஜேர்மனியப் படைகளை விரட்டியடிப்பதற்காக சுமார் 23 ஆயிரத்து நானூறு பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகள் அன்று தரையிறங்கின. 'டி - டே' என்றழைக்கப்படும் இத் தளத்துக்குப் பின்னர் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் நேச நாடுகளின் துருப்புகள் கொண்டுவந்து குவிக்கப்பட்டன.



ஜோர்ஜ் புஷ்



மகாராணி எலிசபெத்

1944ஆம் ஆண்டு ஜூன் ஆறாம் திகதி மட்டும் நடந்த யுத்தத்தில் நேசநாடுகளின் படைகளைச் சேர்ந்த 2,500 துருப்புகள் கொல்லப்பட்டன. மேலும் எண்ணாயிரம் பேர் காயங்களுக்கு உள்ளானார்கள். ஜேர்மன் தரப்பில் நான்காயிரத்திலிருந்து ஒன்பதாயிரம் பேர் வரை கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருக்கலாமென மதிப்பிடப்பட்டபோதிலும் இன்றுவரை உண்மையான இழப்பு விபரங்கள் சரிவரத் தெரியவில்லை. இதன் தொடர்ச்சியாக பிரான்ஸின் வட பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் வரை இறந்திருக்கலாமென மதிப்பிடப்படுகிறது. நோர்மான்டியில் உடா, ஒமகா, கோல்ட், ஜூனோ, ஸிவோர்ட் எனப் பல பெயர்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் கீழ் நேச நாட்டுத் துருப்புகள் கொண்டுவந்து இறக்கப்பட்டன.

அமெரிக்காவுக்குப் பின்னர் கூடியளவு துருப்புகளை நோர்மான்டியில் இறக்கிய நாடு பிரிட்டன். அதற்கு அடுத்தபடியாகக் கூடியளவு துருப்புகளை இறக்கியது கனடா. ஹிட்லரின் இராணுவத்திடமிருந்து பிரான்ஸை வீடுவித்த இந்த நடவடிக்கையின் ஞாபகார்த்தமாகக் கடந்த ஆறாம் திகதி மாபெரும் வைபவம் பிரான்ஸின் வட கடலோரத்தில் இடம் பெற்றது. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், பிரிட்டிஷ் மகாராணி எலிசெபத், பிரான்ஸ் ஜனாதிபதி சிராக், ஜேர்மன் அதிபர் ஜெர்ஹார்ட் ஸ்ரோடர், கனடா பிரதமர் போல் மார்ட்டின், அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவார்ட் உட்பட இருபது நாடுகளின் தலைவர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். நோர்வே, பெல்ஜியம், நெதர்லாந்து, போலந்து, நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். இந்த யுத்தத்தில் பங்குபற்றி இப்போது எண்பது வயதைத் தாண்டி விட்ட முன்னாள் போர்வீரர்கள் பலரும் இந்த வைபவத்தில் பங்குபற்றியமை முக்கிய நிகழ்வாகும். நேசப் படைகள் தரையிறங்கிய அரோமான்சஸ் என்ற கடலோரப் பகுதியில் இந்த யுத்தத்தில் பங்குபற்றிய இராணுவ வீரர்களின் பிரதிநிதிகளுக்கு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்ட போது, உலகத் தலைவர்கள் உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து மக்களும் எழுந்து நின்று கரகோசம் செய்தனர்.

இங்கு உரையாற்றிய பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்குவெஸ் சீராக், "சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய இலட்சியங்களைப் பாதுகாப்பதற்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த போர்வீரர்களைக் கௌரவிக்க வேண்டியது நவீன தலைவர்களின் கடமையாகும்" என்று குறிப்பிட்டார்.


அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது உரையில் "நீங்கள் சேவை புரிந்த நாடுகளாலும், நீங்கள் வீடுவித்த தேசங்களாலும் என்றுமே கௌரவிக்கப் படுவீர்கள்" என்று இரண்டாம் உலக யுத்தத்தில் பங்குபற்றி பிரான்ஸை மீட்டெடுத்த போர்வீரர்களைப் பார்த்துக் கூறினார். ஜெர்மன் அதிபர் ஜெர்ஹார்ட் ஸ்ரோடர் அங்கு உரையாற்றுகையில், "வெறுப்பு, குரோதம் ஆகிய உணர்வுகளுக்கு எதிர்காலம் இல்லையென்பதை எடுத்துக்காட்டுவதற்காகப் பிரான்ஸ் - ஜேர்மன் நல்லிணக்கத்தை நாம் உதாரணமாகக் காட்டுகிறோம்" என்று குறிப்பிட்டார்.



போரை நினைத்துப் பார்க்கும் ஒருவர்

சுமார் இரண்டாயிரம் அமெரிக்கத் துருப்புகள் மரணமடைந்த ஒமாகா கடலோரக் குன்றுகளிலிருந்து 21 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டன. அமெரிக்க, பிரான்ஸ் தேசிய கீதங்களும் இங்கு இசைக்கப்பட்டன. நோர்மான்டி கடற்கரையை அண்டிய பகுதிகளில் சுமார் முப்பதாயிரம் இராணுவ வீரர்கள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். ஹெலிகொப்டர்களும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

# 13 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

நான் மிரண்டு போனவளாகப் பார்த்துக் கொண்டிருந்தேன் - எனது தலையின் வலது பக்கத்திலிருந்த கூந்தலின் பெரும் பகுதியை அவர் வெட்டித் தள்ளிவிட்டார். நான் கீச்சிட்டேன். நான் எங்கே காட்டுகிறேன் என்பதை அவர் கடைசியாகக் கவனித்த பிற்பாடு சொன்னார்: "ஓ எனது கத்தரி வழுக்கி விட்டது. நான் அடுத்த பகுதியையும் அதே போல் செய்து விடுகிறேன்" என்றார். நான் அதிர்ந்து போய் இருந்தேன். எனது மீதித் தலைமயிரும் என் கண்முன்னே என்னை விட்டும் மறைந்து கொண்டிருந்ததை நான் கண்ணுரக் கண்டுகொண்டிருந்தேன். எனது ஹெயார் ஸ்டைலை என்னவென்று வர்ணிப்பேன்? எனது அப்பாவித் தாயார் என்னை தைரியப்படுத்தினார். ஆனால் எனக்கல்லவா தெரியும் எனது வாழ்க்கையே நாசமாகிவிட்டது.

நான் வீட்டை விட்டு வெளியேறவே மறுத்தேன். பிறகு வென் ஃப்ராஸ்லின் உடைய Five & Dime Store இல் குதிரைவால்" பாணியில் போலிக் கூந்தலை வாங்கினேன். அதை எனது தலையின் உச்சியில் வைத்து குண்டுசியால் அல்லது கொழுக்கியால் எனது தலையோடு ஒட்டவைத்தேன். அதைச் சுற்றிலும் ஒரு ரிப்பனால் கட்டினேன். அத்துடன் கத்தரியால் தலைமோசம் போன சங்கதியே நடக்காதது போல் நடித்தேன். அதைத்தான் என்னால் செய்ய முடிந்தது. ஆகவே நான் அந்த முதலாவது நாள் என்னைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாது நடக்க ஆரம்பித்தேன். எதுவரையென்றால் வகுப்புகளுக்கிடையே இருக்கும் க்ரான்ட் சென்றல் ஸ்டெயாகேஸைக் கடக்கும் வரைதான். அப்போது மேலே வருபவன் ஏர்னஸ்ட் ரிக்கட்.

ரிக்கி என்றே பிரசித்தமாயிருந்தான் - அவன். பாலர் வகுப்பிலிருந்தே நானும் அவனும் ஒன்றாகப் படித்தவர்கள். அவன் "ஹலோ" சொன்னான். அவன் என்னைக் கடந்து போகும்வரை அமைதியாய் இருந்தேன். அதன் பிறகு எனக்குப் பின்னால் வந்து எனது கொண்டையைப் பிடித்திருந்தான். இப்படிப் பல தடவை செய்திருக்கிறான். ஆனால் இந்தத் தடவை எனது கொண்டை அவனது கைக்குப் போய்விட்டது. இன்றுவரை நாம் நண்பர்களாக இருப்பதற்குக் காரணம் எனது அவமானத்தை அவன் அதிகப்படுத்தவில்லை. உடனே எனது கூந்தலை என்னிடம் ஒப்படைத்துவிட்டு தனது தவறுக்கு மன்னிப்புக் கோரினான். அந்த மிகவும் அவலமான கணத்தை இன்னும் மோசமாக்காமல் உடனே அந்த இடத்தை விட்டகன்றான். இன்றைக்கு அதற்கு அதிக முக்கியத்துவம் எதுவும் கிடையாது. ஆயினும் எனது உயர் நிலைப் பள்ளி நாட்கள் Grease எனும் திரைப்படத்தை அல்லது Happy Days தொலைக்காட்சித் தொடரை ஞாபகப்படுத்தின. நான் அன்றைய இசைகளின் கனவுலக நாயகனான ஃபேபியன் (Fabian) உடைய உள்ளூர் ரசிகர் மன்றத்தின் தலைவியானேன். அந்த மன்றம் என்னையும் எனது இரு நண்பிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. ஒவ்வொரு ஞாயிறு இரவும் நாம் குடும்ப சகிதம் (The Ed Sullivan Show) 'தி எட் சலிவன் ஷோ' பார்ப்போம்; 1964 பெப்ரவரி 9ஆம் திகதி நீங்கலாக. அன்று அவர் பீட்டில்ஸை ஒளிபரப்பினார். அது ஒரு குழு அனுபவம். பீட்டில்ஸ் பாடகர்களில் எனது பிரியத்துக்குரியவர் போல் மெக்கார்ட்னி Paul Mecartney. அது என்னையும் எனது தோழி பெட்ஸியையும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட வைத்தது. அவளுடைய ஃபேவரிட் ஜோர்ஜ் ஹெரிஸன் 1965இல் சிக்காக்கோவின் மெக்கோர்மிக் பிளேஸில் ரோலிங் ஸ்டோன் இசைக் கச்சேரிக்கு டிக்கட் கிடைத்தது. I can't get no satisfaction "ஐ கான்ட் கெட் நோ செடிஸ்ஃபெக்ஷன்" பாடல் டீன் ஏஜ் - இளசுகளின் நாவில் நர்த்தனம் புரிந்தது. பல வருடங்களுக்குப் பிறகு எனது இளமைப் பருவத்தின் கதாநாயகர்களான போல் மெக் கார்ட்னி, ஜோர்ஜ் ஹெரிஸன், மின்ஜெக்கர் ஆகியோரைச் சந்தித்த போது அவர்களது கையைக் குலுக்குவதா? அல்லது மேலும் கீழும் குதித்துக் கூச்சலிடுவதா? என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை.

இசை, தொலைக்காட்சி ஆகியவற்றுள் வரையறுக்கப்பட்ட "இளமைக் கலாசாரம்" வளர்ந்து கொண்டு வந்தபோதுங்கூட எமது பாடசாலையில் சில விஷேடசமான குழுக்கள் இருந்தன. அவை ஒருவருடைய சமூக அந்தஸ்தை தீர்மானித்தன: விளையாட்டு வீரர்கள் - உற்சாகமூட்டும் தலைவர்கள், மாணவர் மன்றத் தலைவர்கள், மூளைசாலிகள் என. அங்கே மணட வழிகள் இருந்தன. அவற்றில் நடப்பதற்கு நான் துணிந்ததில்லை. ஏனென்றால் கடைப்பயல்கள் மக்களை எதிர்ப்பார்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டது. கென்டீனில் இருக்கும் ஆசனங்களின் கண்ணுக்குத் தெரியாத விடுதி மாணவர்களால் ஆளப்பட்டன. அதை நாம் அங்கீகரித்திருந்தோம். எனது ஆரம்ப ஆண்டுகளில் குழுக்களுக்கிடையிலான முறுகல் நிலை டென்ஷன் பாடசாலை முடிந்த பின் பார்க் பண்ணும் இடங்களிலும், உதைப்பந்து, கூடைப்பந்து விளையாட்டின் போதும் மோதலாக வெடித்தது.

பாடசாலை நிர்வாகம் இதை இடைநிறுத்துவதற்கு உடனே செயலில் இறங்கியது. "கலாசாரப் பெறுமதி அல்லது விழுமியக் குழு" என்ற ஒரு குழுவை உருவாக்கியது. அதில் பல்வேறு குழுக்களையும் சார்ந்த மாணவர்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர். எமது அதிபர் கலாநிதி க்ளைட் வொட்ஸன் (Clyde Watson) என்னையும் ஒரு பிரதிநிதியாக இருக்கும் படி வேண்டிக்கொண்டார். இதுகாலவரையும் எனக்குத் தெரியாத, முன்னர் நான் சந்திக்க விரும்பாத மாணவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அது அளித்தது. மாணவர் மத்தியில் சகிப்புத் தன்மையை வளர்க்கவும், முறுகல், நிலையைக் குறைக்கவும் எமது குழு விசேட சிபாரிசுகளை விதந்துரைத்தது. எமது குழு என்ன செய்தது? என்பது பற்றிக் கலந்துரையாட உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனமொன்று எம்மில் பலரை அழைத்தது. இது இருவிதங்களில் எனக்கு முதல் அனுபவமாக இருந்தது.



ஏற்றுக்கொள்வோம். அது அனேகமாக கம்யூனிஸ்டுகள், குறுக்கு வியாபாரிகள், அயோக்கிய அரசியல்வாதிகள் பற்றியதாகும். இம் மூன்று வகையினரும் வாழ்க்கையின் மிகவும் இழிந்தவர்களாகவே அவரது கண்களுக்குப் பட்டன. எமது சமயலறை மேசையைச் சுற்றி அரசியல் பற்றிய விறுவிறுப்பான ஏன் சூடான விவாதங்கள் நடக்கும். அதிலிருந்து ஒரு விடயத்தை நான் புரிந்துகொண்டேன். ஒரே கூரையின் கீழே ஒரு விடயம் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட அபிப்பிராயங்கள் எழமுடியும் என்பதே. எனக்கு பன்னிரெண்டு வயதாகும்போது பல விடயங்கள் குறித்து எனது சொந்த நிலைப்பாட்டை உடையவளாக நான் இருந்தேன். (இன்னும் வரும்...)

---


இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.

ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்தவைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.


## ரஷ்யா - ஜப்பான் போர்





ஜப்பானுக்கெதிரான ரஷ்யாவின் யுத்தத்தில் தன்னம்பிக்கை இழந்த நிலையிலும் ரஷ்யா ஜப்பானுக்கெதிரான போரை தொடர்ந்தது; 1905 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தப் போர் நடைபெற்றது. ரஷ்யா இந்தப் போரில் இரு வகையில் படுதோல்வியைத் தழுவியது. "முக்டான் யுத்தம்" என்ற பேரில் நடைபெற்ற யுத்தத்தில் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் (750,000) பேர் பங்கு கொண்டார்கள். அத்துடன் பலமான ஆயுதங்களும் அவர்களிடம் இருந்தன. ஆனால் இதில் ரஷ்யா தோல்வியுற்று எழுபதாயிரம் (70,000) ரஷ்யர்களும் கொல்லப்பட்டார்கள். அடுத்த தோல்வியை ரஷ்யா ஜப்பானிலுள்ள தூஷிமா தீவின் பக்கத்துக் கடலில் சந்தித்தது. அதாவது "Baltic" பால்டிக் என்ற பெரியதொரு யுத்தக் கப்பலை ரஷ்யா இழந்தது. (அந்தக் கப்பல் பக்கத்திலுள்ள படத்தில் காணப்படுகின்றது.) இவ்வாறு ஜப்பானுடனான போரில் இந்தவகையான இரு பேரழிவுகளை ரஷ்யா சந்தித்தது.

## இளவரசி மேரியின் விலை மதிக்க முடியாத வைரம்



டெக்கின் இளவரசி மேரி, பின்பொரு காலத்தில் மகாராணி மேரியாக இருந்தவர். அவரை திருமணம் செய்துகொள்வதற்கு கிளாரன்ஸ் சீமானுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதன் முன்பு 1892ல் அவர் இறந்துவிட்டார். உடனே ஒரு வருடத்தின் பின்பு அவருடைய இளைய சகோதரன் 5ஆம் ஜோர்ஜை இளவரசி மேரி மணந்து கொண்டார். இங்கு நாம் பார்ப்பது இளவரசி மேரி அணிந்திருக்கும் குளுனியன் என்று பேர்போன வைரக் கல். அது மிகப் பெரியதாக இருந்து 1905ஆம் ஆண்டு ஜனவரி மாதம் "தான்ஸ்வலில்" கண்டெடுக்கப்பட்டது. அது ஏழாம் எட்வார்ட்டுக்கு 1907ஆம் ஆண்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அத்துடன் அது பெரிய பெரிய கற்களாக பிரித்து வெட்டப்பட்டது. தற்போது அது அரச சின்னமாக (மாளிகையில்) பாதுகாக்கப்பட்டு வருகிறது.

# ஊடகவியலாளர் நடேசன்;
## ஓர் நேர் வெட்டுமுகம்

யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து மட்டக்களப்பில் திருமணம் புரிந்து, மட்டக்களப்பிலேயே வாழ்ந்து வந்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மூன்றாம் தரப்பே இப் படுகொலைக்குப் பின்னால் இருப்பதாகவும் ஆயுதப் படையினரே இப் படுகொலையைப் புரிந்துள்ளனரென்றும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால் கருணா தரப்பினரே இப் படுகொலையைப் புரிந்தனரென்று பரவலாக நம்பப்படுகிறது. நடேசனைச் சுட்டுக் கொன்றவர் கருணா அணியைச் சேர்ந்த பிள்ளையான் என்பவரென்று வன்னிப் புலிகளுக்குச் சார்பான தமிழ் இணையத்தளம் தெரிவித்துள்ளது. நடேசன் கொலையுண்ட பின்னர், அவரை வன்னிப் புலிப் பத்திரிகையாளரென்று கருணா அணியினரின் இணையத்தளமான ‘நெருப்பு’ வர்ணித்துள்ளது. ஆக, வன்னிப் புலிகளுக்கும் மட்டக்களப்பு – அம்பாறைப் புலிகளுக்குமிடையிலான பலியெடுப்புகளின் ஓர் அங்கமாகவே நடேசன் கொல்லப்பட்டுள்ளாரென்பது வெளிப்படையானது. வன்னிப் புலிகளின் கட்டுப்பாட்டில் இப்போதிருக்கும் கொக்கட்டிச்சோலைக்குச் சென்று வன்னிப் புலிகளின் கிழக்குப் பகுதி அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனை நடேசன் சந்தித்துப் பேசினாரென்றும் அப்போது கௌசல்யனின் வேண்டுகோளின் பேரில், கருணா அணிக்கெதிரான பிரசாரத்தை முன்னெடுக்க உதவுவதற்கு நடேசன் இணங்கினாரென்றும் ‘நெருப்பு’ தெரிவித்துள்ளது.

இன்று நடேசனுக்கு நாட்டுப் பற்றாளன் என்று பட்டம் வழங்கிக் கௌரவப்படுத்தும் அதே புலிகள், 1980களின் பிற்கூறுகளிலும் 1990இன் ஆரம்ப வருடங்களிலும் நடேசனைத் துரோகியாக வர்ணித்துச் சுட்டுக் கொல்வதற்குத் தேடித் திரிந்தவர்களென்பது குறிப்பிடத் தக்கது. வடக்கு – கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளோடு யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக் கல்வி கற்ற நடேசன், பின்னர் நெல்லியடி தனியார் டியூட்டரியொன்றில் கற்பித்தபோது வரதராஜப்பெருமாளும் அங்கு பாட போதனை நடத்தினார். இக் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்ட இவர்,முன்னாள் வடக்கு – கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் ஊடகத்துறை அதிகாரியாகப் பணி புரிந்துள்ளார். அப்போது புலிகளுக்கு எதிராகக் கடும்போக்கைக் கடைப்பிடித்த நடேசன், வரதராஜப்பெருமாளும் ஈ.பி.ஆர்.எல்.எப். முக்கியஸ்தர்களும் திருகோணமலையில் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தி விட்டு இந்தியாவுக்குக் கப்பலேறிய பின்னர் அநாதரவானார். துரோகிகளென்ற குற்றச்சாட்டின் பேரில் அப்போது புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஐயாயிரம் தமிழ் இளைஞர், யுவதிகளில் நடேசனும் ஒருவராவார். நடேசன் நிலத்துக்கு அடியிலான புலிகளின் இருண்ட சிறைக் கூடத்துக்குள் அடைக்கப்பட்டுப் பெரும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். அப்போது வீரகேசரியின் மட்டக்களப்பு நிருபராகக் கடமையாற்றியவர் எஸ்.நித்தியானந்தன் என்பவர். இவர் பயிற்சி பெற்ற புலி இயக்க உறுப்பினராவார். பின்னாட்களில் ஆயுதப் படையினரோடு நடைபெற்ற மோதலில் பலியானார். இந்த நித்தி அப்போது மட்டக்களப்பில் புலிகளின் முக்கியஸ்தர்களாக இருந்த டேவிட் என்பவரோடும் கருணா அம்மானோடும் நேரடியாகப் பேசி “நடேசனுக்கு மண்டையில் போட வேண்டாம்” என்று கேட்டுக்கொண்டார். இதனால் அன்று புலிகளின் மரணப்பிடியிலிருந்து உயிர் தப்பிய நடேசனை அவரது சகோதரரான ஆலை உரிமையாளர் சிவநாதன் என்பவர்

> *கசாப்புக் கடைக்காரர்களுக்குக் காந்தியக் குல்லாய் அணிவித்தவர் நடேசன். சந்தர்ப்ப சூழ்நிலைகளின் சிறைக் கைதியாகி, விரும்பியோ, விரும்பாமலோ அவர் அப்படி எழுத நிர்ப்பந்திப்பட்டார்*

இலட்சக்கணக்கான ரூபாவைப் பேரம் பேசி விடுவித்தார். நடேசன் விடுவிக்கப்பட்டபோது புலிகளுக்குச் சார்பாக எழுத வேண்டும் என்ற நிபந்தனையோடு விடுவிக்கப்பட்டார்.

1991இல் நித்தியானந்தனின் மறைவையடுத்து நடேசன் வீரகேசரியின் மட்டக்களப்பு நிருபராக இணைந்துகொண்டார். பின்னர் பிராந்திய நிருபராகவும் இவர் உயர்ந்தார். வீரகேசரியில் ‘தேனாடான்’ என்ற புனைபெயரிலும் ஜி.நடேசன் என்று தனது மனைவியின் பெயரிலும் ஒரு பத்தி எழுத்தாளராக வலம் வந்த இவர், புலிகளின் அராஜகங்களையோ அடாவடித்தனங்களையோ கண்டிக்க முடியாதவராகவே இருந்து வந்துள்ளார்.

கருணா அம்மானோடு நெருங்கிச் செயற்பட்ட இவர், புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவின்போது வன்னிப் புலிகளின் பக்கம் இவர் சார்ந்திருந்தபோதும் மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் தனது கருத்துக்களை



வெளியிட்டு வந்தார். மார்ச் மாத ஆரம்பத்திலிருந்து ஏப்ரல் நடுப் பகுதி வரை இவர் வீரகேசரியில் எழுதி வந்த கட்டுரைகள், ஐ.பி.சி.வானொலிக்கு அளித்த விடயதானங்களை மீளப் பார்த்தால் இதனை விளங்கிக் கொள்ள முடியும். தமிழ்த் தேசம், தேசியம், புலிகளின் ஐக்கியம் பற்றியே எழுதி வந்த இவர், மதில் மேல் பூனைகளாகத் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இருக்கின்றனர் என்று தமது ஆதங்கத்தை வெளியிட்டபோதிலும், இவரும் அதே நிலைப்பாட்டிலேயே இருந்தாரென்பது குறிப்பிடத் தக்கது. ஏப்ரல் 12ஆம் திகதி மட்டு. – அம்பாறையிலுள்ள கருணா அணியின் தளப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கருணாவை அப்புறப்படுத்திய பின்னரே நடேசனின் பேனா ஆக்ரோஷமாகக் குமுறத் தொடங்கியது. கருணா ஒரு தனிநபரென்றும், பிரதேசவாதத்தைக் கிளப்புகிறாரென்றும், ஊழல் மற்றும் பெண் விவகாரங்களில் சம்பந்தப்பட்டவரென்றும் தமிழ்ச்செல்வன் கூறியதை அப்படியே கிளிப்பிள்ளை போல் ஒப்புவித்தார். தப்பித் தவறிக் கருணா அணியின் கை ஓங்கியிருந்தால் நடேசன் ஒன்றில் கருணாவுக்குச் சார்பாக எழுதியிருப்பார். அல்லது ஊடகத்துறையிலிருந்து ஒதுங்கியிருப்பார். இதுவே யதார்த்தம். இது நடேசன் மீது மட்டுமல்ல, வடக்கு – கிழக்கிலும், வடக்கு – கிழக்குக்கு வெளியேயும் வாழும் அனைத்துத் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் சுமத்தப்பட்டிருக்கும் சாபக்கேடு.

துப்பாக்கிக் குண்டுகளால் ஊடகத்துறையை மௌனிக்கச் செய்ய முடியாது என்று கூக்குரலிடும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு, தமிழ் ஊடகத்துறை எப்போதோ சேடம் இழுத்து மௌனித்து விட்டது என்பதைச் சொல்லத் தேவையில்லை. புலிகள் அராஜகங்களே புரியாத சுத்தமான சூசையப்பர்கள் என்றா இந்தத் தமிழ்ப் பத்திரிகைகள் நினைத்துக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் அரியாலை நிருபராகப் பணியாற்றிய ஐ.சண்முகலிங்கம், இறுதிவரை தான் வரித்துக்கொண்ட கொள்கைக்காகவே பேசியும் எழுதியும் வந்த சுபத்திரன் றொபேட், மட்டக்களப்பில் பத்திரிகையாளன் செழியன் பேரின்பநாயகம் ஆகியோர் உட்பட மாற்றுக் கருத்துக்கள் கொண்ட பல ஊடகவியலாளர்களைப் புலிகளின் வேட்டுக்கள்தான் மௌனிக்க வைத்தன என்பதை இந்தப் பத்திரிகைகளால் எழுத முடியுமா? ஒரேயொரு வசனம் தன்னும் உங்களால் எழுத முடியுமா? எழுதினால் உங்கள் பத்திரிகைகள் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தீயிட்டுக் கொளுத்தப்படும். பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கப்படும். எனவே, தமிழ்ப் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் துப்பாக்கிகளுக்குப் பயந்து வாய் மூடி மௌனிகளாகவே உள்ளனர். தமிழ் மக்களைப் போல் கொடுமுடிகளுக்குப் பயந்து ஏன் வீண் பிரச்சினை என்று அவர்களும் ஒதுங்கிக்கொள்கிறார்கள். இலங்கையில் எட்டுத் தமிழ்த் தினசரிகள் வெளிவருகின்றன. எந்தவொரு பத்திரிகையாவது புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பற்றிக் காய்தல், உவத்தலின்றி விமர்சிக்க முடியுமா?

ஊடகவியலாளர் என்பவன் தன் கருத்துக்களால் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடியவன். மக்களைச் சரியாகவும் பிழையாகவும் வழி நடத்தக் கூடிய சக்தி அவனிடம் உண்டு. எனவேதான் ஊடகவியலாளர்கள் கொல்லப்படும்போது குய்யோ முறையோ எனக் கூக்குரல்கள் எழுப்பப்படுகின்றன. கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. நடேசனின் கருத்துக்களுக்காக அவர் கொல்லப்பட்டிருந்தார் என்றால் அது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. நடேசன் முன்னர் புலிகளின் பிரசாரகராகவும் பின்னர் வன்னிப் புலிகளின் பிரசாரகராகவும் திகழ்ந்ததற்குக் காரணம், அவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் சிறைக் கைதியாகத் திகழ்ந்தார் என்பதே. நடேசனின் பேனாவுக்கு உத்தரவு போட்டு, திசை காட்டிய புலிகள் இப்போது அவரது மரணத்தையும் முதலீடாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். கொழும்பில் பாராளுமன்றம், ஜனாதிபதி மாளிகைக்கு முன்னாலும் அமெரிக்காவில் ஐ.நா.சபைக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கும் புலிகளுக்கு யாழ்ப்பாணத்தில் எல்லாளன் படையினரால் குத்திக் குதறிக் கொல்லப்பட்ட யாழ்.ஐந்து சந்தியைச் சேர்ந்த ரதன், நவிண்டில் இரும்பு மதவடியைச் சேர்ந்த விக்டர் ஆகியோரின் விதவை மனைவியரும், பிள்ளைகளும் அழும் குரல் கேட்காது. ஈஸ்வரன்தான் கடத்திச் சென்றாரென்று மரண விசாரணையில் சாட்சியம் தெரிவிக்கப்பட்டபோதும் பொலிஸூம், நீதித்துறையும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், ஏன் பத்திரிகைகளும் கூட கண் மூடி நித்திரை கொள்கின்றன. துப்பாக்கிகள் பத்திரிகைத்துறையை மட்டுமல்ல, நீதித்துறையையும் நித்திரை கொள்ளச் செய்துவிட்டன. வாழ்க தமிழ் ஊடகப் பயங்கரவாதம்.

**-நேதாஜி-**

---

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

## கூட்டு அறிக்கை

“அமைதியாக் இருங்கள். வீண் வதந்திகளைப் பரப்புவோரின் புரளித்த னங்களுக்கு எடுபடாமல் அமைதியைக் காப்பாற்றுங்கள்” இதுதான் பிரதமர் பிரேமதாஸாவும், எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கமும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையின் தொனிப்பொருளாக இருந்தது. பொதுமக்களை நோக்கி விடுக்கப்பட்ட இவ்வேண்டுகோளில் மேலும் குறிப்பிடுகையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூக, மதப் பிரமுகர்கள் அனைவரும் சட்டம் ஒழுங்கைப் பேணவும், மக்களுக்கு இடையில் நல்லெண்ணம் நிலவுவதற்கும் பாடுபட வேண்டும் எனவும், தத்தம் செல்வாக்கை விஷமிகளின் தீய செயல்களுக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தது. அத்துடன் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள் மற்றும் உடைமைகள் என்பன பாதுகாக்கப் படவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டி ருந்தது.

சமூக விரோதிகள் மற்றும் இனவாதிகளிடமிருந்து எழக்கூடிய அபாயங்களைச் சமாளித்து பொதுமக் களைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் இருவரும் கூட்டாக ஏற்றுக்கொள்ளு கின்றோம்.

எமது மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் அமைதியான முறையில் இணக்கப் பாட்டுடன் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை வலியுறுத்துவதோடு எந்த வகையான வன்முறைகளுக்கும் எவரும் இடமளிக்கக் கூடாது எனவும், வன்செயல்களுக்கு அரசியல் ரீதியான எதிர்ப்பு எனப் போர்வை போர்த்தக் கூடாது எனவும் குறிப்பிட்டு வேண்டுகோள் விடப்பட்டிருந்தது.

மேலும், நாங்கள் நாகரிகமான சமூகத்தைச் சேர்ந்த மக்கள் என்ற வகையில் எமது பிரச்சினைகளை அமைதியாகப் பேசித் தீர்க்கும் ஆற்றலைப் பெற்றுள்ளோம். எமது பாரம்பரிய முழுமை மிக்க மதங்களின்

## 64 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

வழிகாட்டுதலோடு எமது பிரச்சினை களைப் பேசித் தீர்க்க முடியும் என்பதை உலக அரங்குக்கு எடுத்துரைப்போம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

இந்த அறிக்கையுடன் நில்லாமல் அமிர்தலிங்கம் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உடனடி யாகவே ஒரு தகவல் அனுப்பினார். “வடக்கிலும், கிழக்கிலும் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்” என்பதே அந்தச் செய்தியாக இருந்தது. மேலும், கட்சிக் கிளைகள் ஒவ்வொன்றும் சிங்கள மக்கள் தத்தம் தொழில்களைப் பாதுகாப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வன்முறைக் கும்பல்கள் எதுவும் சிங்கள மக்களைத் தாக்க அனுமதிக்கக் கூடாது எனவும் அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

இனக் கலவரம் மீண்டும் வெடிக்கலா மென்ற பதற்றமான சூழல் அரசாங்கத் தையும், கூட்டணியையும் மீண்டும் நெருங்கிச் செயற்பட வைத்தது. பாராளு மன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்படுவது தொடர்பாக 19 ஜூலை 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒரு கடிதம் எழுதினார். அத்துடன் தமிழ் மக்களின் அபிலாசைகளை இனங்காண ஜனாதிபதி ஆணைக்குழு அமைப்பது தொடர்பான கருத்துக்களையும் அவர் அதில் கேட்டிருந்தார். சுதந்திரக் கட்சி ஜே.ஆரின் கடிதத்தைப் புறக்கணித்தது. கூட்டணி, ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பான தனது விருப்பத்தைப் பிரதிபலித்தது.

கூட்டணி இவ்வாறு நல்லெண்ணம் தெரிவித்தமைக்கு நன்றியாக அநுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் மீண்டும் வவுனியாவுடன் இணைக்க ஜே.ஆர்.ஜயவர்த்தனா நடவடிக்கை எடுத்தார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் படையினரால் கொல்லப் பட்டமை குறித்து விசாரிக்க அமைச்சர் லலித் அத்துலத் முதலி தலைமையில் ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் நியமித்தார். இவற்றையடுத்து கூட்டணி யினர் தமது பாராளுமன்ற பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அமைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை வரையும் பொருட்டு ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. ஓய்வு பெற்ற நீதியரசர் விக்டர் தென்னக்

> *பிற்காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரத் தன்மையைத் தமிழ் மக்கள் அநுபவித்தனர். இது இன்றுவரைகூடத் தொடர்கிறது. ஆனால், தமது மௌனத்தின் மூலமாகச் சம்மதம் தெரிவித்த கூட்டணித் தலைவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நிறைவேற்றம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றுக்குத் தாங்கள் வழங்கிய ஒத்துழைப்புக் குறித்துச் சுய விமர்சனம் செய்துகொள்ள இன்றுவரை முற்பட்டதில்லை.*

கோன் தலைமையிலான ஆணைக் குழுவின் உறுப்பினர்களாக கலாநிதி ஏ.ஜே.வில்சன், கலாநிதி ஜே.ஏ.ஐ.கூரே, கலாநிதி நீலன் திருச்செல்வம் மற்றும் ஏ.சி.எம். அமீர் ஆகியோர் நியமனம் பெற்றனர்.

1979 ஜூலை 29ஆம் திகதியன்று பயங்கரவாதத் தடைச் சட்டம் பாராளு மன்றத்தில் நிறைவேறியது. இந்தச் சட்டத் திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறிக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்வைப் புறக்கணித்தனர். ஆனால், சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகள் மூலமும், எதிர்த்து வாக்களித்ததன் மூலமும் தமது எதிர்ப்பை வெளிப் படுத்தினர். பிற்காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரத் தன்மையைத் தமிழ் மக்கள் அநுபவித்தனர். இது இன்றுவரை கூடத் தொடர்கிறது. ஆனால், தமது மௌனத்தின் மூலமாகச் சம்மதம் தெரிவித்த கூட்டணித் தலைவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நிறைவேற்றம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றுக்குத் தாங்கள் வழங்கிய ஒத்துழைப்புக் குறித்துச் சுய விமர்சனம் செய்துகொள்ள இன்றுவரை முற்பட்டதில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் நிறைவேறியதையடுத்து அவசரகால நிலை நீடிப்பை அரசாங்கம் கைவிட்டது. இது கூட்டணித் தலைவர்களுக்கு மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது. தமிழ் இளைஞர்கள் இது குறித்துப் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். அது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஒரு பூகம்பமாகவே வெடித்தது. தமிழ் இளைஞர் பேரவை, கூட்டணியின் தலைமைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற் றியது. தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட “சுதந்திரன்” பத்திரிகை கூட கூட்டணியின் போக்கிற்கு எதிராக எழுத ஆரம்பித்தது.

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 60

இவன் தனது மூன்றாம் வருடப் பரீட்சைக்குத் தயார்படுத்திக்கொண்டு இருக்கும்போது அந்த மாறுதல் நிகழ்ந்தது. மற்றவர்களுடன் அளவுக்கு அதிகமாகக் கதைக்க ஆரம்பித்தான். அடிக்கடி அவன் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பதையும் நண்பர்கள் அவதானித்தனர். அவனது நெருங்கிய நண்பன் ஒருவனிடம் ஒருநாள் பெரிய காகிதக் கட்டு ஒன்றைக் கொடுத்து வாசிக்குமாறு கூறினான். அதை வாசித்த நண்பனுக்கோ திகைப்பாக இருந்தது. அது ஒன்றுக்குமே தொடர்பற்ற வகையில் எழுதப்பட்டிருந்தது. அதில் இருந்த வரைவுகளும் கூட விளங்கிக்கொள்ள முடியாதிருந்தன. தன்னால் அதை விளங்கிக்கொள்ள முடியவில்லை என்று கூறியபொழுது, அதற்கு இந்திரன், 'தான் நேரம் தொடர்பான புதிய கண்டுபிடிப்பின் அடிப்படையில் அமைக்கப்போகும் இயந்திரத்தின் மூலம் பழைய காலங்களுக்கும், எதிர்காலத்துக்கும் செல்ல முடியும்' எனக் கூறினான். இந்திரன் அதற்குப் பின்னர் அந்த இயந்திரம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடலானான். இதற்காக, தனது வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை எடுத்தது மாத்திரமல்ல,

## உள மருத்துவம்

நண்பர்களிடமும் கடன் வாங்கியிருந்தான். வழக்கமாக விரிவுரைகளுக்குச் செல்லும் இவன், பெரும்பாலான நாட்கள் இவ்வியந்திரத்தை உருவாக்கும் முயற்சியில் இருந்ததால், அவனால் போக முடியவில்லை. அளவுக்கதிகமாக எரிச்சல் ஏற்படுவதையும் நண்பர்கள் அவதானித்தனர். மேலும் மற்றவர்களுக்குச் சங்கடம் ஏற்படும் வகையில் அவனது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. குறிப்பாக, சக மாணவிகளிடம் அவர்கள் வெட்கப்படும் விதத்தில் சில கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான். வழக்கத்துக்கு மாறாக, மாணவிகளிடம் அதிகமாகக் கதைக்கவும் கேலி செய்யவும் ஆரம்பித்தது, அவனது சக மாணவர்களுக்குத் திகைப்பாக இருந்தது. பல நாட்களுக்குப் பின்னர் விரிவுரை ஒன்றுக்குச் சமூகம் அளித்திருந்தான். சக மாணவர்களின் கவனம் அவன்பால் ஈர்க்கப்பட்டதற்குக் காரணம், நீண்ட காலத்திற்குப் பின் அவன் வந்தது மட்டுமல்ல, அதற்கு மேலாக அவனது தோற்றத்தில் ஏற்பட்டிருந்த மாற்றமும் பகட்டுத்தன்மையும் என்றால் மிகையாகாது. விரிவுரையும் தொடங்கியது. சிறிது நேரம் சென்றிருக்கும். இந்திரன் எழுந்து விரிவுரையாளர் கூறுவது பிழை எனவும், அவர் தன் அறிவை விருத்தி செய்யத் தவறிவிட்டார் எனவும் குற்றம் சாட்டினான். மேலும், தனது கண்டுபிடிப்பைப் பற்றியும் கூற விழைந்தான். அன்றைய காலநேரம் இப்படியாக அவனது குறுக்கீட்டால் குழப்பப்பட்டது. இந்த நிலையிலேயே அவன் உளமருத்துவத்திற்கு அனுப்பப்பட்டான்.

அவனுடன் உரையாடியபொழுது மிகவும் கோபமாகவும் எரிச்சலடைந்தவனாகவும் காணப்பட்டான். தனது தகைமை கண்டு பொறுக்க முடியாதவர்கள் தனக்கு மனநோய் என்று முத்திரை குத்தி இங்கே அனுப்பி வைத்ததாகக் கூறினான். தான் கண்டுபிடித்த இயந்திரம் மூலமாகவும், தனது புதிய கொள்கை (கண்டுபிடிப்பு) மூலமாகவும், இந் நாட்டில் மாத்திரமல்ல முழு உலகிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் எனக் கூறினான். இதனை வெளிப்படுத்த உதவி செய்தால் தனக்கு நோபல் பரிசு கிடைக்கும் சந்தர்ப்பம் இருப்பதாகத் திடமாக நம்பினான். அவனது எதிர்காலம் பற்றி வினவியபோது, தனது சக மாணவியர்கள் பலர் அவனை வாழ்க்கைத் துணையாக்க வேண்டி அவன் பின் சுற்றுவதாகவும், தான் இன்னும் முடிவுக்கு வரவில்லை எனவும் கூறினான்.

(தொடரும்)

உடல் நோய்களால்
பாதிக்கப்பட்டவர்களை
விட உள நோயினால்
பாதிக்கப்பட்டவர்களே
அதிகமாக காணப்படும்
இன்றைய காலகட்டத்தில்,
உள நலம், உளப்
பாதிப்புகள், உள
நோய்கள்
பற்றி அறிந்துகொள்வதும்
இவற்றுக்கான வைத்திய
முறைகளை
அறிமுகப்படுத்துவதும்
அவசியமாகிறது.
எனவே மேற்படி உள
மருத்துவத்துறையில்
அநுபவம் பெற்றவர்களும்
நிபுணர்களுமான வைத்திய
கலாநிதி திரு. த.
கடம்பநாதன்
(எம்.பி.பி.எஸ். எம்.டி
உள மருத்துவம்)
அவர்களும் உளவியலாளர்
திரு. தி. சுவீந்திரன்
பி.ஏ (உளவியல்) எம்.பில்.
உள மருத்துவம்)
அவர்களும் இணைந்து
தமது அநுபவங்களை
பகிர்வர் என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரியப்படுத்திக்
கொள்கின்றோம்.

# காதல்... காதல்...

*சென்ற வாரத் தொடர்ச்சி...*

இல்லறம் என்பதும் அது போன்றதுதான். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மனதாரப் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் தன்னில் அடுத்தவரையும் அடுத்தவருக்குள் தன்னையும் பார்க்கிற அளவுக்குப் பக்குவம் ஏற்பட்டுவிடும். இதன் ஆரம்பக் கட்டம்தான் உடல் ரீதியாகக் கணவனையும் மனைவியையும் ஒன்று என்று உணர வைக்கும் தாம்பத்திய உறவு.

இந்தக் கோட்பாட்டை இந்தக் காலத்தில் இளைய தலைமுறையினர் சரியானபடி புரிந்துகொள்ளவில்லை. அதனால்தான் பிரச்சினையே. திருமணம் மூலமாகத் தனக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்று கணக்குப் போடுகிறார்கள். உடல் ரீதியான சந்தோசம்தான் திருமணத்தின் கிளைமாக்ஸ் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இது போன்ற எண்ணத்துடனும், எதிர்பார்ப்புக்களுடனும் திருமணம் என்ற வட்டத்துக்குள் நுழைகிறார்கள். மனங்களின் ஒருமைப்பாட்டுக்கு முக்கிய இடம் தர வேண்டிய திருமணத்தில் இலாபக் கணக்கை எதிர்பார்க்கிறபோது, ஏமாற்றம் ஏற்படுகிறது. உடல் ரீதியான சந்தோசத்தை அநுபவித்த பிறகு, ஒரு சலிப்பு ஏற்படுகிறது.

இந்த ஏமாற்றமும் சலிப்பும் நாம் எதை எதிர்பார்த்தோமோ அதை இந்தத் திருமணம் நமக்குக் கொடுக்கவில்லையே என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன; இந்த உறவினைத் தொடருவதால் இனி நமக்கு ஒரு பயனுமில்லை! என்று நினைக்கச் செய்கின்றன. இந்த உறவிலிருந்து தன்னை எப்படி விடுவித்துக்கொள்வது என்கிற கேள்வியைத் தனக்குள்ளே எழுப்பிக்கொண்டு, அதற்கு விவாகரத்துதான் தீர்வு என்று விடை கற்பித்துக்கொள்கிறார்கள். திருமணம் முறிகிறது.

திருமணம் இரத்தாகி, சட்ட ரீதியாக வெளியில் வந்தவுடன் அதற்குக் காரணம். தான் அல்ல. தனது பார்ட்னர்தான் என்று சமாதானம் செய்துகொண்டு, அடுத்து ஒரு திருமணம் செய்துகொள்கிறார்கள்.

அங்கேயும் இலாபக் கணக்குதானே பிரதானம்! மறுபடி ஏமாற்றம், விடுபட வழிதேடல், மீண்டும் விவாகரத்து.

திருமணம் என்பதனுடைய அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல், ஆண்களையோ, பெண்களையோ மாற்றிக்கொண்டிருந்தால் ஏமாற்றமே மிஞ்சும். இலாபத்தை மட்டுமே எதிர்பார்த்துத் திருமண உறவை ஏற்படுத்திக்கொள்பவர்களுக்கு என்றுமே நட்டம்தான் மிஞ்சும்.

மேல்நாடுகளில் மலிந்துபோய்விட்ட இந்த மனப்பான்மை, இங்கேயும் பரவி வருவது வேதனை தரும் நிஜம்.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

குறுக்கெழுத்துப் போட்டி இல.71க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

திருமதி.எம். சுந்தரேசன், 49, நர்சிங்ஹோம் வீதி, ஹட்டன்.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

| |
|---|
| த. நாகையா, 209, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை. |
| மலர்விழி ஜேசுதாசன், 91/1, மேபீல்ட் லேன், கொழும்பு-13. |
| எஸ். ஜெயச்சந்திராசா, இராசேந்திரம் குளம், வவுனியா. |
| ரீ. பரமேஸ்வரன், J/3,அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு-05. |
| லோ. ஸ்டெரின் ஆகாஸி, 366, சென்றல் வீதி, திருகோணமலை. |
| பாத்திமா சபீனா, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி. |
| நா. குகன், 22, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு. |
| ஏ. ஆர். எம். இறுசாத், 44/7, லியனகே வீதி, தெகிவளை. |
| பீ. செல்வராணி, மாவடி, வட்டுக்கோட்டை. |
| க.சஷீலா, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. |

## குறுக்கெழுத்துப் போட்டி 73

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | ■ | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | ■ | 14 | 15 | ■ |
| 16 | 17 | ■ | 18 | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 |

### இடமிருந்து வலம்

1) துரோணாச்சாரியார் இதில் ஆசிரியராகத் திகழ்ந்தார்.
9) வலிமை (குழம்பியுள்ளது)
14) எயிறு (திரும்பியுள்ளது)
16) தமிழ் நாட்டில் தஞ்சைக்கு அடுத்த செழிப்பான மாவட்டம்.
18) ஏற உதவும் (திரும்பியுள்ளது)
20) அனைவரும் ஆசைப்படுவது (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1) விக்டேரியா பூங்காவின் புதிய பெயர்
3) தேம்பித் தேம்பி அழுதல் (குழம்பியுள்ளது)
5) இது கட்டழகைக் குறிக்கும்.
15) தொண்டு என்று பொருள்படும்.
17) குளிர்ச்சி தருவது (தலைகீழாக உள்ளது).
19) கலப்பை.

### குறுக்கெழுத்துப் போட்டி 71 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ம | 2 ணி | 3 மே | 4 க | 5 லை |
| 6 க | ■ | ■ | 7 ண் | 8 ம |
| 9 ர | ■ | 10 ல் | ■ | 11 ரு |
| 12 ந் | ■ | 13 கு | 14 த | 15 மே |
| 16 த | 17 ரு | 18 க் | 19 கு | ■ |
| 20 ம் | 21 த | 22 க | 23 ர | 24 ம |

## போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 16.06.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-73**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஓரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

47

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................................
தொழில்:- ..............................
கையொப்பம்:- ..........................



✫ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
✫ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
✫ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-06-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? ஹொறம்பாவ வாசகிக்கு அதிர்ஷ்டம்! 45

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**நிஷா கலீல்.**
**குளியாப்பிட்டிய வீதி,**
**ஹொறம்பாவ.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# தேடி வந்ததே சொந்தம்

பாவம் சுதா. தொப்புள் கொடியில் வரை ஊட்டி வளர்த்த அவள் தாய், தொட்டில் பாசம் காட்டக் கொடுத்து வைக்கவில்லையே. சுதா பிறந்த மறு வினாடியே தன் உயிரை அவளுக்குக் கொடுத்துவிட்டு இறந்துவிட்டாள். அவள் பிறக்கும்போதே அழகாகப் பிறந்திருந்தும் 'தாயைக் கொன்ற பிள்ளை' என்ற பழியைச் சுமக்க வேண்டியதாயிற்று. உறவுகள் அணைக்க மறுத்ததால் சுதாவின் நலம் கருதி அவள் தந்தை கதிரவன் இரண்டாவது திருமணம் முடிக்கவே, சித்ரா சுதாவிற்குச் சித்தியானாள். கதிரவன் அலுவலக வேலைகளில் அதிக நாட்டம் செலுத்தியதால் தன் குழந்தைகளிடம் அன்பு காட்டும் நேரம் மிகக் குறைவாகவே இருந்தது. ஆரம்பத்தில் சுதா மீது அன்பைப் பொழிந்த சித்ரா, தனக்குப் பிள்ளைகள் பிறக்கத் தொடங்கியதும் சுதாவை மாற்றான் பிள்ளையாகவே நோக்கினாள். சுதாவோ சித்தியின் பிள்ளைகளைத் தன் சகோதரர்களாகவே நோக்கினாள்.

காலம் யாருக்காகவும் காத்திருக்கவில்லை! இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. தந்தை கதிரவன் நோய்வாய்ப்பட்டார். சுதாவின் திறமை அறிந்து தந்தையின் வேலை அவளிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவசர அவசரமாகக் குளித்துவிட்டு வந்த சுதா தன் நிறத்திற்கு மெருகூட்டும் வண்ணத்தில் கருநீலவண்ண ஆடைகளை அணிந்துகொண்டு, தன் நீண்ட கூந்தலை ஒற்றையாகப் பின்னல் போட்டுக்கொண்டாள். தன் அழகைக் கண்ணாடியில் பார்த்துச் சரி செய்தவேளை, முன்னர் ஒருநாள் அவள் அழகைப் பார்த்து இரசித்த அந்த இளைஞனின் "கண்ணே! என்னைக் கொள்ளை கொள்ளும் உள் கார்குழலின் நடுவே ஒரு ரோஜா மலராதோ?" என்ற கவி அடிகள் அவள் நினைவிற்குள் வரவே, அவள் அந்த ஆனந்த நினைவில் மூழ்க;

"என்னடி... ராஜகுமாரின்னு நினைப்போ! கண்ணாடிக்கு முன்னால நின்று கொண்டு அப்படி என்ன கனவு வேண்டிக் கிடக்கு! எந்த ராஜகுமாரன்ர நினைப்பு! வேலைக்குப் போறியா... அல்லது வேற... எங்கேயும்...!" சித்தி வாய்க்கு வந்தபடி பேசவே,

"சித்தி மரியாதையாப் பேசுங்க" தன்னையும் மீறி அதட்டிவிட்டாள் சுதா.

"இங்கபாரு. இந்த வீட்டில காதல் கீதல் எண்டு ஏதாவது வரட்டும், அப்புறம் என்ன நடக்கும் என்று தெரியும்" கொண்டு வந்த சாப்பாட்டை வேண்டா வெறுப்பாக மேசையில் வைத்துவிட்டுச் சென்றாள் சித்தி. சாப்பாட்டைப் பார்க்கவே சுதாவிற்கு அருவருப்பாக இருந்தது.

'என் உணர்ச்சிகளைக் கட்டிப்போட இந்தச் சித்திக்கு என்ன உரிமை இருக்கு? எல்லாம் அந்த தினேஸின் சதிதான். பணக்காரக் குடும்பத்தில் பிறந்த தினேஷ் பணத்தைக் காட்டித்தானே சித்தியை வளைத்துக்கொண்டான். அவன் மோகப் பார்வை என் மீது விழ நான் இடங் கொடுக்கக் கூடாது' என்று எண்ணியவாறு வெறுப்புடனும் விரக்தியுடனும் தன் அறையைப் பூட்டிவிட்டு தந்தையின் படுக்கை அறைக்குச் சென்றாள்.

மரணப் படுக்கையாகக் கிடக்கும் தந்தையைப் பார்க்க அவளுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

"என்னப்பா உடம்பிறகு எப்பிடி இருக்கு? மாத்திரை எல்லாம் சாப்பிட்டீர்களா?" அன்புடன் விசாரித்தாள் சுதா. அரைத் தூக்கத்தில் இருந்த தந்தை முனகிக் கொண்டே,

"சுதா... என் உடம்புக்கு ஒண்ணுமில்லையம்மா. உன்ன நினைச்சாத் தான் ரொம்ப வேதனையாக இருக்கு. உன்ன சித்தி ரொம்ப திட்டுறாங்க. பாவம் நீ என்ன செய்வாய். தாய் இல்லாப் பொண்ணு" கதிரவன் தன் மகளைப் பரிந்து பார்த்து மெல்ல நிமிர்ந்தார்.

"இல்லப்பா... அதெல்லாம் ஒன்றுமில்ல... அவங்களுக்கு உரிமை இருக்கு. அது தான் கண்டிச்சாங்க" சித்தியின் மீது போலி பரிதாபம் காட்டினாள் சுதா.

"சரிம்மா... நீ யாரையாவது காதலிக்கிறியா?" தந்தை கதிரவன் திடீரெனக் கேட்கவே, அதைச் சற்றும் எதிர்பார்த்திராத சுதா, மறுவினாடியே

"இல்லப்பா தப்பாக யாரும் உங்களிடம் கதைத்திருப்பார்கள்" சுதா தப்பிக்க வழி தேடினாள்.

"இல்லம்மா... உன் வாழ்க்கை உன் விருப்பப்படிதான் நடக்க வேணும். அதுதான் இந்த அப்பாவின் ஆசை. இந்த உயிர் பிரிவதற்குள் உனக்கொரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தந்திடணும். இதுதான் என்ர கடைசி ஆசை"

தன் வாழ்வின் முடிவை எண்ணிப் பேசிக்கொண்டிருந்தார்.

"அப்பா நீங்க சும்மா மனசைப் போட்டுக் குழப்பாதீங்க. நல்லா ஓய்வு எடுத்துக்குங்கோ. எனக்கு வேலைக்கு நேரமாயிடுச்சு. நான் போயிற்று வாறேன்."

அலுவலக பைல்களுடன் தந்தையிடமிருந்து விடைபெற்று அலுவலகம் நோக்கி விறுவிறு எனச் சென்றாள்.

செல்லும் வழி முழுவதும் தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு போனவளுக்கு எந்த ஆண்மகனின் அழைப்பும் கேட்க நியாயமில்லை. "ஹலோ... மெடம்!" ஒரு ஆண்குரல் அவளின் சிந்தனையின் குறுக்கே வந்து நிற்க சுயநினைவுடன் கேள்விக்குறி கொண்டு கண்களை நிமிர்த்தினாள்.

"என்னைக் களவாடும் இந்தக் கண்கள் இன்று எதையோ இழந்து தவிப்பது போல் தோன்றுகிறதே."

அவளை இடைமறித்துக் காதல் வசனம் பேசத் தொடங்கினான்.

"ஹலோ மிஸ்டர்! பார்த்தா படிச்சவங்க மாதிரி இருக்கிறீங்க. இப்படி வீதிகளில் பெண்களுடன் சேட்டை செய்வது தப்பாகத் தெரியவில்லை?"

உள்ளுக்குள் அவள் மனம் அவனை ஏந்தியபோதும் அதனை வெளியே காட்டிக் கொள்ள விரும்பாதவளாய் நின்றாள் சுதா.

"பெண்களுடனா... இல்லையே! நான் என் வருங்கால மனைவியுடன்தானே பேசுகிறேன்" அவளைச் சீண்டிவிட்டு அவள் பதிலுக்காகக் காத்திருந்தான்.

அவள் வெட்கிப்போய் முகம் சிவந்து நிற்கவே,

"சற்று முன்னர் என்னைத் திட்டிய இந்த உதடுகளை மௌனப் பூட்டுப் போட்டு வைத்துவிட்டீர்களே?" குனிந்திருந்த அவளின் உச்சந் தலையை நோக்கி உற்சாக நகைப்புடன் பேசவே.

"இப்ப பாருங்க எனக்கு இதிலெல்லாம் இஷ்டமில்ல. உங்களை யாருன்னே எனக்கு



தெரியாது..." குனிந்த பார்வையை நிமிர்த்திப் பேசினாள்.

"ஆனால் எனக்கு உங்களைத் தெரியுமே சுதா" அவன் அவள் பெயரைக் கூறவே திகைத்து நின்றாள்.

"என்னங்க நீங்க! பேரைக் கூறியதற்கே இவ்வளவு அதிர்ச்சியா?"

"இல்ல... அதெல்லாம் ஒன்றுமில்ல."

மௌனக் குரலில் மென்மையாகப் பேசினாள்.

"அப்ப மேற்கொண்டு பேசலாமா?"

அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவன் தொடர்ந்தான்.

"உங்க அப்பா கதிரவன். அம்மாவை சிறுவயதிலே இழந்திட்டீங்க; சித்தியின் கண்டிப்பில் வாழ்கிறீங்க. சித்தி மூலமாக உங்களுக்கு மூன்று சகோதரர்கள். உங்க அப்பாவின் உடல்நிலை காரணமாக அவர் வேலையை நீங்க பார்க்கிறீங்க"

அவன் சொல்லச் சொல்ல வியப்பில் ஆழ்ந்தவளாய் நின்றாள்.

"இதற்கு மேலேயும் உங்களைப் பற்றித் தெரியும். ஆனாலும், அது வேண்டாத விடயம். என்னைப் பற்றித் தெரிந்துகொள்ள உங்க மனம் துடிக்கும். நீங்க வேலை பார்க்கும் அலுவலகத்திற்கு பக்கத்து வைத்தியசாலையில்தான் நான் டாக்டராகப் பணி புரிகிறேன். உங்களைப் போல சிறுவயதில் தாயை இழந்தவன்தான் நானும். தந்தையையும் ஒரு வருடத்திற்கு முன் இழந்துவிட்டேன். ஆனாலும் சுதா! இழந்த என் தாயை நான் மீண்டும் காண்கிறேன்" என்று கூறியவாறு அவள் முகத்தை ஊன்றிக் கவனித்தான். சுதா வியப்பில் தன்னை மறந்தே நின்றாள்.

"என் தாயாக – தாரமாக உங்களையே காண்கின்றேன்."

சில வினாடிகள் இருவருக்குமிடையில் மௌனம் குறுக்கே வந்து நின்றது.

"OK சுதா, என் உணர்வுகளை உங்களிடம் சொல்லிவிட்டேன். உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கின்றேன். அவசரமில்லை. நிதானமாகவே நீங்கள் உங்கள் முடிவைச் சொல்லலாம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. என் மனைவி நீங்க தான்"

அழுத்தமாக – கம்பீரமாகச் சொன்னான்.

இருவரது அலுவலகங்களும் நெருங்கவே.

"OK சுதா நான் வருகிறேன்."

"ஒரு நிமிடம" அவளையும் அறியாமல் அவள் மறிக்கவே "இந்த உயிரின் துடிப்பே உங்களுக்காகத்தானே சுதா" என்பது போல் அவளை தன் மனதிற்குள் பார்வையால் விழுங்கினான்.

"இல்ல...உ.... உங்க பெயர்..."

"ஓ... அதுவா" "ம்..."

யோசிப்பவன் போல் பாசாங்கு பண்ணிவிட்டு,

"உங்க பெயருடன் இரண்டு எழுத்துக்களைக் கூட்டினால் உங்க மிஸ்டரின் பெயர் வந்துவிடும்."

அவளை மீண்டும் ஆவல் கடந்த வியப்பிற்குள் ஆழ்த்திவிட்டுச் சென்றான் சுதாகர்.

அலுவலகம் சென்றவளுக்கு எந்த வேலையிலும் சீரான சிந்தனையைச் செலுத்த முடியவில்லை. அவனது குறும்பான பேச்சே கண்ணுக்குள் நிழலாடியது. அவனுடன் பேசிய அந்த நொடிப் பொழுதின் நினைவுகள்தான் எத்தனை சுகம்.

என் பெயருடன் இரண்டு எழுத்துச் சேர்த்துப் பார்க்கச் சொன்னாரே...' மனதிற்குள் பெயரை உச்சரிக்கத் தொடங்கினாள். 'சுதா... சுதாகர் ஓ... சுதாகரா இவர் பெயர்? தன் பெயரை சொல்வதற்கே இத்தனை சோடிப்பா.' அவன் குறும்புகளை எண்ணிச் சிரித்துக்கொண்டாள். அவனைப் பார்க்க வேண்டும் போல் மனம் துடித்தது.

தன் அலுவலகப் பெண்களின் சிரிப்பொலி கேட்கவே நினைவோட்டத்திலிருந்து விடுபட்டவளாய் அவள் செவிகள் துரிதமாயின.

"என்ன சாந்தி கற்பனையில் கனவு காண்கிறாய்"

"இல்லடி லதா... அந்த வைத்தியசாலை டாக்டர்..."

"ஓ... சுதாகரைப் பற்றிய கனவா"

"ஆமாடி சாந்தி! நானும் அந்த டாக்டர் சுதாகரை வளைக்கலாம் என்று பார்த்தால் மசியமாட்டேங்கிறாண்டி"

"போடி. நானே எத்தனை தடவை ரை பண்ணிக் களைச்சுப் போய் விட்டுட்டேன்" லதா தன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தவே சாந்தியும் நீண்டதொரு பெருமூச்சுடன் அமர்ந்துகொண்டாள்.

'டாக்டர் சுதா...கர் என் சுதாகரைப் பற்றிப் பேச உங்களுக்கு என்னடி உரிமை' கேட்க வேண்டும் போல் நா துடித்தது. தன்னையும் மீறி வந்த கோபத்தை அடக்கிக்கொண்டாள் சுதா. அலுவல கத்தில் அதற்கு மேல் இருக்கப் பிடிக்காதவளாய் லீவு போட்டுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள் சுதா.

'சேலையைக் கூட மாற்ற மனமின்றி தன் அறையைப் பூட்டிக்கொண்டு சிந்திக்கத் தொடங்கினாள். தாய் இல்லாத கவலை அப்போது அவள் நெஞ்சை மிகவும் வாட்டவே 'அம்மா இருந்திருந்தால் என் காதலை வெட்கமின்றி சொல்லியிருப்பேனே...' மனப் பாரம் குறைய தன் ஆதங்கத்தைச் சொல்லி சொல்லித் தனிமையில் அழுதுவிட்டு வேறு வழியின்றி தன் உணர்ச்சிகளைத் தந்தைக்குக் கடிதமாக எழுதினாள்.

சித்தியினதும், சகோதரர்களின் கண்களிலும் பட்டுவிடாமல் மெல்லமாக தந்தையின் அறைக் கதவைத் திறந்தாள். தந்தை கதிரவன் நிம்மதியான தூக்கத்தில் இருந்தார். தந்தையின் அருகில் சென்று அன்புடன் அவர் தலையை வருடிவிட்டவளாய்,

"அப்பா... அப்பா நான் உங்களிடம் ஒரு விஷயம் பேசணும். நீங்க கோபிக்கமாட்டீங்களே?"

அச்சம் கலந்த ஒருவித மன ஏக்கத்துடன் தந்தையின் பதிலுக்காகக் காத்திருந்தாள் சுதா. தந்தையிடம் எந்த அசைவும் இல்லாதிருக்கவே "அ...அப்பா... அப்பா! கண்ணத் திறந்து பாருங்கப்பா..." கெஞ்சிய குரலில் தந்தையைத் தடவினாள்.

"அப்பா..." வீடே அதிரும்படி சுதா கத்தவே, அவள் நெஞ்சத்து உணர்வுகள் காற்றலையுடன் போராடும் கடதாசியாக அவள் கைநழுவி பறந்தது.

தந்தையின் சடங்குகள் முடிந்து மீண்டும் அவள் வேலைக்குப் போகத் தயாரானபோதுதான் அந்த இடி அவள் தலையில் விழுந்தது.

"என்னடி கடதாசி இது. உன் அப்பனுக்கு எழுதினியா?" தன் உணர்ச்சிகள் அடங்கிய அந்தக் கடதாசியுடன் சித்தியும் பிரிஸ்டல் புகையை ஊதிவிட்டபடி மோகப் பார்வையுடன் தினேஸும், வேண்டாப் பார்வையுடன் சகோதரர்களும் அவளைச் சுற்றி நின்றபடி,

"என்னடி... எத்தனை நாளாக இந்த ஆட்டம் ஆடுறாய்? யாரடி அவன் சுதாகர். உன் ஆசை நாயகனோ..." நகைப்புக் கலந்த பார்வையுடன் பேசினாள் சித்தி சித்ரா.

"இங்க பாருங்க. என் வாழ்க்கை என் இஷ்டப்படிதான் நடக்கும். இப்ப நான் வேலைக்குப் போகணும். பாதையை விடுங்க" கோபத்துடன் தைரியமாகப் பேசினாள் சுதா.

"டேய் தினேஸ்! இவளை இப்படி விட்டால் சரி வராது. அந்த மஞ்சக் கயித்த இவள் கழுத்தில மூணு முடிச்சுப் போட்டிட்டு உன் இஷ்டப்படி ஏதாவது செய்"

மஞ்சள் கயிற்றுடன் அசடு வழிய அவளை விழுங்கும் மிருகம் போல் அவன் வரவே, ஒரு கணம் என்ன செய்வது எனத் தெரியாமல் ஆடிப் போய் நின்றாள் சுதா.

தைரியத்தை ஒருவாறு வர வழைத்துக் கொண்டு "வேண்டாம் தினேஸ். என்ன விட்டுவிடு... வேண்டாம்" அவன் அவளை நெருங்கிடவே சட்டென பாய்ந்து அவன் கையிலிருந்த தாலியைப் பறித்து விட்டாள் சுதா.

"இங்க பாரு உனக்கு வேணுமெண்டா இது வெறும் மஞ்சள் கயிறு. ஆனா... ஒரு பெண்ணுக்கு தன் மங்களகரமான வாழ்க்கைக்கு இதுதான்டா மாங்கல்யம்'

அவள் காலுக்குள் கதிரை தட்டுப்படவே அதனை வேகமாக அவன் மீது விட்டெறிந்துவிட்டு தாலியும் கையுமாக ஓடத் தொடங்கினாள்.

ஒரு வாரமாக வேலைக்கு சுதா வராததையும் கதிரவனின் இறப்பையும அறிந்துகொண்ட சுதாகர், சுதாவை நேரில் சென்று பார்ப்பதற்காக அவள் வீட்டு வாசலை நெருங்கவும், சுதா வேகமாக ஓடி வந்தாள்.

**சுபாஷினி குமாரசுவாமி, மன்னார்.**

அவளைப் பின் தொடர்ந்து சித்தியும் தினேஸும் துரத்திய விதமும் சுதாகருக்கு விடயத்தை விளங்கவைத்தது. பயத்தால் நடுங்கும் சுதாவை இறுக அணைத்துக் கொண்டு அவள் கையிலிருந்த மாங்கல்யத் தால் அவர்கள் முன்னிலையில் சுதாவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடவே எல்லோரும் ஆடிப்போய் நின்றார்கள். சித்தியினதும் தினேஸினதும் அதிகாரங்களும் அடக்கு முறைகளும் சுதாகரின் வலிமைக்கு மத்தியில் தோற்றுப் போய்விட்டன. நடந்தது கனவா, நனவா என்ற நிலையில் சுதாகரின் தோளில் ஆனந்தக் கண்ணீருடன் சாய்ந்து கொண்டாள் சுதா. அவளின் சுமைகள் அவனுக்குள் சுகங்களாக மாறிக் கொண்டன. தேடி வந்ததுதானே சொந்தம்!.

முற்றும்

# சொல்லாத காதல்

அகிலனின் மனது அலைமோதிக் கொண்டிருந்தது. ஒரு முடிவுக்கு வர அவன் மனம் இடங்கொடுக்காது போராடிக்கொண்டிருந்தது. ஆசையென்ன புதிரா? காதலென்ன விடுகதையா? பருவங்கள்தான் காதலின் தரகர்களா? அவன் மனம் புரியாத புதிரானது. அகிலன் A/L படிக்கிறான். அவன் வகுப்புத் தோழி விஜியின் மீதான காதல் ஒரு புறம்... அடுத்தது ஊரிலுள்ள சகோதர இனத் தோழியான சர்மிளா மீதான காதல் ஒருபுறம்... என்ன இரட்டைக் காதல் என்ற நினைவா? இரண்டுமே ஒருதலைக் காதல்.

விஜி வகுப்புத் தோழி. அவளே அவனுக்குள் வாழ்க்கைத் தோழியானாள். அவளது விழிகள், பார்வை, பேச்சு என்பன அவனுள் அவளை ஆழப் பதித்தது. அவள் இனிமையாகப் பாடும் பாட்டையே கேட்டுப் பட்டினி கிடந்த நாட்களுமுண்டு. விஜியின் முகத்தில் விழும் கூந்தலில் தன்னை மறந்ததுண்டு. அகிலன்... ஆனால், அவளோடு படிப்பைப் பற்றிப் பேசிய அகிலன் வேறு எதுவும் இதுவரை பேசவில்லை. பேச நினைத்துப் போய் பயத்தில் வாய் மூடி வந்ததுண்டு. அவன் காதலை அவள் மறுத்தால். இதுதான் அகிலன் நிலை. மற்றயது விஜி விரும்பினாலும் அகிலன் வீட்டார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், அவள் தாழ்த்தப்பட்ட சாதி என்பதால். காதல் சாதி பார்க்குமா? காதல் வந்தால் சாதி தேடுமா? அவன் மனம் விஜியால் போராடியது, காதலா? சாதியா? என்ற பட்டிமன்றத் தலைப்பில்.



மறுபுறம் ஊரிலுள்ள சிங்கள இனத் தோழியான சர்மிளா. அவள் தொட்டால் சிவக்கும் நிறத்துத் தேவதை. அவனோடு நட்பாகப் பேசினாள். ஆனால், பருவம் காதலை அவனுள் பூட்டியது. அவள் மீதும் காதல். அவனுக்காக அவள் கொடுத்த பரிசுகள் பல. ஆனால், காதலைப் பற்றிப் பேசவேயில்லை... அவளிடம் எப்படிக் காதலைச் சொல்லுவது. சிங்கள இனத் தோழிகள் சற்று சரளமாகப் பேசுபவர்கள். காதலைச் சொல்லி நட்புக் கலைந்தால்?

சரி அப்படித்தான் சர்மிளா அகிலனின் காதலை ஏற்றாள் என்றாலும், அகிலன் வீட்டார் சர்மிளா சிங்களத்தி என்பதால் அனுமதி தரமாட்டார்கள். என்ன செய்ய? சர்மிளாவின் அழகில் மயங்கிய அவனுக்கு முடிவு தெரியவில்லை. இங்கு இனமா? காதலா? என்ற கருத்துக் கணிப்பில் அகிலனின் மனம்...

இரண்டுமே ஒருதலைக் காதல். ஆனால், ஒளி தெரியும் காதல்... இருவருமே அகிலனுக்குப் பொருத்தமான ஜோடிகள்...

விஜி அவனது ஆட்டோகிராப்பில் எழுதிய வரிகள்

'நினைவுகள் நீங்காது  
நீ... நித்தமும்  
நினைவில் நிரந்தரமாக  
நிலைக்க வேண்டும்.  
யாருக்கோ ஆட்டோகிராப்  
போடுவதற்குப் பதிலாக  
என் பெயருக்கு  
ஆட்டோகிராப்பிட்டால்... நீ  
புரிந்தால் போதும்"

– விஜி –

சர்மிளாவின் வெசாக் வாழ்த்து அட்டை இப்படிக் கூறியது,

"மனித இதயங்களுள்  
சாதி பேதமில்லை  
மனதில் நிறைந்தவர்களுக்கு  
மதமும் பெரிதல்ல  
போதி மரத்தடியில் சில்  
எடுத்தாலும் சில  
பாவங்கள் கரைவதுமில்லை  
இத் தேசமதில் அமைதி பெற  
இனங்கள் ஒன்றிணைய வேண்டும்.  
சில இதயங்களின்  
உணர்வுகளை உணர்ந்து  
இணைய வேண்டும் இதயங்கள்  
வெசாக் பௌர்ணமி போல  
என் இதயமும் பிரகாசிக்க"

– சர்மிளா –

இரண்டு பக்கமும் தவித்த அகிலன் இறுதியில் அவசரகாலச் சட்டத்தினுள் கைதியானான்... இன்றுதான் விடுதலை பெற்று வந்தான். அவனது கனவுகள் சொல்லாத காதல், அவனது காதல் காரணம் தேசத்தின் அவசரகாலச் சட்டத்தால் அகிலனின் தேடல் சாதி, இனத்தை மீறித் தொடர்கிறது.

**– எஸ்.பி. பாலமுருகன் –**

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## கருணை

உலகினைப் பொறுத்தவரை மரண தண்டனை பெற்ற கொலையாளி கருணையற்றவன். கொலையாளியைப் பொறுத்தவரை இவ்வுலகம் கருணையற்றது. இவ்வாறு மனிதனுக்கு மனிதன் மனிதத் தன்மை அற்றிருப்பது, நீண்ட பலமான சங்கிலியாகத் தொடர்கிறது. இது, மனிதன் தன்னைப் போன்ற பிறிதொரு மனிதனுக்குத் தீர்வு வழங்குவதினதும், செயல்..., செயல் புரியாமை என்பவற்றுக்குச் செலுத்தப்பட வேண்டிய விலையைத் தானே நிச்சயித்துப் பிறர் மீது நிர்ப்பந்திப்பதினதும் கதையாகும். எக் காலத்திலும் அதற்கு ஒரு விலை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந் நாட்களில் கருணை காட்டுவது ஒழுக்கத்தின் பாலுள்ள பலவீனத்தின் அறிகுறி என உணரப்படுகின்றது. இது உண்மை அல்ல. மாறாக, இது மகத்தான பலம், நோக்கு மற்றும் விவேகத்தின் அறிகுறி ஆகும். கருணையாய் இருத்தல் என்பது வெளிப்படையாய்த் தோன்றும் நிகழ்வுகள், சான்றுகளுக்கு அப்பால் சென்று, வாழ்க்கையின் சந்தர்ப்பங்களை நுட்பதிட்பத்துடன் புரிந்துணர்வதாகும்.

கருணையாய் இருப்பது மிகவும் மேன்மையான உணர்வினைக் காட்டுகிறது. அது, சமானமல்லாத, இழிவான செயல்களுக்குப் பதிலாக "நான் புரிந்துகொண்டு மன்னிக்கிறேன்" என்று கூறுவதில், நாங்கள் பலமாக இருக்குமளவுக்கு மிக மேலானது.

"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

"கூட அவரிருந்தும் குளிர் நடுக்கம் கடும்பனியில் கூட அவரில்லை...!"



சாளரத்தினூடு தெரிந்த மழையே, வெளியே அதன் பிரமாண்டப் பொழிவைத் தெரிந்துகொள்ளப் போதுமாயிருந்தது. இருள் நேரக் கடலலையின் நுரை போல கீற்றாக அவ்வப்போது தெரிந்த மின்னல் ஒளியில் நீர்க் கம்பிகள் தோன்றி மறைவதைப் பார்த்தபடி படுத்திருந்தான் அஜிதன். மற்றப்படி இருள் அப்பியிருந்தது. இரைச்சல் அந்த இருளோடு கலந்த ஒன்று போல நிறைந்திருந்து.

அருகில் படுத்திருந்த மஹதியைப் பார்த்தான். அவனுக்கு எதிர்ப்புறம் முகத்தைத் திருப்பி ஒருக்களித்தவாறு படுத்திருந்தாள். தூங்கியிருப்பாள் போலத் தெரியவில்லை. அவளும் மழையைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள் போலும்!

சொந்தமானவனுக்கு அருகிலேயே தான் படுத்திருக்கிறேன் என்ற சுதந்திர உணர்வில் எழில்களின் தடைகள் எல்லாம் விலகிக் கிடந்ததைப் பொருட்படுத்தாத அலட்சியத்துடன் கிடந்தாள். மழையிருட்டைத் தோற்கடிக்கும் கூந்தல் முதுகை மறைத்திருந்தது. பளிங்குத் தடியாக நீண்டிருந்த தோளையும், முடிவில் அந்தக் கைகள் ஏறியிருந்த குன்றுப் பகுதியையும் பார்த்தான் அஜிதன்.

மெல்ல அவள் கரத்தின் மீது தன் கையை வைத்தான். அவள் உடல் சிறிது நடுங்கியது. ஆனால், திரும்பாமலே படுத்திருந்தாள்.

"உறங்கிவிட்டாயா?" என்று மெல்லக் கேட்டான்.

தான் பேசிய குரல் தனக்கே கேட்காமல் அமுங்கியபோதுதான் இரைச்சலினுள் இருப்பது உறைத்தது. அதுவரை மழை இரைச்சல் காதுகளுக்குப் பழகி ஓசையெதுவுமில்லாத உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

மீண்டும் குன்றிலிருந்த கையை அசக்கி, "உறக்கமா?" என்று சத்தமாகக் கேட்டான்.

மஹதி திரும்பினாள்.

கணைகளை வீசிக்கொண்டிருந்த இயந்திரப் பொறியொன்று, அஜிதனை நோக்கித் திரும்பியதை உணர்ந்தான்.

சுதந்திர உணர்வில் திளைத்திருந்த அழகுப் பிரதேசங்களின் அசைவுகள் அவனைக் 'கொல்லவா?' எனக் கேட்டன.

கோதிவிட்டு விரித்திருந்த அவள் கூந்தலிலிருந்து கிளம்பிய சுகந்தம், இந்திரஜித்தனின் பாணங்களாக மயக்கியது.

தடுமாறிய குரலில், "வெளியே ஒரே மழை!" என்றான்.

அவள் வெட்கம் தழுவும் விழிகளை அவன் விழிகளுடன் கலந்தாள்.

"ஆயிரம் குதிரைகளின் குளம்பொலிகள் போல வெளியே மழைச் சத்தம் கேட்கிறது. என் நெஞ்சுக்குள்ளும் குதிரைகள் குளம்பால் கீறுகின்றன..." என்று அவள் கண்களை விழுங்கியபடி சொன்னான் அஜிதன்.

மஹதியின் மலர்முகம் இன்னும் அதிகமாக மலர்ந்து அவள் இதழ்களில் இன்பப் புன்முறுவலொன்றும் படர்ந்தது.

"குதிரைகளைக் கட்டிப் போடுங்கள்... நெஞ்சைக் கீறிக்கொண்டு வெளியே வந்துவிடப் போகின்றன..." செடியில் இருந்த பனித்துளிகள் சிதறி ஏதோ ஓர் உலோகத்தில் சொட்டுவது போல மஹதி சிரித்தாள்.

"குதிரைகளை அடக்க நான் ஒன்றும் வண்டிச் சாரதியில்லையே..." அவள் கண்களிலிருந்து இறங்கி, சேலை விலகியிருந்த பிரதேசங்களுக்குச் சென்றன அஜிதனின் கண்கள்.

அவன் பார்வை செல்லுமிடங்களை அவதானித்தபடியே, "மனக் குதிரையை அடக்குபவனே உண்மையான சாரதி என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது" என்றாள். அவள் இதழ்களில் இகழ்ச்சி நகை ஓடியது.

"இருவர் சேர்ந்தால் இந்தக் குதிரைகளை அடக்கிவிடலாம்" என்றான் அஜிதன்.

"ஆசையைப் பார்!" என்று இமைகளைத் தாழ்த்திச் சொன்னாள் மஹதி.

"எங்கே பார்க்க வேண்டும்?" என்று அஜிதன் கேட்டபோது, வெளியே மின்னல் பளீரிட்டது. இடியை எதிர்பார்த்துக் காதுகளைப் பொத்தினாள் மஹதி. அவள் நினைத்ததை விடப் பயங்கரமாக முழங்கியது.

பாய்ந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, மார்புக்குள் முகம் புதைத்தாள். அச்சத்தில் துவண்டாள். துவண்ட அவள் பூவுடல் முழுவதுமாக அவனிடம் அடைக்கலமானது. பயத்தால் பதுங்கும் குழந்தை போலவும், பலமான கிளைகளில் தங்கும் சின்னஞ் சிறு பறவை போலவும் அவள், அவன் அடைக்கலத்தை நாடினாள். அடைக்கலம் தர ஆசைப்பட்டுத் துடித்த அவன் கரங்கள், கைதியை உள்ளடைத்துக் கொள்ளும் சிறைக் கதவுகள் போல அவளைச் சுற்றி வளைத்து அடக்கிக் கொண்டன.

"பயமாக இருக்கிறதா?" என்று இரகசியமாய்க் கேட்டான்.

" பயம் இடிக்கு இல்லை..." என்று அவன் மார்புக்குள் முனகினாள் மஹதி.

"அப்போ எனக்கா?" என்றவனுக்குத் தலையசைத்து மறுத்தாள். சில விநாடிகள் கழித்து, "இந்தப் பனிக்குளிரின் கடுமைக்கு!" என்று சொல்லி அவனை இறுகக் கட்டிக்கொண்டாள். அவள் கூந்தலுக்குள் துழாவியவாறே, "தூக்கம் வருகிறதா?" என்று கேட்டான்.

"இல்லை" என்று அவன் மார்புக்குள்ளேயே முகத்தை அசைத்தாள்.

"ஏன்?"

"தெரியவில்லை" என்று முணுமுணுத்தாள்.

"என்ன தெரியவில்லை?"

"குளிருக்குத் தூக்கம் வர மறுக்கிறது."

"தூக்கம் வராதது கஷ்டமாயில்லையா?"

"இல்லை... இப்படியே இருந்தால் எனக்குத் தூக்கமே வேண்டாம்!" என்று அஜிதனைத் தனக்குள் புதைத்தாள் மஹதி.

*

*

மஹதி முதுகு குலுங்கக் குமுறினாள். பிருந்தாவின் மடியில் குழைந்தாள். அவள் முதுகைத் தடவியவாறே "குளிர்கிறது. போர்த்திக் கொள்!" என்று சேலையால் அவளை மூடினாள் பிருந்தா.

மஹதியின் விம்மல் வெடித்து வழிந்தது. "அவர் கூட இருக்கும்போதே குளிருக்குத் தூங்காமல் விழித்திருப்பேன் என்று அவருக்குத் தெரியும். அவரில்லாமல் இந்தப் பனிக்குளிர் இரவுகளில் நான் எப்படி அல்லற்படுவேன் என்று தெரிந்திருந்தும் இரக்கமில்லாதவராக நடந்துகொள்கிறாரே..." அழுகை அவள் பேச்சைக் கரைத்தது.

"வந்துவிடுவார்..." என்பதற்கு மேல் என்ன சொல்வதென்று தெரியாமல் அவள் கன்னங்களிலிருந்த நீரைத் துடைத்தாள் பிருந்தா.

"மழைக்காலமான பிறகும் வீடு வந்து சேரும் எண்ணமில்லாமல் எங்கோ அலையும் அவர் அன்பே இல்லாதவர்... நான்தான் எவ்வளவு பாவியாகிவிட்டேன்..." என்று விம்மினாள் மஹதி.

*மழையமைந்து உற்ற மால்இருள்*
*நடுநாள் தாம்நம் உழையர் ஆகவும்*
*நாரும் பனிக் கடுமையின் நனிபெரிது*
*அழுங்கித் துஞ்சாம் ஆகலும் அறிவோர்*
*அன்பிலர் தோழிநம் காத லோரே.*
*( நற்றிணை : 281 : 7-11)*

## சிந்தியா பதில்கள்

★ **இந்தியாவின் ஆதரவைப் பெறும்படி தமிழ்க் கூட்டமைப்பினரைப் புலிகள் நெருக்குகிறார்களாமே...ஏன்?**

- எம்.எம். மிஹ்லார், குருநாகல்.

*அதுதானே... அப்படியென்றால் தமிழ் மக்கள் சார்பாகத் தமிழ் ஊடகங்கள் எதற்கு இந்தியாவைத் திட்டிக்கொண்டிருக்கின்றன! ஒருவேளை அவர்களுக்கு 'திட்டி, வழிக்குக் கொண்டுவரும்படி' உத்தரவு போயிருக்கிறதா!... ஒன்றும் புரியவில்லை சாமீ!*

★ **சிந்தியா! நம் நாட்டு அரசியல் சட்டப்படி பாராளுமன்றத்தைக் கூட்டும் பொறுப்பு யாருடையது?**

- மனோ கோபாலன், ஹப்புத்தளை.

*எல்லா நாட்டிலும் அது துப்புரவுப் பணியாளர்களினுடையதுதான்!*

★ **ரொனி டி மெல்லைப் போல் துரதிர்ஷ்டசாலி வேறு யாரும் இருப்பார்களா?**

- க. கமால்தீன், ஏறாவூர் - 3.

*அம்பாறையில் ஒருவர், தமிழ்க் காங்கிரஸில் ஒருவர், ரெலோவில் ஒருவர்... என்று தமிழ்க் கூட்டமைப்பிலேயே பலர் இருக்கிறார்களே!*

★ **நகைச்சுவையோடு வாசிக்க ஏதும் சொல்ல முடியுமா?**

- ச. வதனி, கண்டி.

*ஆம். கழுத்துச் சங்கிலியையோ, கைவளையலையோ கடித்துச் சுவைத்தபடியே இதை வாசிக்கவும்!*

★ **மகேஸ்வரனார் எங்கே?**

- செ. இலங்கநாதன், யாழ்ப்பாணம்.

*தரிசனம், இனி அடுத்த தேர்(தல்) திருவிழாவுக்கு!*

★ **சுட்டது வன்னிப் புலிகள் இல்லை என்று தெரிந்துவிட்டால் சிங்கள ஊடகவியலாளர்கள்கூட அந்தக் கொலையை வடபகுதி வரை சென்று ஆக்ரோசமாகக் கண்டிக்கிறார்கள். வன்னிப் புலிகள் செய்த கணக்கற்ற கொலைகளின்போது இந்த ஊடகவியலாளர்களும் மௌனமாயிருப்பது ஏன்?**

- எம். சுகிர்தராஜன், தெஹிவளை.

*தப்பு அவர்களில் அல்ல, உங்களிடம்தான்! எந்தக் கொலையைக் கண்டிக்க மக்கள் அதிக அளவு அணிதிரட்டப்படுகிறார்கள் என்று அந்த ஊடகவியலாளர்கள் பார்க்கிறார்கள். பெரிய கும்பலில் தங்களை இணைத்து அவர்களது முற்போக்குத் தன்மையை அவர்கள் பறைசாற்றுகிறார்கள். புலிகள் செய்யும் கொலைகளைக் கண்டித்து சிறு ஊர்வலம் போகக்கூட இன்னும் யாரும் தயாரில்லை. பாவம், சிங்கள ஊடகவியலாளர்கள் என்ன செய்வார்கள்!*

★ **'கில்லி' படத்தில் முற்பகுதியில் விஜய் வருவது போல் குறும்பும் குழப்படியுமாகவே கடைசிவரை தொடர்ந்திருந்தால் இரசித்திருக்க முடியாதா? ஏன் தனியொருவனாகப் பல நூறு பேரைப் பந்தாடும் வீரனாக வேண்டும்? நம்மைப் போன்ற சாதாரணர்களிடையேயும் ஹீரோக்கள் இருக்க முடியும் என்பதை ஏன் நாமே ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்?**

- வி. பருகாந்த், வவுனியா.

*அப்பிடிப் போடு... போடு!*

★ **நீங்கள் சொல்லிய பதிலுக்காக எப்போதாவது உதை வாங்கியிருக்கிறீர்களா?**

- அ. மங்களேஸ்வரன், கொழும்பு 05.

*கழுதைகளுக்குப் பதில் சொல்லியதில்லை!*

★ **நம் பத்திரிகைகள் சில, தமிழ் மக்கள் இந்திய எதிர்ப்பில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் விதமாக, மறைமுகமாகவோ நேரடியாகவோ இந்தியாவைத் திட்டுவதைத் தவறாமல் செய்து வருகின்றன. இந்தியாவின் பிழையை அதற்கு உணர்த்தி, அதை நமக்குச் சார்பாக மாற்றிவிடலாம் என்ற சிறுபிள்ளைத்தன முயற்சியையும் காண்பிக்கின்றன. சந்திரனைப் பார்த்துச் சத்தமிடுவது போல் சவால்கள் விட்டு, நம் 'அடுப்படி வீர உணர்வை'த் திருப்தி செய்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சீண்டல்களால் சிங்கள தேசத்தின் பக்கம் இந்தியாவைச் சாய வைப்பது தமிழர்களுக்கு மேலும் கஷ்டங்களை ஏற்படுத்துமே தவிர, குறைப்பதற்கு வாய்ப்புண்டா?**

- சி. கனகரத்தினம், சாவகச்சேரி.

*புத்தியைத்தான் வீரத்திற்கும் அசட்டுப் பெருமிதங்களுக்கும் அடகு வைத்து விட்டார்களே! இந்திய அரசைப் பூதம் போலக் காட்டி மிரட்டி, எங்களை அநாதை மூலைக்கு விரட்டிக்கொண்டிருக்கும் இவர்கள், இந்திய மக்களின் ஆதரவை நாம் இழந்த விதம் பற்றி மூச்சுக்கூட விடுவதில்லை. அந்த மக்கள் ஈழத் தமிழர்கள் சார்பாக தங்களுடைய அரசுக்கு எவ்வித அழுத்தமும் கொடுக்க விரும்பாத மனநிலைக்கு எப்படி வந்தார்கள் என்பதை நம்மை நோக்கிக் கேட்டுக்கொள்ள எந்தத் திராணியுமில்லாதவர்களிடம் நம்மை வாழவைக்கும் கருத்துக்களை எப்படி எதிர்பார்ப்பது!*

★ **சிந்தியா! தேர்தல் காலத்தில் வீடு தேடி வந்து வாக்குக் கேட்பவர்கள், ஏன் தேர்தல் முடிந்தபின் வருவதில்லை?**

- ஆர். குமரேசன், கினலன் எல்ல.

*இருந்தாலும் இவ்வளவு அப்பாவித்தனம் கூடாது குமரேசன்!*



★ **'சோப் போடுதல்' என்றால் என்ன சிந்தியா?**

- ம. ஸ்ரனிஸ்லோஸ், திருகோணமலை.

*கடந்த ஞாயிறு புலிகளின் அரசியல் பொறுப்பாளருக்கு 'மின்னல்'காரர் போட்டுக் கொண்டிருந்தாரே, பார்க்கவில்லையா!*

★ **எங்கே Boys ஹரிணி?**

- சல்மான் ஃபாரிஸ், காத்தான்குடி - 02.

*சின்னத்திரை விளம்பரத்திலாவது வந்துகொண்டிருக்கிறாரே, போதாதா!*

★ **துடுப்பாட்டச் சிகரம் லாராவின் நாற்சதம்?**

- பீ. விஷ்ணுகரன், ஆரையம்பதி - 01.

*இரட்டைச்சதம், முச்சதம், நாற் சதம்... அடுத்ததை ஐச்சதம் என்றா சொல்வது...? வேண்டாம் லாரா!*

★ **ஹெல உறுமய பிக்குகள் இரண்டு வாக்குகளை ஐ.தே.க.வுக்கு ஆதரவாக அளித்ததினால்... ளிமலை நிகழ்ச்சியில் கேள்வி தொடுத்தவரும், பதில் கொடுத்தவரும் புகழ்ந்து தள்ளினார்களே... ஹெல உறுமய தமிழ்த் தரப்புக்கு நண்பராகிவிட்டதா?**

- தஷ்னீக் எம். தௌபீக், காத்தான்குடி - 06.

*பொறுங்கள்! இப்போது எதைச் சொன்னால் அவர்களிடமிருந்து பாராட்டுக் கிடைக்கும் என்று வன்னிப் பக்கக் கருத்தை அறிந்துகொண்டுதான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். தற்சமயம் இந்தியாவைப் பாராட்ட உத்தரவு!*

★ **'அருள்' வந்ததே எப்படி?**

- அ.ல. அம்ஜத், பண்டாரவளை.

*திரும்பத் திரும்ப 'சாமி' வந்தால் சலிக்காதா!*

★ **சிந்தியா! மரபுக் கவிதைக்கும் புதுக் கவிதைக்கும் என்ன வித்தியாசம்?**

- ம. ருத்ரா, மாத்தளை.

*யாப்பிலக்கணத்தை விடுங்கள்! ஓசைக்காக - அலங்காரத்துக்காக மரபுக் கவிதை சுற்றி வளைக்கத் தயங்குவதில்லை. புதுக் கவிதையோ நேரடியாக விஷயத்திற்கு வந்துவிடுகிறது. "தழலில் குஞ்சென்ன, மூப்பென்ன?" என்று புதுக் கவிதையில் கேட்டு விடுவதை, "அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்..." என்று ஆரம்பித்துச் சுற்றி, விஷயத்திற்கு வந்து சேரும் மரபின் அழகு! இன்னொரு உதாரணம்: "சிங்கை என்னும் செல்வம் கொழிக்கும் நகரத்துப் பெண்களின் சிரிப்பு, முத்தைப் போல இருக்கும்" என்ற விஷயத்தை, எப்படி ஒரு புலவர் தன் சாமர்த்தியத்தைக் காட்ட சுற்றிவளைத்துச் சொல்கிறார் பாருங்கள்:*

*"தூது மதுரை துவரை கடையிடைமுன்*
*ஓதுகின்ற மூவெழுத்தும் ஒக்குமே - நீதி*
*செகராச சேகரன்வாழ் சிங்கையென்னும் செல்வ*
*நகர் ஆயிழையார் நகை."*

*'தூது' என்பதன் கடைசி எழுத்து, 'மதுரை'யின் நடு எழுத்து, 'துவரை'யின் முதல் எழுத்து - இந்த மூன்று 'து'க்களும் சேர்ந்து முத்து என்று நாம் விளங்கிக்கொள்ள வேண்டுமாம்!*

★ **தென்னிந்திய நடிகர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், இயக்குநர்களின் பிறந்த நாள்களை தேதி மறக்காமல் போட்டி போட்டுக் கொண்டாடி வருகின்றனவே நம் வானொலிகள்... வேறு நிகழ்ச்சிகள் எதையும் தர முடியாததுதானே காரணம்?**

- எம். மலர்விழி, கொழும்பு - 13.


*என்ன இவ்வளவு சாதாரணமாகக் கேட்டுவிட்டீர்கள்! புலிகளுக்கும் புகழ் பாடிக்கொண்டே, அவர்கள் மிக வெறுப்புடன் நிராகரிக்கும் தென்னிந்திய சினிமாக்காரர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் வாய் ஓயாமல் மக்கள் மனதில் பதிய வைத்துக் கொண்டிருப்பதென்றால் சும்மாவா! மறத் தமிழர்களுக்கேயுரிய சாகசமல்லவா இது!*

## விண்வெளியில் வெடித்துச்.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

அன்று கொலம்பியா கலத்தில் இருந்து கழன்று சென்ற ரிஜிபோர்ம் துண்டானது அதனது இறக்கையில் 850 மைல் வேகத்தில் மோதுண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகுதம். நைற்றஜன் வாயுவினால் சக்தியைப் பெறுகின்ற துப்பாக்கியொன்றை உபயோகித்த ஆய்வாளர்கள், 760 கிறாம் கொண்ட ரிஜிபோர்ம் துண்டை மைலுக்கு 850 மைல் வேகத்தில் எட்லெண்டிஸ் மீது செலுத்தினர்.

இவை அனைத்து நிகழ்வுகளையும் கண்டறிந்துகொள்வதற்காக ஊடகவியலாளர்களும், நாஸா நிறுவன நிபுணர்களும், விஞ்ஞானிகளும்



பாதுகாப்பான இடங்களில் அமர்ந்திருந்தனர். இவர்கள் அனைவரும் தாங்கள் கண்டவற்றில் ஆச்சரியமடைந்தனர். அனைவரின் முகங்களும் வியப்பில் ஆழ்ந்தன. மிகச் சிறு ரிஜிபோர்ம் துண்டு பட்ட இடம் 40 சென்ரி மீற்றர் அகலமான துவாரத்தை ஏற்படுத்தியதை அவர்கள் கண்டனர். அத்துடன் விபத்தின் மர்மம் துலங்கிவிட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கொலம்பியா பயணத்தின் பணிப்பாளர் போல் ஹிஸ், "நாங்கள் இதுவரை காலமாகத் தயாரித்ததில் மிகச் சிறந்த விண்கலத்தை ஒன்றரை இறாத்தல் நிறை கொண்ட ரிஜிபோர்ம் துண்டொன்றினால் துளைக்க இயலும் என நான் ஒருபோதுமே நினைத்துப் பார்க்கவில்லை" என்றார்.

# இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை

# மீள் பரிசீலனை செய்க!

**–ஈ.பி.டி.பி.**

"புலிகள் இயக்கம் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை மீள் பரிசீலனை செய்து, கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக முடக்கப்பட்டிருக்கும் அவசர நிவாரணப் பணிகளை இனியும் தாமதிக்காமல் தொடங்க இடமளிக்க வேண்டும்" என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இடைக்கால நிர்வாகம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையின் பூரண வாசகம் வருமாறு:

இலங்கை அரசாங்கத்துடன் இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பேச்சுக்களை ஆரம்பித்து நியாயமான தீர்வை விரைவாக நிலைநாட்டுவதற்குப் பதிலாக, இடைக்கால நிர்வாகம் எனத் தங்குமிடம் தேடி நிற்பது பொருத்தமானதல்ல. வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குச் சுயாட்சி அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகமே அவசியம் என்பது புலிகளின் நிலைப்பாடே தவிர பொது மக்களின் எதிர்பார்ப்பு அல்ல.

புலிகள் விரும்புவது போல வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபையை ஏற்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு முக்கிய காரணங்கள் பல உண்டு. அவற்றில் மூன்று காரணங்களை விளக்குவது பொருத்தமானது.

முதலாவது, இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு காணப்பட்டு அதனை முழுமையாக நிலைநிறுத்துவதற்கு இடையிலான காலமே இடைக்காலமாகக் கருதப்பட வேண்டும். அதாவது, எந்தவொரு இடைக்கால ஏற்பாடுகளும் இறுதித் தீர்வுடன் பின்னிப் பிணைந்த தீர்வாகவே இருக்க வேண்டும். மேலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக்கு ஏற்புடையதாகப் புலிகள் தமது கோரிக்கையை முன்வைக்கவில்லை. கனரக ஆயுதங்கள், கடற் படை மற்றும் வான் படைப் பிரிவுகளைக் கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு அமைப்பிடம் சட்டபூர்வமான அதிகாரத்தைக் கையளிக்கும் எந்த ஏற்பாடும் அரசியலமைப்பில் இல்லை. இதற்காக அரசியலமைப்பை மாற்ற வேண்டுமெனில் பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலமும், மக்களின் ஒப்புதலைக் கோரும் சர்வசன வாக்கெடுப்பும் அவசியமாகும். இவைகள் கிடைக்கப்பெறுமெனில் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை நிலைநாட்டிக் கொள்வதே விவேகமானதாக இருக்கும். இதேவேளை புலிகளின் தமிழரசுக் கட்சி மக்கள் ஆணையைப் பெற்றிருப்பதாகக் காட்டி புலிகள் இடைக்கால அதிகாரத்தைக் கோருவதும் ஏற்புடையது அல்ல. ஏனெனில் தமிழ்க் கூட்டமைப்புக்கு எப்படி வாக்குகள் போடப்பட்டன என்பதை எல்லோரும் நன்கறிவர். எனவே, புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கோரிக்கைக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டிருப்பதாகக் கூறுவது சுத்த அபத்தம்.

இரண்டவதாக, ஆயுதபாணிகளாக இருக்கும் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் அரசியல் பன்மைத்துவமும், ஜனநாயகமும், அடிப்படை மனித உரிமைகளும் எந்தளவுக்குப் பேணப்படும் என்பது கேள்விக்குரியது. கொழும்பில் புலிகளுக்காக வக்காலத்து வாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட, படையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் சுதந்திரமான முறையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாமலிருப்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு வாக்களித்ததாகக் கூறும் மக்களையே நேரில் சந்தித்து அவர்களது நாளாந்தப் பிரச்சினைகளைக் கவனிக்க முடியாமல் இருப்பது பகிரங்கமான இரகசியம். இந் நிலையில் தமிழ் பேசும் மக்கள் புலிகளின் அராஜக நிர்வாகத்துக்கு அடிபணிந்துதான் வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்க அரசாங்கத்துக்கோ சர்வதேச சமூகத்திற்கோ தார்மீக ரீதியில் எவ்வித உரிமையும் கிடையாது.

**தமிழ் பேசும் மக்கள் புலிகளின் அராஜக நிர்வாகத்துக்கு அடிபணிந்துதான் வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்க அரசாங்கத்துக்கோ சர்வதேச சமூகத்திற்கோ தார்மீக ரீதியில் எவ்வித உரிமையும் கிடையாது.**


மூன்றாவதாக, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசும் புலிகளும் இணங்கிக் கொண்ட ஒஸ்லோ பிரகடனத்தின் வரையறைகளுக்கு அப்பாற்பட்ட வகையிலேயே புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அம்சங்கள் காணப்படுகின்றன. இதனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி கூட, புலிகளின் கோரிக்கைக்கு இணங்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது. அத்துடன் புலிகளின் யோசனைகள் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறைமை என்பன தொடர்பில் நேரடிப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதும் சந்தேகமே.

எனவே, புலிகள், இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது கோரிக்கையை மீள் பரிசீலனை செய்து, கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக முடக்கி வைக்கப்பட்டிருக்கும் அவசர மனிதாபிமானப் பணிகளை இனியும் தாமதிக்காமல் தொடங்க இடம் அளிக்க வேண்டும். இந்த இலக்கை நோக்கிப் புலிகள் செயற்படுவதற்குத் தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் மக்களும் தமிழ்ப் புத்திஜீவிகளும் புலிகளுக்குத் தம்மாலான அழுத்தங்களைக் கொடுக்க முன்வர வேண்டும். இதை விடுத்து மீண்டும் பதற்றத்தையும் பகைமையையும் ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் தமிழ் மக்களுக்கு இழப்புக்களைத் தவிர எதுவும் எஞ்சப் போவதில்லை என்பது நிச்சயமானது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| முல்லைத்தீவு | நோர்வே |
| 06 | 13 |
| 07 | 05 |
| 1966 | 2004 |



### முருகப்பிள்ளை சிவகணேசன்

### (சிவா)

புவி தனில் புத்துணர்ச்சியுடன்
புதுமைகள் செய்து உயர்ந்து
புயல் வீசி சாய்ந்தது போல்
சடுதியில் மறைந்தீரே
புன்னகை பூத்த உன் முகம் மறக்குமோ
பூவுலகம் உள்ள வரை.

பிரிவால் துயருறும் அன்பு மனைவி, குழந்தை, சகோதரர்கள், அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: காந்தன் (ஒஸ்லோ)

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ் வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

### ஆதிக்கம் 3 : பிறந்த கிழமை திங்கள்

16 வயதுக் காலத்தில் உங்களுக்கு ஒரு கண்டம் ஏற்பட வாய்ப்புண்டு. 37 வயதுக் காலத்தில் ஒரு வீதி விபத்தில் மாட்டிக்கொள்வீர்கள். ஆனால், உங்கள் உயிர் உறுதியானதும் வலிமையுடையதும் ஆகும். அதனால் உயிருக்கு எந்த விதமான ஆபத்தும் நேரிடாது. வேலை செய்ய வேண்டும் என்றோ அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்றோ அக்கறை உங்களுக்கு இருக்காது. பிறரின் தூண்டுதல் காரணமாகவே வேலை செய்வீர்கள்.

உடலைக் கொஞ்சம் வருத்தி உழைக்க வேண்டிய நிலையில்தான் இருப்பீர்கள். இலகுவாகப் பணம் வந்து சேராது. 22 வயது வரைக்கும் தொழிலில் கஷ்டம் நேரிடும். வருமானம் தேறாது. 23 வயது தொடக்கத்தில்தான் உங்கள் தொழிலில் முன்னேற்றம் நிகழும். ஆரம்ப காலத்தில் பல தொழில் பல இடங்கள் என்ற நிலையில்தான் இருப்பீர்கள். ஆனால், 30 வயதுக் காலத்தில்தான் ஒரு நிலையான இடம், நிலையான தொழில் என்ற நிலை ஏற்படும். 52 வயது வரை உங்கள் வருமானத்திற்கு எந்த விதக் குறைவும் ஏற்படாது. 53ஆவது வயதில் கூடிய பணத்தொகை கைக்கு வரும். இந்தப் பணத் தொகைதான் உங்கள் வாழ்க்கையில் திடீர்த் திருப்பத்தை ஏற்படுத்தும். அதாவது வானொலி, தொலைக்காட்சி, மின் அழுத்தி போன்ற மின்சாரம் சம்பந்தமான தொழிலை ஆரம்பிப்பீர்கள். இதன் பின்னர் வருமானம் பெருகும்.

சொத்து சுகங்களோடு ஆயுள் வரை ஆனந்தமாக வாழ்வீர்கள்.

பிறந்த எண் 3ஆக இருப்பினும் உங்களுக்கான அதிர்ஷ்ட இலக்கம் 6 என்பது. ஆகவே, மாதத்தில் வருகின்ற 6, 15, 24 ஆகிய திகதிகளில் உங்கள் காரியங்களை வைத்துக்கொள்ளுங்கள். எந்த ஒரு நல்ல காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட திகதிகள் வியாழக்கிழமையில் வருமாக இருந்தால் வெற்றியும் சிறப்பும் உங்களுக்குக் கிடைக்கும். வெளிறிய துணியில் கோடு போட்ட ஷேர்ட் அணிவது உங்களுக்கு அதிர்ஷ்டமானது. கைக்குட்டையும் இதே நிறத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் வசிக்கும் வீட்டு இலகத்தையும் அதிர்ஷ்டமாக மாற்ற வேண்டுமாக இருந்தால் 6, 15, 24, 33, 42, 51, 60, 69, 78, 87, 96 ஆகிய இலக்கங்களில் ஒன்றாக அமைத்துக்கொள்ளுங்கள்.

உதாரணமாக, நேர்முகப் பரீட்சைக்கு வெளியூர் செல்கின்றீர்களா? உங்கள் பயணச் சீட்டின் இலக்கங்களைக் கூட்டிப் பாருங்கள்; 6 வருகிறதா? வெற்றிதான்.

ஆகவே, பிறப்பெண் 3ஐயும் பிறந்த கிழமையான திங்கட்கிழமையினையும் கொண்ட உங்களுக்கு வாழ்வில் சகல யோகங்களும் சுக போகங்களும் கிடைக்க என் ஆசீர்வாதம்.

முக்கனிபோலெண் மூன்று திங்கள்
இது உதிப்பதென்பது எக்காலத்திலும்
இனிதென்று முக்காலமும் உணர்ந்த
சாமி சான்று.

*(அடுத்து செவ்வாய்கிழமை பிறந்தவர்களைப் பார்ப்போம்)*

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.





# மாஜிக் தந்திரங்கள்

## சிகரெட்டில் நோட்டு வருதல்

எந்த ஒரு சிகரெட்டிலாவது ஒரு சிகரெட் வாங்கி வந்து, அதிலுள்ள புகையிலையை மெதுமெதுவாக வெளியே எடுத்துவிட்டு, புதிய பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, அதை சிறிய அளவில் மெல்லியதாகச் சுருட்டி, காலியான சிகரெட்டின் நடுப் பாகம் வரை செலுத்தி, இரண்டு பக்கமும் காலியாக உள்ள பகுதியில் அதில் எடுத்த புகையிலையைச் செலுத்தி, சிகரெட் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பிக்குமுன் இதை மேசை மேல் வைத்துவிட வேண்டும். காட்சி



நடத்துகிறவர் ஒரு புது நோட்டை பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, மந்திரப் பெட்டியையும் கையில் எடுத்துக்கொண்டு மேடைக்கு வந்து மந்திரப் பெட்டியை ஒரு ஸ்ரூலின் மேல் வைத்துவிட்டு பாக்கெட்டிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்து, அதை சபையோரிடம் காண்பித்து யாரிடமாவது கொடுத்து, மந்திரப் பெட்டியில் வைக்கும்படி செய்து பெட்டியை மூடி மேடைக்கு வந்து, பெட்டியை மேல் கீழாக மாற்றி வைத்துவிட வேண்டும். அதன் மேல் ஒரு கறுப்புக் கைக்குட்டையை விரித்து மூடிவிட்டு, யாரிடமாவது ஒரு சிகரெட் இருக்கிறதா? என்று கேட்டு ஒரு சிகரெட்டை வாங்கிவந்து அதை மேசையின் மேல் வைத்துவிட்டு ஒரு ஸ்ரூலைக் கொண்டுவந்து மந்திரப் பெட்டி வைக்கப்பட்ட ஸ்ரூலுக்கு சற்றுத் தள்ளிப்போட்டு மேலே கறுப்புக் கைக்குட்டையை விரித்து, மேசை அருகில் போய் சபையிலுள்ளவரிடம் வாங்கிய சிகரெட்டை எடுக்காமல் உள்ளே நோட்டு வைக்கப்பட்ட சிகரெட்டை எடுத்து வந்து கறுப்புக் கைக்குட்டையின் மேல் வைத்து, மற்றொரு கறுப்புக் கைக்குட்டையினால் மூடிவிட்டு, மந்திரப் பெட்டிக்கும், சிகரெட்டுக்கும் மந்திரம் போட்டு, பெட்டியைத் திறந்து அதில் நோட்டு இல்லை என்பதை சபையோருக்குக் காண்பித்துவிட்டு, பெட்டியை வைத்துவிட்டு கைக்குட்டையை எடுத்துவிட்டு சிகரெட்டை எடுத்து இரண்டாக உடைத்து பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் காண்பிக்க, சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

## கிளாஸில் காசு போடுதல்

மேடையின் நடுவில் போட்டுள்ள மேசைக்கு முன் ஒரு கிளாஸை வைத்து மேடையை விட்டு கீழே இறங்கி ஒவ்வொரு காசாக எறிந்தால் அது தவறாமல் கிளாஸில் விழ வேண்டும். பத்துப் பத்துக் காசுகளை எறிந்து அந்தப் பத்துக் காசுகளும் கிளாஸில் விழுந்ததாக எடுத்துக் காட்ட வேண்டும்.

இந்தக் காட்சியை நடத்த ஒரு வாயகன்ற உலோக பேஸின் ஒன்றை மேடையின் கடைசிக் கறுப்புத் திரைக்கு முன் கீழே வைத்துவிட வேண்டும். பத்துக் காசை விட சற்று கனமான 10 இரும்பு வாஷர்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். உதவியாளை பரணில் ஏறச் சொல்லி, பேசின் வைத்திருக்கும் இடத்திற்கு நேராக ஒரு துளையிடச்செய்து பத்து இரும்பு வாஷரையும் ஒவ்வொன்றாக சரியாகப் பேசினில் விழச் செய்துகொள்ள வேண்டும். மேலே இருந்து பேசினில் விழும் வாஷர் 'டங்' என்ற சத்தத்துடன் விழ வேண்டும். அந்தச் சத்தம் சபையோருக்கும் கேட்க வேண்டும். அந்த அளவில் வேலை செய்து ஒன்றுக்குப் பலமுறை இந்த வேலையைச் செய்து சரியாக வருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

20 பத்துக் காசுகள் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதைப் பத்துப் பத்துக் காசுகளாக அடுக்கி, ஒரு பத்துக் காசு அடுக்கை மந்திரக் கோலுடன் உள்ளங்கையில் அடக்கிக்கொள்ள வேண்டும். மற்றொரு பத்துக் காசு அடுக்கை சட்டைப் பையில் போட்டுக்கொள்ள வேண்டும்.

மேசைக்குமுன் ஒரு ஸ்ரூலைப் போட்டு, அதில் ஒரு கறுப்புக் கைக்குட்டையை விரித்து அதன் மேல் ஒரு கிளாஸை வைத்துவிட வேண்டும்.


காட்சி நடத்துகிறவர் மேடைக்கு வந்து கிளாஸை எடுத்து சபையோரிடம் காண்பித்துவிட்டு கிளாஸை அதனிடத்தில் வைக்கப்போகும்பொழுது மந்திரக் கோலுடன் மறைத்து வைத்திருக்கும் பத்து பத்துக் காசு அடுக்கை சத்தப்படாமல் கிளாஸில் போட்டு வைத்துவிட வேண்டும்.

பிறகு ஜேபியிலுள்ள 10 பத்து காசுகளை எடுத்து சபையோரிடம் காண்பித்து மேடையைவிட்டுக் கீழே இறங்கிக் கையில் பத்துக் காசை எடுத்து மேசையின் முன் வைக்கப்பட்டிருக்கும் கிளாஸில் விழும்படி தூக்கிப் போட வேண்டும். இந்தச் சமயம் 'ஒன்' என்று சத்தமாகக் கூறிக் கொண்டே, காசை எறிய வேண்டும். அதே நேரத்தில் பரணில் உள்ள உதவியாள் ஒரு வாஷரை பேசினில் போட்டு சத்தம் உண்டாக்க வேண்டும். இதைக் காணும் சபையோர் எறிந்த காசு கிளாஸில்தான் விழுந்திருக்கிறது என்று நினைப்பார்கள். ஒவ்வொரு முறையும் காசு எறியும்போது 'டு த்ரீ - .'.போர்' என்று குரல் கொடுத்து எறிய வேண்டும். அப்போதுதான் பரணிலிருக்கும் உதவியாள் குரலைக் கேட்டவுடன் வாஷரை பேசினில் போட்டு ஒலி உண்டாக்க வசதியாக இருக்கும். பத்துக் காசுகளையும் மேடையை நோக்கி எறிந்த பின், காட்சி நடத்துகிறவர் மேடைக்குச் சென்று கொட்டிக் காண்பிக்க வேண்டும். இதைக் கண்ட சபையோர் எப்படி குறி தவறாமல் காசுகளை கிளாஸில் விழச் செய்திருக்கிறார் என்று ஆச்சரியப்படுவார்கள்.

குறிப்பு :- இந்த வேலையைப் புதிதாகச் செய்பவர்கள் காட்சிக்கு முன் பலமுறை இந்த வேலையைச் செய்து பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். காசை எறியும்பொழுது அது விழும் சத்தம் சரியாக இருக்க வேண்டும். சத்தம் முன் பின்னாக இருந்தால் சபையோர் சந்தேகப்படுவார்கள். எனவே, இந்தக் காட்சியைக் கவனத்தோடு செய்ய வேண்டும்.

## குவளையில் போட்ட ரூபாய் மறைந்து போதல்

இதற்குத் தனிப்பட்ட முறையில் ஒரு தகரக் குழாய் தயாரிக்க வேண்டும். இது ஒரு படியைப் போல இருக்க வேண்டும். சுமார் 15 செ.மீ. உயரம், 9 செ.மீற்றர் குறுக்களவுள்ள படி போன்ற ஒரு குழாய் தயாரித்து, அதன் உள் பக்கமாக புனலின் அரைப்பாகம் போலச் செய்து அதைக் குழாயின் விளிம்பிலிருந்து இரண்டு சென்ரி மீற்றர் தள்ளி இதை மட்டமாக வைத்து ஒட்ட வேண்டும். இதை அரைப் புனல் பாகத்தின் அகலமான பகுதி இருக்கும் பக்கம் இந்தக் குழாயில் மேல் பக்க வாயை வட்டமான தகடு வைத்து ஒட்டி விட வேண்டும். இப்போது குழாயினுள் ஒரு பக்க வாய் திறந்திருக்கும்.



(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

வ... வ... ணக்...கமுங்கோ. அது வந்துங்கோ கொஞ்ச நாளா நடுக்கமுங்கோ. போன வா... வா... வா... வாரம்தான் நான் பத்திரிகையாளரைப் பே... பே... பே..பேட்டி கண்டு எழுதினனான். அதுக்கிடையில ஒரு பத்திரிகையாளரைப் போ... போ... போ... போட்டிட்டாங்களுங்கோ. அதுதான் நான் கதைக்க முன்னம் நாக்கு தடுக்குது நா... நா... நா... நாக்குங்கோ!

என்ன மோசமான உலகம் பாத்தியளோ! பேனா முனைக்கு முன்னால எதுவும் நிக்காது எண்டு வீணாப் புழுகித் தள்ளிப் போட்டம் பத்திரிகையாளர்கள் நாங்கள். பேனா என்ன 'புள்ளட் புறூப் ஜக்கட்டே' எங்களைப் பாதுகாக்க.

பாவம் அந்தாள். யாரோ குடுத்த தெம்பில மூச்சைப் பிடிச்சுக்கொண்டு எழுதியிருக்கிறார். யார் கண்டது இப்பிடி ஒண்டு நினைக்க இன்னொண்டு நடக்குமெண்டு. இந்தப் பத்திரிகயாளர்களை இப்பிடி மௌனிக்க வச்சுக்கொண்டு போனால் ஒரு காலத்தில பிளாங் பேப்பர்தான் பத்திரிகையாக வெளிவருமுங்கோ. சனநாயகம் எண்டு சொல்லுறாங்களே! அது என்னவெண்டால் பாருங்கோ 'நான் உன்ர கருத்துக்கு முற்று முழுசா எதிரானவன். ஆனால், நீ உன்ர கருத்தை சுதந்திரமாச் சொல்லுறதுக்கு உனக்குள்ள உரிமையக் காப்பாத்திறதுக்காக நான் என்ர உயிரையும் குடுத்துப் போராடுவேன்' எண்டு ஒரு அறிஞர் சொல்லியிருந்தாருங்கோ. அதுதான் சனநாயகமுங்கோ.

அதாவது பாருங்கோ! ஒவ்வொருத்தன் சொல்லிறதும் மற்றவனுக்குப் பிழையாத்தான் தெரியும். அதால எவரும் தான் சொன்னது மட்டும்தான் சரியெண்டு அடம்பிடிக்க ஏலாது. இதுக்கு ஒரேயொரு வழி, ஒவ்வொருத்தரும் தாங்கள் சொல்லிறதைச் சுதந்திரமாச் சொல்ல விடுறதுதான். சனம், பிடிச்ச கருத்தை தாங்களாத் தெரிவுசெய்துகொள்ளும். அதை விட்டிட்டு எதிர்க் கருத்துச் சொல்லிறவங்களை வாய் மூடச் செய்துகொண்டு போனா, மற்றப் பக்கத்தாலையும் அதையே செய்யிறதுக்குத் தான் முனைப்புக் கிளம்பும். இப்பிடி ரெண்டு பக்கத்தாலையும் ஒருத்தற்ர வாயை ஒருத்தர் மூட வெளிக்கிட்டா கடைசியா யாரும் தங்களுக்குச் சரியெண்டு பட்டதை எழுத ஏலாத நிலைதான் வரும். ரெண்டு பேரும் ஏற்கெனவே இங்க அந்த நிலைக்குக் கிட்ட வந்து சேந்திட்டம் எண்டுதான் நினைக்கிறன்.

என்ன... ஒரு சுவாரசியமும் இல்லாமல் லெக்சர் அடிச்சுக்கொண்டு நிக்கிறன் எண்டு பாக்கிறியளோ? எப்பிடியுங்கோ சுவாரசியம் வரும் இந்த மூடில.?

"பாம்பு வந்து கடிக்கையில
பாவி உடல் துடிக்கயில
யார் முகத்தில் பொங்கி வரும் சிரிப்பு
இது மேலிடத்தில் இனிப்பு.
கீழிடத்தில் கசப்பு.
பட்டினத்தார் கையிலுள்ள கரும்பு."

எண்டு ராஜபார்ட் ரங்கதுரையில சிவாஜி பாடின பாட்டுப் போலதான் இருக்குது நிலைமை. "எல்லாம் அவன் கையில" எண்டதையும் தாண்டி. "அவன் கையிலையும் இல்லை" எண்டாயிட்டுது நிலைமை.

சரி வாசகரெண்டு வந்து வாய்ச்சிட்டியள். எதையெண்டாலும் நான் எழுதத்தானே வேணும். இப்பத்தைக் காலத்தில எழுத்தாளரராய் இருக்க விரும்பிறவயளுக்கு ஒரு சின்ன அட்வைஸ்.

அதாவது பாருங்கோ, நீங்கள் எதையெண்டாலும் எழுதிறதாய் இருந்தா, இப்பத்தைய சூழ்நிலையில உயிருள்ள பொருட்களைப் பற்றி எழுதிறதை முற்றுமுழுதாத் தவிர்க்க வேணும். ஏதாவது சடப் பொருட்களைப் பற்றி ஏதோ ஒரு கதிரையையோ, மேசையையோ, மரத்தையோ, மலையையோ பற்றி எழுதிக்கொண்டிருந்திட்டியள் எண்டால் பிரச்சினையில்லை. நாய், பூனையைப் பற்றிக் கூட எழுத வேண்டாம். எக்கணம் அதுகளும் ஒரு இரும்புத் துண்டைத் தூக்கிக்கொண்டு வந்திட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை. மனிசரோட பழகிப் பழகி அதுகளுக்கும் இப்ப ஆயுதக் கலாசாரம் அத்துப்படி!

நீங்கள் எழுத வேணுமெண்டால் இயற்கையைப் பற்றி எழுதுங்கோ. செவ்வாய்க் கிரகத்தில் நீர் இருக்குதோ வெண்டு காரசாரமாய் விவாதிச்சு எழுதுங்கோ. ஆனால் தயவுசெய்து இங்க சனநாயகம் இருக்குதோவெண்டு தப்பித் தவறி ஒரு சொல்லு எழுதிப் போடாதேயுங்கோ.

"நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே!" எண்டு நக்கீரன் சொன்னதை நம்பி நீங்கள் கண்ணை மூடிக்கொள்ள வழி தேடிப் போடாதேயுங்கோ. அண்டைக்குச் சிவன் காட்டினது நெற்றிக்கண். சுட்டாலும் குளத்துக்க குதிச்செண்டாலும் நக்கீரன் தப்பிக்கொள்ளுவார். இப்பவெண்டால் நெத்தியில "Gun" அப்பீலில்லை. எவன்ர பாட்டில என்ன பிழையிருந்தாலென்ன உங்கட பாட்டில இருந்திட்டாப் பொல்லாப்பில்லை. சொற் பிழை பொருட் பிழை பாத்தா, உயிர்ப் பிழை நேர்ந்திடும் கவனம்! கடைசியா ஒண்டு, ஏன் நீங்கள் எழுதிறதையே விட்டிட்டுக் கழுதை மேச்சால் பெட்டராய்த் தோணேல்லையோ!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(13.06.2004 தொடங்கி 19.06.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், புதன், வெள்ளி, மிதுனம் - சனி, கர்க்கடகம் - செவ்வாய், சிங்கம் - வியாழன், துலாம் - கேது, மேடம் - இராகு

சந்திரன் மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை பிரிவு, பணக் கஷ்டம், வீண் மனக் கவலை, உறவினர் உதவி, குடும்பச் சிக்கல், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் சிறப்பு, காரியானுகூலம், உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி, அன்னியர் நட்பு, குடும்ப மேன்மை, செலவு மிகுதி, உத்தியோக மாற்றம், பிரயாண மிகுதி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நிலை கலக்கம், காரியானுகூலம், வீண் குறை கேட்டல், குடும்பச் செலவு, உத்தியோக மேன்மை, பெரியோர் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் பலிதம், உயர்ந்த நிலை, செலவு மிகுதி, குடும்ப கலக்கம், பிள்ளைகளால் தொல்லை, உத்தியோக மேன்மை, பெரியோர் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிக்கல், இடமாற்றம், பணச் செலவு, அன்னியர் உதவி, மன மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம, வெளியிடவாசம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மந்தம், பண விரயம், மறைமுக எதிர்ப்பு, குடும்ப நன்மை, செலவு அதிகம், உத்தியோக மாற்றம், பெரியோர் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் கலக்கம், பணியாளர் தொல்லை, அன்னியர் சகவாசம், குடும்ப மகிழ்ச்சி, வெளியிடவாசம், உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம் :- 04.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை, உத்தியோக முயற்சி, செலவு மிகுதி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் சிறப்பு, அன்னியர் சகவாசம், செலவு மிகுதி, குடும்ப நன்மை, உத்தியோக மாற்றம், மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மாற்றம், பண விரயம், உறவினர் உதவி, குடும்ப நன்மை, காரியானுகூலம், உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.


**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் உயர்ச்சி, பண வரவு, கௌரவம், பெரியோர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி, உறவினரால் தொல்லை, உத்தியோக மாற்றம், வீண் கலக்கம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

## அருள் ஞான ஜோதிடம்



சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர் ஜோதிட பக்குவ திலகம் டாக்டர் பீ.கே. சாமி ஐயா. நடந்தது, நடக்கப் போவது, நடக்க விருப்பது திட்டவட்டமான திகதி, மணிக் கணக்குடன் தெரிந்துகொள்ள என்னைச் சந்திக்கவும்.

ஜோதிட தத்துவ ஞானி
Prof. Dr. P. K. SAMY (J.D.G.A.N), J.P.
162, Kotahena Street, Colombo - 13.
T.P - 2342463, 2470615, 2431137


மலேசியாவில் பெராக் பகுதியைச் சேர்ந்த இபோ எனும் இடத்தில் நடைபெற்ற பரதநாட்டிய நிகழ்ச்சி பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. பத்தாயிரம் ஆணிகளால் வடிவமைக்கப்பட்ட அபாயகரமான மேடையில் இடைவிடாது 30 நிமிடங்கள் நடனமாடினார் இந்தியக் கலைஞர் எஸ்.மாதவி. வயது 25. கின்னஸ் சாதனைக்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், மலேசியாவில் உள்ளூர் சாதனைப் பதிவுகளில் கூடப் பதிவுசெய்ய முடியாமல் போனதையிட்டு மாதவி மிகவும் வேதனையுடன் இருக்கிறார்.


## நிபுணத்துவ கைரேகை



கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.



Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


# நல்வரவு


அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள மிகப் பெரிய கேட்போர் கூடம் இது. இதை 'ஒபேரா ஹவுஸ்' என செல்லமாக அழைப்பர். பார்வையாளர்கள் நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்காக இருக்கைகள் மட்டும் 3,800 உள்ளன. மேலும் 265 பேர் நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ முடியும். 137 மீற்றர் நீளமும் 70 மீற்றர் அகலமும் 45 மீற்றர் உயரமும் கொண்டது இந்த ஒபேரா ஹவுஸ். இது 1966ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கட்டப்பட்டது. இதன் பெறுமதி 4.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.





24 மணி நேரத்திற்குள் இசை அல்பம் ஒன்றினைத் தயாரித்து வழங்குவது என்பது நினைக்கும் அளவுக்கு முடிந்த காரியமல்ல. ஆனாலும், 24 மணி நேரத்திற்குள் சினிமா ஒன்று தயாரிக்க முடியுமென்று நம்மவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். படத்தின் பெயர் 'சுயம்வரம்' என்பது எல்லோருக்கும் தெரியும். இலண்டனின் எடின்பரோவிலுள்ள வெல்வட் ஜக்கெட் நிறுவனத்தாரே மேற்படி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். 2004ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு ஆரம்பித்த நிகழ்ச்சி 23 மணித்தியாலங்கள் 55 நிமிடங்களுக்குள்ளாகப் பாடல் வரிகளும் எழுதப்பட்டு, இசையமைத்தும் பாடி, எடிட்டிங் செய்து, அன்றே வெளியீடும் செய்யப்பட்டுள்ளது. இதுவரை உலகத்தில் மிகக் குறைந்த காலப்பகுதியில் தயாரித்து வெளியிடப்பட்ட 'அல்பம்' இதுதான்.

மேலே அதன் ஒத்திகையின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்.








அமெரிக்காவின் கிழக்குக் கலிபோர்னியா மாநிலத்தில் பெர்னாண்டோ காட்டுப் பகுதியில் இக் காட்டுத் தீ பரவியது. உலகின் என்றும் பசுமையான காடு என்றழைக்கப்படும் இவ்வகையான காடுகளில் தீ பரவுவது இது முதல் தடவையல்ல. ஒவ்வொரு தடவையும் அதிக சேதங்கள் காட்டுத் தீயினால் ஏற்படுகின்றன என்பதும் பழகிப் போயிற்று. மேற்படி காட்டுத் தீ பரவியபோது சுமார் 80 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையானதுடன், அருகில் உள்ள கிராமங்களுக்கும் தீ பரவியது. பல குதிரைப் பண்ணைகள் இதனால் அழிந்தன. சுமார் 100 குதிரைகள் மரணமடைந்திருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகில் காட்டு நிலப்பகுதியில் பெரும்பான்மையான பங்கினை அமெரிக்கா கொண்டுள்ளது என்பதும் மற்றுமொரு விடயம்.





# கொலம்பியா

அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம், நமது பூமியைக் கடந்து அண்டவெளியில் நடக்கக் கூடிய அத்தனை நிகழ்ச்சிகளையும் ஆராய்ந்து எதிர்காலத்தில் எவ்வகையான புறச்சூழல் மாற்றங்கள் நடைபெறக்கூடுமென அவ்வப்போது அதிர்ச்சி தரும் தகவல்களை வெளியீடுவதில் முன்னிலையில் உள்ளது. இந்திய பெண் விஞ்ஞானியான கல்பனா சாவ்லா உட்பட 7 விஞ்ஞானிகள் விண்வெளியில் உள்ள ஆய்வு மையத்துக்குச் சென்று ஆய்வுகளை முடித்துத் திரும்புகின்றபோது, இடைநடுவிலேயே கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியது. மேற்படி காட்சியைப் பார்த்தவர்களும் செய்தியாகக் கேட்டுத் தெரிந்தவர்களும் அதிர்ச்சியில் உறைந்து போயிருப்பார்கள் என்பது உண்மை. இது குறித்த சில விபரமான விடயங்களை உள்ளே 'தகவல் பெட்டி' பகுதியில் விரிவாகத் தந்திருக்கிறோம். 11ஆம் பக்கத்திற்கு வாருங்கள்.